# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 9 சனிக்கிழமை [25 07- 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்: 08


# மாகாணத் தேர்தல்களை ஒத்திவைக்க அரசு முடிவு

## அமைச்சர் பீரிஸ் நேற்றுத் தகவல்

கொழும்பு, ஜூலை 25

அடுத்த மாதக் கடைசியில் நடைபெறவேண்டிய — தென்னிலங்கையில் உள்ள — ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் ஒத்திப்போட அரசு முடிவு செய்திருக்கின்றது.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும், பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

நேற்று கொழும்பு வணிகர் சங்கத்தில் தாம் ஆற்றிய உரை ஒன்றிலேயே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தகவல் வெளியிட்டார்.

கொழும்பில் வணிகர் சங்கம் தனது தலைவர் மனோ செல்வநாதனுக்கு வழங்கிய பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பீரிஸ் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

மாகாண சபைத் தேர்தல்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக வடக்கு, கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் படையினரைத் திருப்பி அழைத்தால் யுத்த முனையில் இதுவரை படையினர் புரிந்த தியாகங்கள் அர்த்தமற்றதாகிவிடும்.

தற்போது யுத்தம் மிக முக்கியமான — திருப்புமுனைக் கட்டத்தில் உள்ளது. இந்நிலையில் படையினரைத் திருப்பி அழைக்க முடியாது.

எனவே மாகாண சபைத் தேர்தல்களைச் சொற்ப

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அருந்த மாதத்தில்

## யாழ்ப்பாணம், நல்லூருக்கு முழு நாளும் மின்சாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தற்போது காங்கேசனில் பொருத்தப்பட்டுவரும் பாரிய ஜெனரேட்டர்கள் மூலம் முதலில் யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு — அடுத்த மாத நடுப்பகுதிக்கு முன்பதாக—24 மணி நேரமும் மின் விநியோகம் செய்யப்படும்.

இலங்கை மின்சாரசபையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் இந்தத் தகவலை வெளியிட்டன.

ஒவ்வொன்றும் சுமார் இரு மெகா வாட்ஸ் வலுவுள்ள எட்டு பாரிய ஜெனரேட்டர்கள் காங்கேசனில் பொருத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

அவை இயங்கத் தொடங்கியதும் முதலில் யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளுக்கு மின்சார விநியோகம் 24மணி நேரமும் வழங்கப்படும். அது பின்னர் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தமிழரைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கை மீண்டும் கொழும்பில்!

### இரவிரவாகச் சுற்றிவளைப்பு தொடர்கிறது

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் நேற்று முன்தினம் ஆரம்பமான தேடுதல்கள் நேற்றிரவும் தொடர்ந்து இடம்பெற்றன என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் மொறட்டுவப் பகுதியைச் சுற்றிவளைத்து நடத்தப்பட்ட தேடுதலின்போது கைது செய்யப்பட்ட 300 பேர் மொறட்டுவைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை பேலியகொடை, மருதானைப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு நூறுக்கும் மேற்பட்ட தமிழர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றிரவு கொட்டாஞ்சேனைப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் இடம்பெற்றது. கைதானவர்கள் பற்றிய விபரம் தெரியவரவில்லை.

அதேநேரம் — வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி வரும் ரயில்கள் ராகம, மருதானை, கோட்டை ரயில் நிலையங்களில் வைத்து கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

இளம் வயதினர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## காவலில் உள்ள

## பத்திரிகையாளர்களை சந்திப்பதற்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 25

கைது செய்யப்பட்டுள்ள பத்திரிகையாளர்கள் இருவரையும் அவரது நெருங்கிய உறவினர்கள் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

'வீரகேசரி' பத்திரிகையின் கொழும்பு அலுவலகச்செய்தியாளர் எஸ். ஸ்ரீகஜன், அப்பத்திரிகையின் வவுனியாச் செய்தியாளர் பி. மாணிக்கவாசகம் ஆகியோர் கைது செய்யப்பட்டு கொழும்பு கோட்டை ஷநித்திய வீதியில் (முன்னையபாஸ்போர்ட் அலுவலகம்)உள்ள கட்டடத்தில் அமைந்திருக்கும் பயங்க

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா—அனுருத்த உறவு விரிசலடைகிறது?

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கும் இடையில் அண்மைக்காலமாக நிலவிவரும் கசப்பு உணர்வு இருவரிடையேயும் விரிசல் ஏற்படுவதையே காட்டுகிறது.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'ராவய' பத்திரிகை இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ யுத்தத்துக்கென மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவுகள் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பது என அரசு முடிவெடுத்துள்ளது. இதுவரை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து கட்டளைகளைப் பெற்று வந்த முப்படைத் தளபதிகள் இனிமேல் அதற்குப் பதிலாக நேரடியாக ஜனாதிபதியின் கட்டளைகளை ஏற்கும் நிலை இதன்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப்புதிய ஏற்பாடுகள் பிரதிப் பாது[illegible] காப்பு அமைச்சரின் செல்வாக்கை ஒடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எனக் கருதப்படுகிறது.

★ கடந்த 22 ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பங்குபற்றவில்லை. அதற்கு முதல்நாள் அவர் சீனாவுக்குச் சென்றுவிட்டார்.

★ கொழும்பில் நடக்கும் 'சார்க்' அமைப்புக்களின் தலைவர்கள் மாநாட்டு நிகழ்வுகளிலும் பிரதிப் பாதுகாப்பு [illegible]

## ஹெந்தல கடற்கரையில்

## "ஓஷன் கரியர்" கப்பல் தரை தட்டி நிற்கின்றது

கொழும்பு, ஜூலை 25

பருத்தித்துறையில் பொருள் இறக்கி முடித்து கொழும்பு திரும்பிய "ஓஷன் கரியர்" கப்பல் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கொழும்புக்கு அருகே ஹெந்தல கடற்கரையில் தரை தட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே பொருள்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இக் கப்பல் அண்மையில் பருத்தித்துறையில் பொருள் இறக்கி முடித்துக் கொழும்பு திரும்பியது.

பொருள் ஏற்றுவதற்காக கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே இக்கப்பல் நங்கூர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்குக்கான

## வெளிநாட்டு உதவிகள் மக்களை அடைவதில்லை

### நோர்வே தூதரிடம் முறையீடு

வவுனியா, ஜூலை 25

வடக்கு - கிழக்குப் பகுதி மக்களுக்கென வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவிகள் வடக்கு - கிழக்கு மக்களுக்கு உரிய முறையில் சென்றடைவதில்லை என்று நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிடம் வவுனியாவில் உள்ள மக்கள் தெரிவித்தனர்.

நோர்வே தூதுவர் வவுனி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் நேற்று இடம் பெற்ற லொறி — சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் சைக்கிளில் சென்றவரான நல்லூர் அரசடி வீதியைச் சேர்ந்த சிவராசா சசிகுமார் (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

யாழ். ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

# மரண அறிவித்தல்கள்

## க. சி. கயிலாசபிள்ளை

(உயரப்புலம், ஆனைக்கோட்டை)

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை கயிலாசபிள்ளை கொழும்பு வத்தளையில் 23.07.98 அன்று காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற குணபாலன், ஜெயபாலன் (சிவாஸ் ஸ்ருடியோ, மானிப்பாய்), தர்மபாலன் (France), பாலரதி (வத்தளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நளினி லங்காமணி (France), சிவாஜி (Credit Manager Singer Company Ltd, Colombo) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாரங்கன், விதுஷன், ஆரத்தி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 26-07-98 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இல. 33, கல்யாணி லேன், வத்தளை இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ஜெயபாலன்
(மகன்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(57826)

## பொன்னையா ஸ்ரீஅப்பாசாமி

மல்லாகம் பங்களா ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா ஸ்ரீஅப்பாசாமி 24-7-98 இல் மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சினி, ஸ்ரீராம், ஸ்ரீதேவன், ஸ்ரீராஜன், ஸ்ரீகரன், ஸ்ரீராகினியின் அன்புத் தந்தையும், திரு. பொ. சுவாமிநாதனின் தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-7-98) சனிக்கிழமை இல. 12/22, 2ஆம் குறுக்குத்தெரு, செல்வநாயகம் வீதி, மட்டக்களப்பில் நடைபெற்று பூதவுடல் மாலை 4.30 மணியளவில் மட்டக்களப்பு கல்வியங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
N. பகீரதன்

மெமோறியல் லேன்,
மானிப்பாய்.
(57847)

## அம்பலம் பொன்னு

(பொன்னி)

நெடுந்தீவு மேற்கு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அம்பலம் பொன்னு (பொன்னி) 24-07-1998 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அம்பலத்தின் அன்பு மனைவியும், முத்துக்குமாரு (ஒட்டன்குளம்), ஜெயரட்ணம் (கனடா), கனகம்மா (நெடுந்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசம்மா, கணபதிப்பிள்ளை, திருபதி ஜெயரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25-07-98) சனிக்கிழமை மாலை நெடுந்தீவில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. சுகந்தன்
(பேரன்)

(57852)

## சபாபதி வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை, 86, அரசடி வீதியைச் சேர்ந்தவரும், தற்பொழுது கொழும்பில் வசித்து வந்தவருமான சபாபதி வேலாயுதபிள்ளை அவர்கள் வியாழக்கிழமை இரவு கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சபாபதி, தங்கம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற செல்வமணியின் அன்புக் கணவரும், லவனேஸ்வரன், குசேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மா நாகலிங்கம், காலஞ்சென்ற திருமதி ஜெயலக்சுமி இராமநாதன், திருமதி புவனேஸ்வரி ரகுநாதன், சரோஜினி ஆகியோரின் அருமைச் சகோதரரும், கிருபகுமாரியின் அன்பு மாமனாரும், வைஷ்ணவி, ஐஸ்வர்யா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (26-07-98) மாலை பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. லவனேஸ்வரன்
வே. குசேந்திரன்
(மகன்மார்)

36, Fountain House Lane,
Off Deans Road,
Colombo - 10.
(T. P. 693934)
(57850)

## ★ யாழ். குடாநாட்டில்

# மிதிவெடிகள் அகற்றுவதில் தடங்கல்:

# ஐ. நா. நிபுணர் கொழும்பில் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். குடாவில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் குறித்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த ஐ. நா. நிபுணர் டேவிட் டெய்லர் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

தற்பொழுது கொழும்பு சென்றுள்ள அவர், யாழ். குடாநாட்டில் வெடிபொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் தமது அணியினருக்கு தொடர்பு சாதனங்களைப் பாவிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுப்பது குறித்தும், வெடிபொருள்கள் அகற்றும் கருவிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைப்பது குறித்தும் கொழும்பில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

யாழ். குடாவிலுள்ள வெடிப் பொருள்களை அகற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஐ. நா. அபிவிருத்தி நிறுவனம் எட்டு மோப்ப நாய்களையும், எட்டு வெடி பொருள்கள் அகற்றும் நிபுணர்களையும் இங்கு அனுப்புவதற்காக லண்டனில் தயார் நிலையில் வைத்திருக்கிறது.

இலங்கை அரசின் அசமந்தப் போக்கால் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (உ-5)

## வடக்கு - கிழக்கு மாகாணசபையில்

# ஓய்வின் பின் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிவோரை நீக்குவதற்கு முடிவு

திருகோணமலை, ஜூலை 25

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் அதிகாரிகள் இம் மாதத்துடன் வேலையில் இருந்து நீக்கப் படவிருக்கிறார்கள்.

இது தொடர்பான சுற்றறிக்கையை மாகாணசபை பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி சகல திணைக்களங்களின் தலைவர்களுக்கும் நேற்று முன்தினம் அனுப்பியுள்ளார்.

வேலையில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் ஒப்பந்த அடிப்படையில் 300 முதல் 400 பேர் வரை மாகாண சபையின் முக்கிய பதவிகளில் பணிபுரிகின்றனர்.

அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களை இம்மாத இறுதியுடன் வேலையில் இருந்து நீக்குமாறும்— மிக அத்தியாவசிய சேவைகளுக்குத் தேவையெனக் காணப்படுவோர் தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும்—

பிரதம செயலர் தமது சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார். (உ-3)

## பாலர் விளையாட்டுகள்

கோயிலாக்கண்டி செல்வா பாலர் பாடசாலை, கைதடி நாவற்குழி வசந்தி பாலர் பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த பாலர் விளையாட்டு விழா நாளை ஞாயிறு பிற்பகல் 2-30 மணிக்கு கைதடி நாவற்குழி முருகன் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் வ. பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டியில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

யாழ்ப்பாணம் கில்னர் மண்டபம் சென். பீற்றர்ஸ் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று காலை 9-30 மணி முதல் கில்னர் மண்டபத்தில் நடைபெறும்.

வண. சுரேஷ் அப்பாத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி டி. சுரேஷ் பரிசில்களை வழங்குவார்.

★ ★ ★

மானிப்பாய் கோயில்பற்று இந்துசமய விருத்திச்சங்கப் பாலர் பாடசாலையும், மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்க பாலர் பாடசாலையும் இணைந்து நடத்தும் விளையாட்டு விழா இன்று மாலை 2-30 மணிக்கு மானிப்பாய் பட்டினசபை மைதானத்தில் நடைபெற இருக்கின்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற உப-அதிபர் சொ. பாலகிருஷ்ணன் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றுவார். (உ-3)

(3 ஆம் பக்கம் பார்க்க)

## செயலிழப்பு

நல்லூர் சட்டநாதர்கோயிலுக்கு அருகில் இரு இடங்களில் புதைக்கப்பட்ட நிலையிலிருந்த இரு மிதிவெடிகள் ஐ. நா. வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர் டேவிட் டெய்லரால் கடந்த வாரம் அகற்றப்பட்டது.

இதேவேளை யாழ். றக்கா வீதியிலுள்ள வளவொன்றில் இருந்த இரு மோட்டார்ஷெல்களும் செயலிழக்கச் செய்யப்பட்டதாக ஐ. நா. அபிவிருத்தித்திட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)


### நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்.

அகல வெண் திரையில்

ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

சுப்பஸ்டார் ரஜனி
மீனா - செந்தில்,
வடிவேல் நடித்த

முத்து

(சினிமாஸ்கோப்)

காட்சிகள்:- 10-30, 2-30

(57845)

### ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த

இந்தியன்

தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4336)

### லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்றும் நாளையும்
முரளி, தேவயானி
பூந்தோட்டம்

திங்கள், செவ்வாய்
விஜய் நடித்த
ப்ரியமுடன்

[illegible] 10-30 2-30
(பழைய நேரம்)

Tele. No: 070 - 212223

(57502)

நல்லூர், வடமராட்சி

### "லயன்ஸ்" கழகங்களும் அரங்க செயற்பாட்டுக் குழுவும்

இணைந்து நடத்தும்

### பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

இன்று 25-07-98 (சனி) நடைபெற இருந்த திரு. றோய் அவர்களின் வணிகபுள்ளிவிபரவியற் கருத்துரை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். ஏனையபாடங்களின் கருத்தரங்குகள் முன்னர் அறிவிக்கப்பட்ட நேர அட்டவணைப்படி நடைபெறும்.

அரங்க செயற்பாட்டுக் குழு,
19, பழம் றோட், கந்தர்மடம்.

(57851)


## கண்ணீர் அஞ்சலி

கல்விப்பணியே கடவுட் பணியெனப் பணிசெய்து இறைவனடி சேர்ந்து கல்வியுலகிலும் புகழுடம்புடன் வாழ்ந்து மணம்வீசும் சிவதர்மவள்ளல்

### க. கனகராசா

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்கின்றோம்.

மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள்
கோட்டக்கல்வி பணிமனை ஊழியர்கள்,
உத்தியோகத்தர்கள்.

தென்மராட்சிக் கல்விக்கோட்டம்,
சாவகச்சேரி.
(57846)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு/வெளிநாட்டு தொலைபேசி

அழைப்புக்களை

- மிகக் குறைந்த செலவில் —
- எதுவித தாமதமுமின்றி —
- மிகவும் அமைதியான சூழ்நிலையில் —
- சனி, ஞாயிறு உட்பட [சனி, ஞாயிறு தினங்களில் சகாய கட்டணத்துடன்]

பெற நாடுங்கள்:

**துர்க்கா**
**தொலைபேசி நிலையம்**

86, செம்மாதெரு,
(ஸ்ரான்லி வீதி - வின்சர் தியேட்டர் வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் — மிகவும் சமீபத்தில்)
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 2292

சு. பொ. நடராசா
அதிபர்
அண்ணா தொழிலகம்
இணுவில்.

(57834)


## பிரார்த்திக்கின்றோம்

பழைமை பழைமைஎன்று பழைமை பாடி செழுமை தேடியும் சைவத்துக்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றியும்

எமது குழுவின் இறைபணிக்கு என்ஞான்றும் அளப்பரிய ஒத்துழைப்பினை தமது இறுதி மூச்சுவரை நல்கியும் சிவபதமடைந்த

சிவதர்ம வள்ளல்
**க. கனகராசா ஜே.பி.**

அவர்கள் எம் மக்களுக்கு ஆற்றிய தன்னலமற்ற சேவையை நன்றிப் பெருக்குடன்

நினைவு கூர்ந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


சைவசமய விவகாரக்குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/ 4372)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 – 03 – 1947



உதிர்வு 05 – 08 – 1997

அமரர்
**பொன்னுத்துரை யோகநாதன்**
(வர்த்தக முகாமையாளர்/பதில் பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.)

திதி: 25–7–1998

கன்னலும் தேனுமாகி
கவின் பெறு வடிவமாகி
மண்ணினில் வாழவந்து
மனைவியாய் என்னை ஏற்று
தண்ணீரில் தாமரைபோல்
தனயனையும், என்னையும் – தவிக்கவிட்டு
எங்குற்றீர், அப்பா!

நீங்கள் உடலால் பிரிந்தாலும், உங்கள் நினைவுகள் எங்கள் இதயத்தில் என்றும் அலையோடுகின்றன.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு.

யோ. ரதிகா
மனைவி
யோ. ரயோசன்
(மகன்)
குடும்பத்தினர்.

(57774)

## கண்காட்சி

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் நடத்தும் சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தின குழந்தைமையக் கல்வி முறைக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் பருத்தித்துறை ஆத்தியடியில் உள்ள பேரருட் பயிற்சி மண்டபத்தில் நடைபெறும்.

இக் கண்காட்சி ஆரம்ப தினத்தன்று நடைபெறும் சர்வதேசபோதைப் பொருள் எதிர்ப்பு தின விழாவுக்கு கரவெட்டி பிரதிக்கல்விப் பணிப்பாளர் வை. செல்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, பருத்தித்துறை சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை அதிபர் திருமதி சீதாதேவி சுப்பிரமணியம், கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி அதிபர் கி. தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (ஐ–173)

## முறைசாரா பரீட்சை முடிவுகள்

கல்வி வலயம் ஒன்றின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடந்த வருடம் நடத்தப்பட்ட முறைசாராக் கல்வி நெறியின் இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தாம் பயிற்சி பெற்ற பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு பரீட்சை முடிவுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

## பாலர் விளையாட்டு விழா

யாழ். பாலர்கல்விக்கழக நிர்வாகத்தில் இயங்கு இராமநாதன் வீதி ஞானக் குழந்தை இல்ல வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8–30 மணிக்கு பெரியபுலம் மகா வித்தியாலய மைதானத்தில் செல்வி கல்யாணி உமாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வர்த்தகத் துறைத் தலைவர் சு. வேதராசா பிரதம விருத்தினராக கலத்துகொள்வார் (ஐ–8)

★ ★ ★

பாலர்கல்விக்கழகத்தின் கீழ் இயங்கும் கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் மனோன்மணி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு பாலர்பாடசாலை ஆசிரியை செல்வி பெ. ஜெயந்தி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கொக்குவில் நாமகள் வித்தியாசாலை அதிபர் திரு. வே. திருநாவுக்கரசு கலந்து கொள்வார். (ஐ–30)

★ ★ ★

உரும்பராய் வடக்கு நவசக்தி சனசமூக நிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு நிலையத் தலைவர் வே. துரைசிங்கம் தலைமையில் ஆரம்பமாகும்.

யாழ். சர்வோதய அத்தியட்சகர் க. சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ–154)

★ ★ ★

கோப்பாய் பரி. கன்னி மரியாள் ஆலய பாலர் பாடசாலையின் வருடாந்தஇல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினராக [illegible] [illegible] கலந்து கொள்வார். (இ–3)

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படவிருந்த 'நல்லைக் குமரன் மலர் 98' இன் வெளியீட்டு விழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

மலரின் உருவாக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் இதனால் ஏற்பட்ட சிரமத்திற்காக மன்னிப்புக் கோருகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி/ 4371)


## பாவனையாளரின் கவனத்துக்கு

தற்பொழுது கம்பனி விலையில் எல்லாவகையான சிகரட்டுகளும் எல்லா விற்பனையாளரிடமும் பாவனையாளர் பெறலாம்.

| விலைப் பட்டியல் | | பக்கட் | தனி சிகரட் |
|---|---|---|---|
| Bristol | 20s | 90/- | 4/50 |
| Gold Leaf | 12s | 60/- | 5/- |
| Gold Leaf - Light | 20s | 100/- | 5/- |
| Gold Leaf | 20s | 100/- | 5/- |
| Capstan | 20s | | 2/- |

Distributors for:
Ceylon Tobacco Co. Ltd.
**MURUGAN STORES**
388, Hospital Street,
Jaffna.

(57839)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக பௌதிகத்துறை விரிவுரையாளர்
சி. சிவராசா அவர்களின் தாயார்

**திருமதி கமலாம்பிகை சிவபாதசுந்தரம்**


அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக விரிவுரையாள நண்பர்கள்,
விஞ்ஞான பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(57837)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 – 04 – 1932



உதிர்வு 25 – 07 – 1997

அமரர்
**பொன். இராஜகோபால்**
(முன்னாள் ஆசிரிய பீடப் பணிப்பாளர் — தினக்குரல், முன்னாள் ஆசிரியர் — வீரகேசரி வார வெளியீடு.)

தமிழும் தமிழர் தம் வாழ்வும் வளமும்
தளம்பிடா வளர்ச்சி கண்டோங்க
பத்திரிகை ஊடகத்தை உறுதியாய்ப் பிடித்து நின்று
பலவரிய சாதனைகள் புரிந்து சென்றீர்
உத்தமப் பெரியோய்! புன்னகை பொங்கிடும்
உங்கள் முகம் நித்தமும் எம் மனங்களில் ஒளிருதே
வித்தகனாய் நின்று பெருவாழ்வு கண்டீர் ஐய,
எத்தனை ஆண்டு சென்றும் வாழ்வீர்கள்
எம்முடனே!

மனைவி: லூமினா இராஜகோபால்
மகன்மார்: அருள்நாவலன், நிலாவளன்
மற்றும் குடும்பத்தினர்.

56/18, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4373)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உயர்ரக புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 101, பலாலிவீதி, (இலுப்பையடிச்சந்தி அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம், வாடிக்கையாளர்களுக்கு சலுகை உண்டு. (57819)

Chaly Motor Cycle, பழைய நீளமான வளை மரங்கள், பெரிய மரம், சிறியமரம். சலாகை என்பவை விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு இரத்தினசபாபதி, (நல்லூர் A. G. A Office முன்பாக) பலாலிறோட், திருநெல்வேலி வடக்கு. (57824)

புதியமொடல் Jincheng மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: K. Ramanan, கரன் ஜுவலர்ஸ் கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். [57790]

நல்ல நிலையிலுள்ள சாப்பாட்டு மேசை. தையல் மெசின், பிறிட்ஜ், றெசிங் ரேபிள், சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி. குமாரசாமி, நீதிராஜா வீதி, ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையடி, கொக்குவில் மேற்கு. [57817]

### தவறிவிட்டது

மல்லிகா சுப்பையா ஆகிய எனது கைச்சங்கிலி 21-07-98 (செவ்வாய்க்கிழமை) உடுவில் -மூளாய் வீதி ஊடாகச் சென்ற பஸ்ஸில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் உடுவில் மகளிர் கல்லூரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [57809]

### இறைச்சிக்கோழி

குறைந்த விலையில் புறொயிலர், கல்பேட் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஞாயிறு தினங்களில் அரைக் கோழியும் பெற்றுக்கொள்ளலாம். 54/2, சந்தணமாதா கோவில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம். (57820)

இறைச்சிக்கோழி (Broilers) கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 15, 6-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம் (சின்னக்கடைக்கு அண்மையில்) (57779)

### தேவை

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு உருத்திர வீணை தேவையாக இருப்பதால் விற்பனையாகவோ, அன்பளிப்பாகவோ தந்து உதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். வைத்திருப்பவர் விவரம் தரவும். தர்மகர்த்தா சி. சிவகுரு. [57669]

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் சச்சேரிக்கு அண்மையில் நல்ல சூழலில் நல்ல தண்ணீர் உள்ள மூன்று அறைகளைக் கொண்ட புதிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். 764, மே/பா, உதயன். [57833]

## காலமானார்

யாழ்ப்பாணம், ஜூலை 25 'ரெலோ' அமைப்பின் ஸ்தாபக தலைவர் தங்கத்துரையின் தாயார் திருமதி ஜானகி அம்மாள் நடராஜா (வயது 85) நேற்று முன்தினம் சென்னையில் காலமானார்.

அவரது இறுதிச்சடங்குகள் நேற்று சென்னையில் நடைபெற்றன. (ஐ)

### ஆங்கிலம் விசேடமாக

G A. Q paper Class O/L Distinction, Credit பெறு பேறுடைய (Spoken English) குறுகிய காலத்தில் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் மேற்குவீதி, திருநெல்வேலி. (57747)

### வகுப்புகள்

தமிழ், ஆங்கில, தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி வகுப்புக்கள் ஆவரங்காலில் ஆரம்பமாகவுள்ளன. விண்ணப்பங்களைத் தயாரித்து செ. சுந்தரமூர்த்தி, சந்தையடி ஒழுங்கை, ஆவரங்கால் எனும் முகவரிக்கு அனுப்பவும். ஆரம்பிக்கும் திகதி அவரவர்கட்கு விரைவில் அறிவிக்கப்படும். (57825)

## பழுதடைந்த தொலைக்காட்சிகள் (T.V) றேடியோ மணிக்கூடுகள்

பழுதடைந்த தொலைக்காட்சிப்பெட்டிகள் (TV), றேடியோ, மணிக்கூடு உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், பழுது பார்க்கப்படும். தெளிவாக T.V பார்க்க பழைய புதிய அன்ரனாக்கள் பொருத்தப்படும். ஒரிரு நாள்களில் கலர்ப்படச் சுருள்கள் கழுவிக் கொடுக்கப்படும். (கொழும்புத் தராதரத்தை விட விசேடமாக)

## வீனஸ் டெல்கா

கிளை:

பஸ் நிலையம்
(மீன் சந்தை அருகில்),
சாவகச்சேரி

284, ஸ்ரான்லி வீதி,
(நாக விகாரை முன்)
யாழ்ப்பாணம்.
T.P. NO: 2064

(சி/ 4369)

## பஜாஜ்

பயண உலகில் பக்குவமாகப் பவனிவர
பஜாஜ் தயாரிப்புகள்
எம்-80, KB 125, 4 எஸ், பொக்ஸர்
ஆகியவற்றை
சாவகச்சேரி நகரிலேயே பெற்றுக் கொள்ள
நாடுங்கள்:
பயண நாயகன் பஜாஜின் விற்பனை முகவர்

## குறிஞ்சி ரேடர்

இல. 9, நவீன சந்தை, மேல்மாடி
சாவகச்சேரி.

(சி/4363)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 05 — 05 — 1947

உதிர்வு 25 — 06 — 1998

அமரர்

## முருகையா தேவதாசன்

(சங்கானை ப. நோ. கூ. ச.)

மாதமொன்று கரைந்ததையா மலர் முகத்தை நாம் கண்டு
வேதனையால் துவள்கின்றோம் வேறு கதி இல்லை ஐயா
எல்லாமே செய்து தந்து எமைக்காத்த தெய்வமே!
சொல்லாலும் செயலாலும் தோன்றாத் துணையானாய்
இல்லாமல் போனாய் நீ இனி காண என் செய்வோம்?
இறைவன் திருவடியில் இனிதே அமர்ந்திருந்து
எங்களை நீ காப்பாய் உனை என்றும் தொழுகின்றோம்!


நாளை (26-07-1998) நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மனைவி, மகள்,
சகோதரர்கள்.

மல்லாகம் வீதி,
தொட்டிலடி,
சங்கானை.

(57830)

உ



## நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## ஆடிப்பூரத் [பூரகர்மா] திருவிழா

27 07-1998 திங்கட்கிழமை

அம்பிகை அடியார்களே!

ஆடிப்பூரத் தினத்தன்று காலை அம்பாளுக்கு விசேட திரவிய அபிஷேகமும், நவோத்தர சகஸ்ர மஹா சங்காபிஷேகம் (1008 சங்குகள்), விசேட பூஜை, பூரகர்மா (ருது சாந்தி), தீபாராதனை, திருவூஞ்சல், வேதஸ்தோத்திர திருமுறைப் பாராயணம், புஸ்பாஞ்சலி ஆதியனவும், அதனைத் தொடர்ந்து அழகிய "தாமரைப்பூ வாகனத்தில்" அம்பாள் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு அருட்பிரசாதமும், கல்யாண மண்டபத்தில் அன்னதானமும் (மகேஸ்வர பூஜை) சிறப்பாக உபயகாரர்களால் வழங்கப்படும்.

அடியார்கள் அனைவரையும் வருகை தந்து அன்னையை வழிபாடு செய்து, இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆடிப்பூரத் திருவிழா உபயகாரர்கள்

நயினாதீவு (57807)



நன்மகன்

## குழந்தை வடிவேலு நலமெலாம் பெற்றுவாழ்க

புன்னகை சிந்தும் தோற்றம்
புகழிலும் பணியும் ஏற்றம்
தன்னலங் கருதாத் தொண்டால்
தகைந்திட்டாய் நீதி மானாய்
அன்புளங் கொண்டு நல்ல
அறப்பணி பலவும் மாற்றும்
நன்மகன் குழந்தை வடிவேலு
நலம்பெற வாழ்த்து கின்றேன்
ஆன்மீகச் செம்ம லாகி
அருட்குரு ஆசி பெற்றார்
தான்நீதி வழங்கு தற்காய்
தக்கதோர் பதவி தந்தார்
யான்மீதா ரன்பி னாலே
யாவும்நீர் பெற்று வாழ
வான்மீது உறையுந் தெய்வம்
வரந்தர வழுத்து கின்றேன்

— நாயன்மார்கட்டு
இராசையா குகதாசன்

நியூ
கே. கே. எ. கந்தையாபிள்ளை
316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(57802)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

கொழும்புத்துறை, ஜூலை 25

கொக்குவில்– நந்தாவில் மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கொக்குவில் மனோன்மணி சனசமூகநிலையத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட சைவ சமய அறிவுப்போட்டியின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெற உள்ளது. (ஐ-30)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் இ. குணசிங்கம்**

(B. A. Dip in Ed.)

மலர்வு 10 – 02 – 1952 உதிர்வு 19 – 07 – 1996

திதி; 25 – 07 – 98

அறிவறிந்த நாள் முதலாய்— எம்மை
ஆசையாய் அணைத்து நின்று
அன்புமழை பொழிந்திட்ட எங்கள் அருமை
அப்பாவே!
எல்லோரையும் தவிக்க விட்டுப்போனதெங்கே?
ஈராண்டு சென்றாலும் உங்கள் அன்புமுகமும்
ஆசைவார்த்தைகளும் எங்களை விட்டு
என்றென்றும் மாறாது.

மனைவி, மக்கள்.

கிழவிதோட்டம்,
கரவெட்டிகிழக்கு.

(57785)

## ச.ச. நிலையம் தீக்கிரை

நெல்லியடி, ஜூலை 25

கரவெட்டிப் பகுதியிலுள்ள மத்தொனி என்ற இடத்தில் இயங்கி வந்த சனசமூக நிலையமொன்று மர்மமான முறையில் தீக்கிரையாக்கப் பட்டிருக்கிறது. (ஐ-109)

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

''நல்லூர்கந்தன்பக்திரசப் பாமலர்கள்'' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ. சிறிக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மகாவித்வான் ந. வீரமணி ஐயர் இயற்றி இசையமைத்து குணராஜா நக்கீரன் பாடிய பாடல்கள் அடங்கிய இந்த ஒலிப்பதிவு நாடாவை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி சுரேந்திரன் நச்சினார்க்கினியன் வெளியிட்டு வைப்பார்.

ஒலிப்பதிவு நாடாவின் மதிப்பீட்டுரையை ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் நவரத்தினம் தனசொரூபியின் இசைக் கச்சேரியும் இடம்பெறும். (ஐ-8)

## தேவை

நல்ல நிலையில் உள்ள 486 Dx, Pentium MMX வகை கம்பியூட்டர்கள் உடன் வாங்கப்படும். Printer உம் விரும்பத்தக்கது.

தொடர்பு:
A. C. F
281, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(57827)

## தமிழ் தேசிய வீரர்தின நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 25

'தமிழ் தேசிய வீரர்' நாளை ஒட்டி ரெலோ அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று சனி காலை வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள ஆலயங்களில் விசேட பூசைகள் நடத்தப்படவுள்ளன. தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும். நெல்லியடி முருகையன் கோயிலடியில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு குருநகர் திறந்தவெளி அரங்கில் பொதுக்கூட்டம் இடம் பெறும். (ஐ)

தெல்லிப்பழை

## இந்து இளைஞர் சங்கம்

மஹோற்சவத்தை முன்னிட்டு

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: சங்கப்பணிமனை
நாள்: 1998-08-02 நேரம்: 10.00 (S.L.T.)

சகல அங்கத்தினரையும் சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

தலைவர்
இந்து இளைஞர் சங்கம்.

தெல்லிப்பழை.

(57832)

## இதயம் நெகிழ்ந்த இதய அஞ்சலி

சிவதர்ம வள்ளலும், கற்பகதருநாயகனும்,
பசுமை நேசனுமாகிய தொழிலதிபர்

**க. கனகராசா ஐயா**

அவர்களது பிரிவுத்துயரில் குடும்பத்தாருடன், நாமும் பங்கு ஏற்று அன்னாரின் நற்பணிகளையும், அவர் நாட்டிய நிழல் தரு மரங்களின் கீழ் நின்றும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி!

இவை:
இயற்கை நேசன் – குறள்வழி வள்ளல்
மா. ஜனகராசா
(சுதர்சனம்)

எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை மரங்களை அழிக்கும் மாந்தர்க்கு

இளவரசி வெதுப்பகம்,
'ஐடியல்',
நெல்லியடி.

(சி-4368)

## 15ம் ஆண்டு நினைவஞ்சலி

வெலிக்கடைப் படுகொலைகள் (யூலை 25,27)

தமிழ்த் தேசிய வீரர்கள் தினம்

## யூலை 25



தலைவர்
தங்கத்துரை



தளபதி
குட்டிமணி

வெலிக்கடையில் அடைபட்ட விடுதலை வீரர்கள்
புலி நிகர் போர்க்குணம் படைத்த தீரர்கள்
பலியாகி இப்போது பதினைந்து ஆண்டுகள்
நலிவுற்ற நம்மினமோ இன்றும் நடுத்தெருவில்...!

மறைந்த தியாகிகள் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், தேவன்,
நடேசுதாசன், சிவபாதம், குமார், சிறீக்குமார், மரியாம்பிள்ளை, குமாரகுலசிங்கம்
உட்பட வெலிக்கடையில் வீழ்ந்த 53 ஆருயிர்ச் சகோதரர்களுக்கு
மீண்டும் எம் கண்ணீர் அஞ்சலி.....!

TELO

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)

(57798)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனகராசா!

மனித மரணங்கண்டு
மனிதம் அழுவதுண்டு - உன்
மறைவு கேட்டு
மரங்களும் அழுவதேன்?

துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் — நீதினி
பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

(57842)



## வெற்றிடங்கள்

1. பகுதி நேரம் — ஆங்கில சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர்.
2. பகுதி நேரம் — தமிழ் சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர்.
3. பகுதி நேரம் — ஆங்கிலம்/ தமிழ் மொழி பெயர்ப்பாளர்.

தகுதியுள்ளவர்கள் சான்றிதழ்களுடன் கீழ்க் காணும் முகவரிக்கு 27 - 07 - 1998 திங்கள் காலை 10 மணிக்கும் 12 மணிக்குமிடையில் (புதிய நேரம்) நேரில் சமுகமளிக்கவும்.

வடமாகாண வங்கி
ஒய்வூதியர் நலன்புரிச்சங்கம்,
குமரன் இல்லம்
67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

- போசகர்

(57838)



## கண்ணீர் அஞ்சலி

மில்க்வைற் தொழிலதிபரும்,
சமுகத் தொண்டரும் ஆகிய சிவநெறிப் புலவர்

**திரு. க. கனகராசா**

22-07-98 புதனன்று சிவபதம் எய்தியதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

நா. முருகையா குடும்பத்தினர்
முகமாலை,
எழுதுமட்டுவாள்.

(சி/4376)



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர் கணேசபிள்ளை சச்சிதானந்தம்**

வேலவன் கொடுத்தது 05-04-1924 — வேலவன் அழைத்தது 26-6-1998

அன்பு நிறைந்த மனைவியும், பாசம் மிகுந்த பிள்ளைகளையும் பெற்ற கருணையுருவே. ஆண்டு 74இவ்வுலகினில் வாழ்ந்து விண்ணுலகெய்திய எங்கள் குலவிளக்கே அப்பா! நீங்கள் என்றுமே அணையாத சோதியாய் எம் மனக்கண்முன் பிரகாசிக்கின்றீர்கள். ஆண்டு பல கடந்தாலும் உங்கள் பிரிவின் துயர் ஆறாது, உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கின்றோம்.

31ஆம் நாளாகிய நாளை (26 - 07 98) ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள வீட்டுக்கிரியை நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

24/2, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(57835)


## வாஜ்பாயை சந்திக்க கட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 25

சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள கொழும்பு வரும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் "தாஜ் சமுத்திரா" ஹோட்டலில தங்கி இருப்பார்.

ஆனால் தமிழ் கட்சிகளோ அல்லது தூதுக் குழுக்களோ இந்தியப் பிரதமரை "தாஜ் சமுத்திரா' ஹோட்டல்ல வைத்து சந்திப்பதற்கு அனுமதிப்பதில்லை என்று பாதுகாப்புத் தரப்பினர் முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கருத்தரங்குகள்

தென்மராட்சி, ஜூலை 25

தென்மராட்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் கொழும்பு திட்டமிடல் அமுலாக்கல் நாடாளுமன்ற விவகார அமைச்சின் அனுசரணையுடன் இப்பகுதியில் உள்ள வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி ஆசிரியைகள், தாய்மார்கள் ஆகியோருக்கு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

வயது வந்தோர்க்கான போஷாக்கு நிகழ்ச்சித் திட்ட கருத்தரங்குகள் வரணியிலும்—

பாடசாலை மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு, போஷாக்கு ஆகிய கருத்தரங்குகள் கைதடி முத்துக்குமார சாமி வித்தியாலயம், மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் ஆகிய இடங்களிலும்—

முன்பள்ளி ஆசிரியைகள், தாய்மார்கள் ஆகியோருக்கான கருத்தரங்குகள் கச்சாயிலும் நடைபெற்று வருகின்றன. (ஐ-117)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஜூலை, 25

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய மஹோற்சவ இரதோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4 மணிக்கு கொடியிறக்க வைபவமும் இடம்பெறவுள்ளன. (ஐ-17-30)

★ ★ ★

யாழ்ப்பாணம் திருவண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரன் கோயில் தேவி மஹோற்சவ தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை 4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (ஐ-8)

★ ★ ★

வரணி கறுக்காய்கந்த சுவாமி கோயில் அலங்கார உற்சவம் இம்மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும். அடுத்த மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். தீர்த்தோற்சவத்துடன் அலங்கார உற்சவம் முடிவடையும். (ஐ-171-173)

★ ★ ★

வடமராட்சி, ஜூலை 25

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளிசமேத வீரபத்திர சுவாமி கோவிலில் ஆடிப் பூரவிழா எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் [illegible] இரவு [illegible] வீதி உலாவும் இடம்பெறும். (ஐ-173)

## அதிரடி அரங்கு

வெளிநாட்டிலிருந்து தனது மதப் பிரமுகர் ஒருவரைத் தருவித்து, மத நிகழ்ச்சிகளை பெருத்த ஏற்பாட்டுடன் செய்தது யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மத அமைப்பு.

நேர காலத்துடனேயே திட்டமிட்டு, நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன. நல்லூரை அண்டிய பிரதேசம்ஒன்றில் உள்ள பாடசாலையின் மைதானத்திலும்இரண்டு நாள்கள் மாலையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன; அதற்கு விளம்பரமும் செய்யப்பட்டது,

பெரிய பொருட் செலவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு விழா நடக்கவிருக்கையில் இறுதி நேரத்தில் பாடசாலை நிர்வாகமும், கல்வித் திணைக்களமும் காலை வாரி விட்டதால் மனம் நொந்து போயிருக்கின்றனர் அந்த மதப் பிரிவினர்.

ஒரு மத நிகழ்வுக்கு அனுமதி கொடுக்க முன்னர் நன்கு சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். கொடுத்த அனுமதியை திடீரென வாபஸ் பெறுவதற்கு அதிலும் விட பல தடவைகள் சிந்திக்க வேண்டும்.

மத விடயங்களை வெறுமனே தாண்டி வேடிக்கை பார்க்கக் கூடாது.

கல்வி நிர்வாகிகள் கூட, தங்களது கல்வித் திணைக்கள சட்ட, திட்டங்களை பிடித்த பிடியாய் நிற்கும் அதேசமயம், சமுதாயத்தில் இலகுவாக — உணர்வுபூர்வமாக — ரணத்தை ஏற்படுத்தி விடக்கூடிய — மதம் சார்ந்த — விடயங்களின் யதார்த்த நிலையையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு கல்வி அதிகாரி, கல்வித்திணைக்கள சட்ட திட்டங்களை பிடித்த பிடியாய் நிலைநாட்டினார் என்பதை விட, மத விவகாரத்தில் எழக்கூடிய உணர்வுபூர்வ கசப்புணர்வைத் தவிர்த்தார் என்றால் அதற்கு பெருமையும் மதிப்பும் கூட. சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம்.

அதேசமயம், பாதிப்புற்று மனத்தாங்கல் பட்டிருக்கும் மதப்பிரிவினரிடம் ஏனையோர் பலரும் மன்னிப்புக்களை முன்வைக்கிறார்கள்.

★ ★ ★

கோப்பாய் பிரதேச செயலகத்துக்குகட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக காணி ஒன்றைக் கொள்வனவு செய்யும் நோக்கில் கிராம சேவையாளர்கள் ஊடாக பொதுமக்களிடம் இருந்து நிதி திரட்டப்படுவது தொடர்பானசெய்திகள் வெளியாகியிருப்பது தெரிந்ததே.

கோப்பாய் பிரதேச செயலகக் கட்டடத்தை அமைப்பதற்காக அரசாங்கம் ஒரு கோடி 40 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இக்கட்டடத்தை அரசுக்குச் சொந்தமான ஒரு காணியில் அமைக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்குச் சொந்தமான காணி ஒன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு பின்புறத்தில் உள்ளது. மற்றைய காணி ஒன்று அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அருகில் உள்ளது. இந்த இரு இடங்களிலும் உள்ள காணிகளில் கட்டடம் கட்ட விரும்பாத பிரதேச செயலகம், தற்பொழுது பிரதேச செயலகம் அமைந்துள்ள இடத்துக்கு அருகில் ஒரு காணியைக் கொள்வனவு செய்யும் நோக்கிலேயே நிதி திரட்டி வருகின்றது.

கிராமசேவையாளர்கள்தத்தமது பிரிவுகளிலுள்ள வீடுகளுக்குச் சென்று ஒவ்வொரு குடும்பங்களில் இருந்தும் 500 ரூபா முதல் ஆயிரம் ரூபா வரை வசூலித்து வருகின்றனர். கிராம சேவையாளர்கள் பணம் வசூலிக்கச் செல்வதால் பணம் வழங்க முடியாது எனச் சொல்ல முடியாத ஓர் இக்கட்டு நிலைக்கு பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஏனென்றால் நாளை எத்தனையோ தேவைகளுக்கு கிராமசேவையாளர்களைத் தேடிச் செல்ல வேண்டி ஏற்படும். இப்போது பணம்தரஇயலாது என்று கூறி முகத்தை முறித்து விட்டு பின்னர் அவரிடம் செல்வது எப்படி? இதனால் கடன் வாங்கியாவது காணிக் கொள்வனவுக்கு நன்கொடை வழங்க வேண்டிய கட்டாய நிலை அப்பகுதி மக்களுக்கு.

அரச அதிபர் போன்ற பொறுப்பான அதிகாரிகள் தலையிட்டு நியாயம் வழங்க மாட்டார்களா என்பது அப்பகுதி பொதுமக்களின் அங்கலாய்ப்பு. உரியவர்கள் தலையிடுவார்களா?

★ ★ ★

பட்டதாரி ஆசிரியர்கள் நியமன இழுபறி இப்போது புதிய வடிவம் எடுத்திருக்கின்றது. புதிதாக நியமிக்கப்பட்டவர்களுக்கு பாடசாலைகளை ஒதுக்கிக் கொடுப்பதில் குளறுபடி என்று பல குற்றச்சாட்டுகள்.

பலரின் கோரிக்கைகளில் நியாயம் இருப்பது போலவும்படுகின்றது. பாதிப்புற்றோர் எனத் தங்களைக் கருதுவோருக்கு உரிய விளக்கமளிக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

பொறுப்பானோர் பொறுப்பாகப் பதிலளிப்பதில்லை என்று பரவலான குற்றச்சாட்டும் உள்ளது.

"வேலையற்ற பட்டதாரிகளின் போராட்ட வேகத்துக்கு ஈடுகொடுப்பதற்காக மாகாணநிர்வாகம் அவசர அவசரமாக நியமனங்களை அள்ளி வழங்கி அனுப்பி வைத்திருக்கிறது. அந்த வேகத்தில் பாடசாலைகளையும் ஒதுக்கிக் கொடுக்க வேண்டியிருந்தது. அவசரத்தில் ஆற்றப்பட்ட பணி அது. எனவே நியமனம் பெற்றோர் முரண்டு பிடிக்காமல் வழங்கப்பட்ட பாடசாலையில் போய் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும். விரைவில் தவணை விடுமுறை வருகின்றது. விடுமுறைக் காலத்தில் பாடசாலை ஒதுக்கீடு பற்றிய விவகாரம் நன்கு ஆராயப்பட்டு குறை— நிறைகள், ஆலோசிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தவறுகள் நேர்சீர் செய்யப்படும்" — என்று விளக்கமளித்தார் கல்வி அதிகாரி ஒருவர்.

எப்படியானாலும் சர்ச்சை தீர்க்கப்பட்டால் சரி.

—மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைகுழிகளைத் தோண்டுவதா?

# மனித உரிமை ஆணைக்குழு திங்கள் முடிவு

கொழும்பு, ஜூலை 25

செம்மணியில் சுமார் 400 பேரின் சடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் புதைகுழிகளைத் தோண்டுவது சம்பந்தமான இறுதி முடிவை எடுப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு இம்மாதம் 27ஆம் திகதி திங்கட்கிழமை கூடவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிருஷாந்தி குமாரசாமி கற்பழிப்பு, படுகொலை வழக்கின் முதலாவது எதிரி சோமரத்ன ராஜபக்ஷவை சந்தித்த ஆணைக்குழுவின் பிரதிநிதி ரி. சுந்தரலிங்கம் சேகரித்த தகவல்களின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படவுள்ளது எனத் தெரிய வருகிறது.

சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்துள்ள தகவல்கள் உண்மையானவை எனில் — அந்தப் பகுதியைத் தோண்ட வேண்டிய தேவை ஏற்படின் —இது தொடர்பான சர்வதேச வல்லுநர்களின் ஒத்துழைப்பு நாடப்படும் எனவும்—

அகழ்வுப் பணிகள் மற்றும் அந்த இடத்தைப் பாதுகாக்கும் பணிகள் ஆகியன ஆணைக் குழுவின் மேற்பார்வையில் பக்கச் சார்பின்றி மேற்கொள்ளப்படும் எனவும்— தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

## நயினையில் ஆடிப்பூர விழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

நயினாதீவு அம்மன் ஆலயத்தில் நாளை ஆடிப்பூர விழா வெகு சிறப்பாக நடைபெறும்.

விழாவின்போது 1008 சங்காபிஷேகமும், விசேட பூசை, ஆராதனைகளும் நடைபெறும். (-15)

## பிரதேச சபை மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வடமராட்சி தென் மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை மாதாந்தக் கூட்டம் எதிர் வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இச்சபையின் தலைவர் செல்லையா சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஈ. பி. டி. பி. புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். பிரதிநிதிகள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருதடவைகள் இச்சபையில் கூட்டம் கூட்டப்பட்டு கோரமின்மையால் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

### இலங்கையில்

## வாஜ்பாய் பாவனைக்கு இரு இந்திய ஹெலிகள்

கொழும்பு, ஜூலை 25

'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் பயன்படுத்துவதற்காக இந்திய விமானப்படையின் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் இங்கு வரவிருக்கின்றன.

வாஜ்பாய் இந்திய விமானப்படையின் விமானத்தில் இலங்கை வருகிறார். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்புக்கு வருவதற்கு அவர் இந்த ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்துவார்.

பெந்தோட்டையில் தெற்காசியத் தலைவர்களின் விருந்துக்காகச் செல்லும் போதும் இந்தக் ஹெலிக் கொப்டர்களை அவர் பயன்படுத்துவார். வாஜ்பாயுடன் அதிக எண்ணிக்கையுடைய பிரதிநிதிகள் குழுவும் வருவதால் அவர்கள் இரு இந்திய விமானப்படையின் ஹெலிக் கொப்டர்களையும், இலங்கை விமானப்படையின் ஒரு ஹெலிக்கொப்டரையும் பயன்படுத்துவார்கள் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

(உ-8)

## இளம் பெண் விடுதலை!

யாழ்ப்பாணம், ஜூலை 25

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவர் விடுதலை செய்யப்பட்டார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் சங்கானையில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட கனகரத்தினம் ஜெயப்பிரதா என்பவரே விடுதலை செய்யப்பட்டவராவார்.

காங்கேசன்துறையில் இரண்டு மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கடந்த 20 ஆம் திகதி காங்கேசன்துறைப் பொலீஸாரினால் மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் இப் பெண் ஆஜர் செய்யப்பட்டார்.

இவர் மீதான குற்றச்சாட்டை விசாரணைசெய்த நீதிவான் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த ஆதாரங்கள் பொலீஸாரினால் சமர்ப்பிக்கப்படாமையால் அவரை விடுதலை செய்தார். (உ-5)

### புதிய தேர்தல்களை எதிர்நோக்கும்

## மாகாணசபைகளின் பணிகளை கவனிக்க அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, ஜூலை 25

ஆயுள்காலம் முடிவடைந்து அடுத்த மாதம் 28 ஆம் திகதி தேர்தல்கள் நடைபெறவுள்ள 5 மாகாண சபைகளின் பணிகளைக் கவனிக்க மத்திய அரசின் அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு மாகாண சபையின் கொழும்பு மாவட்டத்திற்கு அமைச்சர்களான சி. வி. குணரத்ன, ஏ. எச். எம். பௌசி மற்றும் கிங்ஸ்லி டி விக்கிரமரத்ன ஆகியோரும், களுத்துறைமாவட்டத்துக்கு ரத்னசிறி விக்கிரமநாயக்காவும்—

வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்திற்கு பேர்டி பிரேம்லால் திசாநாயக்காவும், பொலனறுவ மாவட்டத்திற்கு மைத்திரிபால சிறிசேனவும்—

சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்திற்குதர்மசிறிசேன நாயக்காவும், இரத்தினபுரி மாவட்டத்திற்கு ஜோன் செனிவிரத்னவும் —

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திற்கு டி. எம். ஜயரத்தின மற்றும் அனுருதத ரத்வத்தை ஆகியோரும் மாத்தளை மாவட்டத்திற்கு நந்தமித்திர எக்கநாயக்காவும், நுவரேலியா மாவட்டத்திற்கு எஸ். பி. சேனநாயக்காவும் —

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

'உதயன்' நிறுவனம் மற்றும் யாழ். றோட்டரிக்கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் கூடைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் அரையிறுதிய ாட்டங்கள் இன்று சனிமாலை பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத்திடலில் நடைபெறவுள்ளன.

அரையிறுதி ஆட்டத்தில் மோதும் அணிகள் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு -யுத்காமல் வி.க எதிர் அரியாலை வி.க (பெண்கள் பிரிவு)

★ மாலை 5 மணி- சென்றலைட்ஸ் வி.க எதிர் பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி (ஆண்கள் பிரிவு)

(ஐ)

### பயிலுநர்பட்டதாரிஆசிரியர்:

## நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். வலயம் இரண்டின் பாடசாலைகளுக்கு பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இதுவரை சமுகமளிக்காத ஏழு பேரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு வலயம் இரண்டின் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

ரி. பாலசறோஜினி (கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம்), வி. யசோதினி (இல.48 டேவிற்சன் வீதி, கொழும்பு) என். ராஜேந்திரம் (71ஏ, பீரிஸ் வீதி, கல்கிஸை), பி. பரராஜசிங்கம் (6/3, உம்புச்சிப்பிளேஸ், கொட்டாஞ்சேனை), வி. குமுதினி (இல. 18, 4ஆவது ஒழுங்கை, குருமண்காடு, வவுனியா), ரி. பங்கயற்செல்வி (இல.18, 4 ஆவது ஒழுங்கை, குருமண்காடு, வவுனியா), பீ. குணசீலன் (31ஏ, மேரீஸ் வீதி, கொழும்பு)

(இ-3)

## இடதுசாரி அமைப்புகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 25

மாகாணசபைத் தேர்தல்களை பின்போட அரசுஎடுக்கும் முயற்சிகளை கண்டித்து இடதுசாரி அமைப்புக்கள் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜே. வி. பி., நவசமசமாஜக் கட்சி மற்றும் பல்வேறு தொழிற் சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"யுத்தம் என்ற போர்வையில் மக்களின் வாக்குரிமையை அரசு பறிக்கிறது. தேர்தலை அரசு ஒத்திப் போட்டால் அரசுக்கு எதிராக மக்கள் சக்தி வெடிக்கும்" என்று அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

அதேசமயம் உத்தியோக பூர்வ பதவிக்காலம் முடிவடைந்த மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நாட்டின் நிலைமையைப் பரிசீலனை செய்தபின்னர் நிச்சயமாகநடத்தப்படும் என்று அமைச்சர்அலவி மௌலானா நேற்று முன்தினம் அறிவித்தார்.

ஐ. தே. கட்சி செய்தது போல் தேர்தல்களைப் பின் போடும் எண்ணம் தற்போதைய அரசாங்கத்திற்கு கிடையாதென்றும் அரசாங்கம் தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயங்குகின்றது என எதிர்க் கட்சியைச் சேர்ந்த சிலர் தெரிவிக்கும் குற்றச் சாட்டுக்கள் தவறானவை என்றும்—அவர் கூறினார்.

வடபகுதி யுத்தம் முடிவடையும் வரை தேர்தலைப் பின்போடும்படி மகாசங்கத்தினர் விடுத்திருக்கும் வேண்டுகோளை ஜனாதிபதி பரிசீலனை செய்து வருகின்றார் என்றும்—

எவ்வாறாயினும் மாகாண சபைகளுக்கு நிச்சயம் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும்—அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-3)

## நுண்கலைப் பீட பட்டதாரிகளுக்கு இரு வாரங்களில் ஆசிரிய நியமனம்

### துணை வேந்தருக்கு கல்விச் செயலர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடபட்டதாரி மாணவர்களுக்கு இரு வாரங்களில் ஆசிரிய நியமனம் வழங்குவதாக வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா உறுதியளித்துள்ளார் என யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களில் அனேகமானோருக்கு பட்டதாரிஆசிரிய நியமனம்வழங்கப்பட்ட அதே சமயம் நுண்கலை பட்டதாரி மாணவர்களுக்கு ஆசிரிய நியமனம்வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அவர்கள் பெரும் ஏமாற்றம்அடைந்துள்ளனர். எனவே அவர்களுக்கு விரைவாக ஆசிரிய நியமனம் வழங்கப்படவேண்டும் என தாம் செயலாளரைக் கேட்டுக் கொண்டதாகவும்-

இருவாரங்களில் ஆசிரிய நியமனம் வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்எனவும்— துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (உ-9)

## கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட பெண்கள் ஆடை தயாரித்தல், துணிகள் வர்ணம் தீட்டல் ஆகிய பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கலும், அவர்கள் தயாரித்த பொருள்களின் கண்காட்சியும் நாளை காலை 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றும் திருமதி நவநீதம் ஜெகதீசன் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

செல்விகள் இரட்ணம் [illegible] இந்தப் பயிற்சியை அளித்தனர். (உ-3)

## அயடின் கலந்தஉப்பையே விற்பனைசெய்யவேண்டும்

### வர்த்தகருக்கு அறிவுறுத்து

வடமராட்சி, ஜூலை 25

அயடீன் கலந்த உப்பையே பொது மக்களுக்கு விற்பனை செய்ய வேண்டும் என வடமராட்சிப் பிரதேச வர்த்தகர்களுக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் பொதுமக்களும் அயடீன் கலந்த உப்பினையே சமையலுக்குப் பாவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது,

இதேவேளை —

பருத்தித்துறை, புலோலி ஆகிய பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படும் உப்பில் அயடீன் கலந்துள்ளதா இல்லையா என்பதை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அண்மையில் பரிசோதனை செய்தனர். (ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சார்க்"கை ஒட்டி

# கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு!

கொழும்பு, ஜூலை 25
எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் சார்க் தலைவர்களின் உச்சி மாநாட்டையொட்டி கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நகரிலும் அதன் சுற்றுப் புறப்பகுதிகளிலும் ஆயிரக்கணக்கான படையினரும், பொலீஸாரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சார்க் நாட்டுத் தலைவர்களும் மாநாட்டுப் பிரதிநிதிகளும் தங்கும் தாஜ் சமுத்திரா ஹோட்டல், மாநாடு நடைபெறும் பண்டாரநாயக்கா சர்வதேச மண்டபம் ஆகியன உள்ளடக்கிய பகுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு நகரப் பகுதியில் பல சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் முதல் கொழும்பு நகரில் உள்ள அநேக பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும்.

காலிமுகம், மத்திய வீதி, ஜனாதிபதி மாவத்தை, ஜனாதிபதி செயலகம், ஹில்டன் ஹோட்டல் ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகள் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை மூடப்படும்.

பலத்த பாதுகாப்பு நடவடிக்கையாக பல வீதிகளில் பொதுமக்கள், வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்படும்.

கொழும்பில் வெள்ளி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. (உ-3-7)

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் டொனால்ட் கணேஸ்குமார் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ராஜை அழகுச்சோலை, லேற்றஸ் பான்சி ஹவுஸ் ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் இன்று காலை 9-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் அணியும், பற்றீசியன் அணியும் பங்குபற்றுகின்றன. (உ-3)


## 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



வையத்துள் அறிமுகம்
03 — 10 — 1921

தெய்வத்துள் சங்கமம்
25 — 06 — 1998

கச்சார்வெளி, பளை

### ஆறுமுகம் வீரகத்தி
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

அன்பு, பண்பு, அறிவு இவற்றின் வடிவமாய் வாழ்ந்து கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் எம்மை எல்லாம் வாழ்வில் உயரச் செய்த எம் அன்புத் தெய்வமே!

திங்கள் ஒன்று கடந்த பின்பும் உங்கள் குரல் கேட்கிறது: உங்கள் உருவம் காட்சியளிக்கிறது. நீங்கள் ஏற்றிய நினைவுத்தீபம் எம் நெஞ்சங்களில் என்றும் அணையாது.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பலவழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், சுகயீனமுற்ற காலத்தில் அவரின் சுகநலன்களைக் கவனித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், உதவியாளர்கள், பார்வையாளர்கள் யாவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று 25-07-98 இல் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு: இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக சகலரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி!

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கச்சார் வெளி,
பளை.

(சி/4381)


# பாதையை விட்டு விலகி பஸ் விபத்துக்குள்ளானது

## துன்னாலையில் சம்பவம்

நெல்லியடி, ஜூலை 25
பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று நேற்றுக் காலை 11.30 மணியளவில் துன்னாலைகோயில்சந்தைப் பகுதியில் பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவி ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

சூசைப்பிள்ளை யுகடெல்டா (50 வயது) என்பவருக்கு வலது கையில் முறிவு ஏற்பட்டது.

பஸ்ஸுக்கும் பலத்தசேதம் ஏற்பட்டது.

பஸ் மோதியதால் மூன்று வீடுகளின் மதில்கள் உடைந்தன. (உ-109)

# அநுராவுக்குப் பெண் தேடும் படலம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 25
ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து குத்துக்கரணம் அடித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் எச்சந்தர்ப்பத்திலும் இணைவார் என எதிர்பார்க்கப்படும் அநுரா பண்டாரநாயக்காவுக்கு பெண் தேடும் படலமும் நடைபெறுவதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரமச்சாரியாக இருக்கும் அவர் இல்லறவாழ்வில் இணைந்து பண்டாரநாயக்க பரம்பரையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கம் கொண்ட பலர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில்சாயிபாபாவை தரிசித்து திரும்பிய பின்னர் அநூராவின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும்—

தமது தாயாரான பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, சகோதரியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் இணைந்து செயல்பட அவர் விரும்புவதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வவுனியா வருவோருக்கு

# ஒரு மாத கால 'பாஸ்' வழங்கல் இடைநிறுத்தம்

வவுனியா, ஜூலை 25
''வெற்றிஉறுதி'' இராணுவ நடவடிக்கை துருப்பினர் கைப்பற்றிய வன்னிப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாநகருக்கு வந்த மக்கள் அங்கு தங்குவதற்கு ஒருமாதகால 'பாஸ்' (அனுமதி) வழங்கும் நடைமுறை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

பொய்யான தகவல்களை வழங்கி இந்தப் பாஸை மக்கள் பெறுவதாகத் தெரிய வந்துள்ளதையடுத்து அப்பகுதி மக்கள் தொடர்பான விவரங்கள் கணனி மயப்படுத்தப்படவிருப்பதாகவும்—

அதன்பின்பே பாஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும்—

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார். அதுவரை இவர்கள் ஏழுநாள் பாஸைப் பெற்றுத் தங்கலாம்எனவும் அவர் தெரிவித்தார் (உ-164-3)

## ஓஷன்...
(முதலாம் பக்கத் தொடர்)
மீட்டுக் காத்திருந்தது.

நேற்று முன்தினம் இரவு வீசிய கடுங்காற்றால் இக்கப்பல் நங்கூரம் அறுந்து கப்பல் இழுத்துச் செல்லப்பட்டு ஹெந்தலக் கடற்கரையில் தரை தட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மாகாணத்...
(முதலாம் பக்கத் தொடர்)
காலத்துக்கு ஒத்திவைக்க அரசு முடிவு செய்துள்ளது.

யுத்தத்தின் மூலம் சமாதானத் தீர்வை எட்டிவிடலாம் என அரசு கருதவில்லை.

எனவே சமாதானத்துக்கான தனிமுயற்சிகளும் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வரையறுக்கப்பட்டுள்ள கட்டுக்கோப்புக்குள் நின்று யுத்தம் செய்யவேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது— என்று அவர் மேலும் கூறினார். (உ-5)

## யாழ். கிளை இணைப்பாளர்

யாழ்ப்பாணம் ஜூலை 25
மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை அலுவலகத்துக்கு புதிய பிரதேச இணைப்பாளராக சேனக பண்டாரதிஸநாயக்கா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-6)

## இரண்டாம் தவணை விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூலை 25
பாடசாலைகள் இரண்டாந்தவணை விடுமுறைக்காக எதிர்வரும் 31ஆம் திகதி மூடப்படவுள்ளன. மூன்றாந் தவணை செப்டம்பர் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும். (-139)

## சந்திரிகா-அனுருத்த...
(முதலாம் பக்கத் தொடர்)
அமைச்சர் பங்குபற்றமாட்டார் எனத் தெரியவருகிறது.

★ பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் பிறந்த நாள் நிகழ்ச்சி தொடர்பாக மகாவலி நிலையத்தில் தானம் வழங்கும் நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது. அந்த நிகழ்ச்சி குறித்து ஜனாதிபதியும், அவரது ஆதரவாளர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

★ இந்த நிகழ்ச்சியில் அரசைக் கடுமையாக விமர்சிக்கும் பிக்குமார் பலர் கலந்து கொண்டனர். ''இனத்தை மீட்டெடுக்கத் தோன்றிய துட்டகைமுனு'' என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சரை வண சோபித தேரர் அங்கு வைத்துப் புகழ்ந்துள்ளார்.

★ இந்த தான நிகழ்ச்சிக்கு முன்னர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் வீட்டில் நடந்த பிறந்ததின நிகழ்ச்சிக்கு ஜனாதிபதிக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் ஜனாதிபதிக்கு அந் நிகழ்ச்சியில் பங்குபற்றவில்லை.

★ முப்படைத்தளபதிகளின் செயற்பாடுகளை நேரடியாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் விதத்தில் கூட்டுப் படைத் தலைமையகம் உருவாக்கப்படவிருக்கிறது. இந்த முடிவு அனுருத்தவின் கடும் எதிர்ப்புக்குள்ளாகியுள்ளது. ''கொழும்பில் குளிரூட்டப் பட்ட அறைகளில் இருந்து இராணுவ நடவடிக்கை [illegible] கும் நடவடிக்கை இது'' என்று அனுருத்த கருத்து வெளியிட்டுள்ளார்.

★ பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தனக்கெனத் தயாரித்துள்ள விசேட அரசியல் திட்டத்துக்கமையச் செயற்படுகிறார் என்ற சந்தேகமே இவ்விரு தலைவர்களுக்கும் இடையில் விரிசல் தோன்றக் காரணம் எனக் கூறப்படுகிறது.

★ பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தமக்கே பிரதமர் பதவி கிடைக்கவேண்டும் என எதிர்பார்க்கிறார். யுத்தத்தில் வெற்றிகள் கிடைத்த பின்னர் பிரதமர் பதவியை அவருக்கு வழங்குவதே பொருத்தமானது என மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் கூறுகின்றனர்.

இருப்பினும் தற்போது இடம்பெறும் நிகழ்வுகளை அவதானிக்கையில் பிரதமமந்திரிப் பதவி பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்குக் கிடைக்க வாய்ப்புக்கள் இல்லை என்றே தோன்றுகிறது. பிரதமர் பதவி யாருக்கு வழங்கப்பட்டாலும் — பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு அது வழங்கப்படக் கூடாது என்பதில் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா தீவிரமாக இருக்கின்றார்.

இவ்வாறான சூழ்நிலையில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சிலவேளை தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டு அரசுக்கு அச்சுறுத்தலை விடுப்பவராக மாறக்கூடும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு நெருக்கமானவர்கள் நம்புகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## வெளிநாட்டு...
(முதலாம் பக்கத் தொட)
யாவுக்கு விஜயம் செய்த போது மக்களின் நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

நோர்வே அரசாங்கம் பாரிய அளவில் இலங்கைக்கு உதவி வழங்கிவருகிறது. ஆனால் எந்த நோக்கத்துக்காக நிதி உதவி வழங்கப்படுகிறதோ அந்த நோக்கத்துக்காக அந்த நிதி செலவு செய்யப்படுவதில்லை. நோர்வே அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும்— என நோர்வே தூதுவரிடம் மக்கள் தெரிவித்தனர் என செய்தி ஏஜென்ஸி ஒன்று அறிவித்தது. (உ-3)

## பத்திரிகையாளர்...
(முதலாம் பக்கத் தொடர்)
ரவாதவிசாரணைப் பிரிவுப் பணிமனையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இருவரையும் உறவினர்கள் சென்று சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அடுத்து—

ஸ்ரீகஜனின் தந்தையார் சுந்தரலிங்கம், தமது மகனைச் சந்தித்ததுடன் அவருக்குத் தேவையான உடுப்புக்களையும் கையளித்தார்.

மாணிக்கவாசகத்தை அவரதுமனைவி இன்று சென்று பார்ப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 25-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

25 — 07 — 1998 சஞ்சீவி

சம்பந்தன் வைத்திய நிபுணர்
ஆலோசனை நிலையம்
இங்கு வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் சகல ஆய்வு கூட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
**கண்ணுத்துரை கிளினிக்**
சம்பந்தன் வைத்திய நிபுணர்
ஆலோசனை நிலையம்
574, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கைவங்கி அருகில்)
யாழ்ப்பாணம். (57755)

கருத்துக் கலசம் மயூரா

## நம்பிக்கை

நம்பிக்கை

இது மனித வாழ்க்கையின் முக்கியமான தேவைகளில் ஒன்று. நம்பிக்கை பல வகையும் வடிவமும் கொண்டது.

மனிதன் வாழ்வதற்கு அடிப்படையாக விளங்குவதும் நம்பிக்கையே.

துன்பங்கள், துயரங்கள் ஒரு போது சூழ்ந்தாலும், எதிர்காலம் இருள் நீங்கி ஒளிமயமாக இருக்கும் என்ற நம்பிக்கை இல்லாவிடில் எல்லா மனிதர்களுமே தற்கொலை செய்ய நேரிடும். ஏனெனில் துன்பம் இல்லாத வாழ்க்கை எவருக்கும் வாய்ப்பதில்லை.

துன்பத்தைக் கண்டு துவண்டு வாழ்க்கை மீது—எதிர்காலம் மீது—நம்பிக்கை இழந்துவிட்டால் மனித வாழ்க்கை சூனியமாக மாறும். இந்த வகையில் நம்பிக்கை வாழ்க்கையின் பற்றுக்கோடாக, கொழுகொம்பாகக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

ஒருவர் மீது மற்றவர் கொள்ளும் நம்பிக்கை நட்புக்கு வழி செய்கிறது. ஒருவருக்கொருவர் செய்யும் உதவி, நம்பிக்கை மீது கட்டி எழுப்பப்பெற்ற நட்பை மேலும் வளர்க்கிறது.

இரு மாறுபட்ட தரப்புகளிடையே புரிந்து உணர்வு உண்டாவதற்கு முன்னர் நம்பிக்கை மலர வேண்டும். பிரிந்து நிற்கும், பிசகுபட்டு நிற்கும் இரண்டு தரப்புகளை கிட்டக் கொண்டு வருவதற்கு அத்தியாவசிய தேவையாக விளங்குவதும் நம்பிக்கையே. பரஸ்பரம் நம்பிக்கை இல்லாவிடில் மாறுபட்ட தரப்புகள் நெருங்கிச் சென்று சமரசம் காண்பது கடினம்.

மனித வாழ்க்கையில், ஒவ்வொரு மனிதனின் ஈடேற்றத்துக்கும் 'இன்றியமையாதது தெய்வ நம்பிக்கை. எமக்கும் மேலானவன் ஒருவன் இருக்கிறான் என்ற நம்பிக்கை இல்லாதவர்கள் கட்டுப்பாடு இல்லாதவர்களாக, அகந்தை மிகுந்து, தர்மத்திலிருந்து பிறழ்ந்து, தறிகெட்டவர்களாகிச் சீரழிந்து போகிறார்கள்.

இவ்வாறு பல வகைப்பட்டிருக்கும் நம்பிக்கை வெறுமனே சொல்லில், மனதில் மறைந்திருந்து பயனில்லை. எல்லா வகை நம்பிக்கையும் நடத்தையாக மாறவேண்டும்; செயல் வடிவம் பெற வேண்டும்.

இன்றைய சமூகத்தில் சொல்லொன்று செயல் வேறு என்ற போக்கே மேலோங்கிச் செல்கிறது. ஆகையால் நம்பிக்கை நடத்தையாக மாறாவிடில் அதனால் எதுவிதபயனும் இல்லை. இது உணரப்படவேண்டும்.

பொதுவாகவே மனிதர்கள் தாம் எதனை விரும்புகிறார்களோ அதனையே முழுதாக நம்புவது உண்டு. ஆனால், தமக்கு விருப்பமில்லாத ஒன்றின் மீது நம்பிக்கை கொள்வதற்கும் பயிற்சி தேவை.

தமது நலனுக்கு மட்டுமன்றி பிறர்நலன் கருதியும் உழைக்க வேண்டும். அந்த உழைப்புக்கு தனக்கு விருப்பமில்லாத ஒன்றின் மீதும் நம்பிக்கை கொண்டாகவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக நம்பிக்கை உண்மையானதாக மலர்வது மிகமிக அவசியம்.

# செவ்வாயில் தோன்றி மறையும் மனிதமுக வடிவிலான பிரமிட்டுகள்

செவ்வாய்க் கிரகத்தின் மீதான தனது ஆய்வுப் பணிகளை மனிதன் ஆரம்பித்து மிக நீண்ட காலமாகி விட்டது. இன்றும் செவ்வாயில் இருந்து புதிது புதிதான விடயங்கள் பூமிக்குக் கிடைத்தபடியே உள்ளன.

'ஸிடோனியா' — செவ்வாய்க் கிரகத்தின் ஒரு பிரதேசம். விண்கற்களாலும் வால் நட்சத்திரங்களாலும் கடந்த காலங்களில் சின்னாபின்னப்படுத்தப்பட்டு பயங்கரமாய்க் காட்சி தரும் செவ்வாயின் தெற்கு மலைத்தொடர்ப் பிரதேசங்களை வடக்கு சமவெளிப் பிரதேசங்களில் இருந்து பிரிக்கும் எல்லைக் கோட்டுப் பகுதிதான் இந்த ஸிடோனியா.

ஸிடோனியாவில் காணப்படும் தட்ப வெப்ப காலநிலையும் நில அமைப்புகளும் — செவ்வாய் நிலத்தில் நடைபெற்றுவரும் வேதியல் மாற்றங்களை வானியலாளர்களுக்கு எடுத்து விளக்கிக் கொண்டிருக்கும் அம்சங்களாகும்.

இதனால் மட்டுமே இந்தப் பகுதி வானியலாளர்களிடம் புகழ் பெற்றுவிடவில்லை.

1976 ஆம் ஆண்டு நாஸாவின் 'வைகிங்' விண்கலம் செவ்வாயின் சுற்றுப் பாதையில் நுழைந்து கிரகத்துக்குள் பிரவேசித்ததும் தான் தரையிறங்கத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இடமும் இந்த ஸிடோனியாதான்.

இப்பகுதியின் மலைகளில் 'வைகிங்' எடுத்துத்தள்ளிய அந்த மனித முக அச்சின் புகைப்படங்கள்தான் விண்ணியலாளர்களை ஸிடோனியாவின் பக்கம் காதல் கொள்ள வைத்தது.

வைகிங் அனுப்பிய படங்களில் — மூன்று கிலோ மீற்றர் பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த — மனித முக வடிவிலான—பிரமிட்டுக்களின் விம்பம் அடங்கியிருந்தது.

வானத்தை அழுந்தப் பார்க்கும் பார்வையுடன் காணப்பட்ட இந்தப் பிரமிட்களின் இடப்பக்கம் நிரந்தர இருளில் இருந்ததை 'வைகிங்' அனுப்பிய படங்கள் எடுத்துக்காட்டின.

இறந்தவர்களைப் புதைப்பதற்காக புராதன எகிப்தியர்கள் கட்டும் கல்லறைகளே பிரமிட்கள். இவை போன்றே — அதுவும் மனித முக அமைப்பில் அமைந்த — பிரமிட்கள் எவ்வாறு செவ்வாயில் உருவாகின?

பல லட்சம் வருடங்களுக்கு முன்னர் இருந்து பின்பு அழிந்து விட்டதாகக் கருதப்படும் செவ்வாயின் நாகரிகம் கட்டி வைத்த சிலை — பிரமிட் — கல்வெட்டுள் இது என்பது நம்பிக்கை; அசைக்க முடியாத நம்பிக்கை.

பூமியில் மனிதன்; செவ்வாயில் மனித முக அச்சு. — அதிசயம்! ஆனாலும் உண்மை என்று நம்பப்பட்டது.


இதற்குச் சாட்சியங்கள் மேலும் பல வந்தன. செவ்வாய்க்கு மேலே சுமார் இரண்டாயிரம் கிலோமீற்றர் உயரத்தில் பறந்து வைகிங் எடுத்திருந்த அன்றைய புகைப் படங்கள் துல்லியம் குறைந்திருந்தாலும் அவற்றின் மீதான இன்றைய நவீன ஆய்வுகள் தரும் முடிவுகள் நம்மை சிலிர்க்க வைக்கின்றன.

ஸிடோனியா மலைப்பகுதியில் இன்றும் சில மனித முக அச்சுக்கள் உள்ளன என்ற முடிவு வரும்போது சிலிர்க்காதா என்ன?

அங்கே பிரமிட்கள் தெரிந்தன; காலம் அழித்த நகரங்கள் புலப்படுகின்றன; சேதமடைந்த கட்டடங்கள் தங்களை அடையாளம் காட்டுகின்றன; இப்படிப் பிரமிப்பூட்டும் செவ்வாயின் நிதர்சனங்கள் புகைப்படங்களாக பூமிக்குக் கிடைக்கப்பெற்றன.

செவ்வாயின் நாகரிகம் பற்றிய நம்பிக்கையை இவை இன்னும் ஆழமாக்கி விட அந்த நாகரிகம் பற்றிய நம்பிக்கையை மனித இனம் அண்மைக்காலம் வரை வைத்துக்கொண்டிருந்தது.

செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட கமரா எம். ஜி. எஸ். (M.G.S) மூலம் இவ்வருடம் ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி அன்று வந்த ஸிடோனியாவின் புகைப்படப் பகுதிக்கு 'நகரச் சதுக்கம்' என்று பெயர் சூட்டி துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறது நாஸா விண்வெளி ஆய்வு மையம்.



செவ்வாய்க் கிரக நிலத்தில் பதிந்து கிடக்கும் மனித முக பிரமிட்கள்!

செவ்வாய்க் கிரகத்தில், காலம்தன் இரும்புக்கரங்களால் அழிக்க ஆரம்பகாலச் செவ்வாய் நகரங்களின் கட்டட மிகுதிகள் இங்கு ஏராளமாகப் புதைந்திருக்கின்றன என்பது இப்படங்கள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.

இதற்கிடையில் செவ்வாய் நாகரிகம் பற்றிய கற்பனைகளை தகர்த்தெறியும் தகவல்களையும் எம்.ஜி. எஸ்.கமரா அனுப்பிவைத்துள்ளது.

> செவ்வாயின் தரையில் மனித முக வடிவிலான பாரிய பிரமிட்கள் — அல்லது கல் குன்றுகள் — இருப்பது தெரிய வருகின்றது. புதிதாக மனித முக அச்சுகள் அங்கு இருக்கும் தகவல் நம்மைச் சிலிர்க்க வைப்பது ஒரு புறம் இருக்க —
>
> மறுபுறத்தில் 1976 இல் செவ்வாய்க்குள் புகுந்த 'வைகிங்' விண்கலம் எடுத்த படத்தின் மூலம் அடையாளம் காணப்பட்ட மனித முக பிரமிட், கடந்த ஏப்ரல் 24 ஆம் திகதி மற்றொரு கமரா மூலம் எடுக்கப்பட்ட படத்தில் காணாமற் போயிருப்பது வியப்பை அதிகரித்திருக்கின்றது.

ஏப்ரல் 5 ஆம் திகதி ஸிடோனியா பகுதியை நெருங்கியது எம். ஜி. எஸ்.

அது செவ்வாயின் இளங் காலைப் பொழுது. அடிவானத்திலிருந்து மேலெழும் கதிரவன மனித முக அச்சுக்கு மேலே சூரியன் தன் கதிர்களைப் பரவ விடுகிறான்.

இதோ......மிகச்சரியாக அம் மனித முக அச்சுக்கு நேர் மேலாகக் கதிரவன் வரும்பொழுது...

ஆயிரம் 'வாட்ஸ்' மின்குமிழ் போன்ற பிரகாசமான ஒளி மனித முக அச்சின் மீது விழுகின்றது. அந்தக் கணத்தில் எம். ஜி. எஸ். சரமாரியாகப் படம் பிடித்துத் தள்ளியது.

'வைகிங்' போல் மேலே பறந்து கொண்டே படம் எடுக்கப்படவில்லை முக அச்சுப் பகுதியின் மிக அருகே நெருங்கிச் சென்று துல்லியமாகப் படம் பிடித்தது எம். ஜி. எஸ்.

எம். ஜி எஸ் இல் இருந்து அனுப்பப்பட்ட படங்கள் கணனி மூலம் மிகத் துல்லியமாக்கப்பட்டன எவ்வளவு துல்லியமாக்க முடியுமோ அவ்வளவு துல்லியமாகப் படங்களைப் பெற்று அவற்றை திரையில் கொண்டு வந்தனர்.

அங்கே......திரையில்......

மனித முக அச்சு இருந்ததாய் மிகத் தெளிவாக 'வைகிங்' அடையாளம் காட்டிய ஸிடோனியாவின் பகுதியில்—

வெறும்பாறைக் குவியல் கல் குன்று மட்டுமே காணப்படுகின்றது. எங்கு தேடியும் மனித முக அச்சை மட்டும் படங்களில் காண முடியவில்லை!

அதிர்ச்சி......பேரதிர்ச்சி.....

முன்னைய செவ்வாய் நாகரிக நம்பிக்கையனைத்தையும் தவிடு பொடியாக்கி விடுமளவிற்கு ஆதாரபூர்வமான செய்தியை—செவ்வாயில் மனித முக அச்சுப் பிரமிட்கள் இல்லை யென்பதை—எம். ஜி. எஸ் சொன்னது.

ஆனாலும் இதனை முற்றுமுழுதாக நம்ப விண்ணியலுலகம் தயாரில்லை. செவ்வாயில் மனித முகம் தொடர்பாக பலப்பல விதமாக கற்பனைசெய்து வைத்திருந்த கதைகளை அவ்வளவு சுலபமாகத் தூக்கி எறிந்து விடமுடியுமா என்ன?

தற்போது எம். ஜி. எஸ். எடுத்து அனுப்பிய படங்கள் பற்றிய வாதப் பிரதிவாதங்கள் மேற்கிளம்பத் தொடங்கிவிட்டன.

செவ்வாயில் பலமாக வீசிய சூறைக் காற்றுக்கள் கொண்டுவந்து குவித்த மணல் குன்றுகளில் எதேச்சையாக மனித முக அச்சு உருவாகி இருக்கும் போது, வைகிங் எடுத்த படங்களே செவ்வாயில் மனித முக பிரமிட் என்று அனேகர் சொல்வதை ஒரு வாதத்துக்கு ஒப்புக் கொண்டால் கூட—

இப்படியா பற்பல முக அச்சுக்கள் ஒன்றுபோல் உருவாகும்? பற்பல சேதமடைந்த பண்டபங்கள் தோன்றும்? நகரச் சதுக்கம் உண்டாகும்?—என்பது விண்ணியலாளர்கள் கேள்வி.

ஆகவே எம். ஜி. எஸ். ஸின் புதிய படங்களை—அவை காட்டிய பாதைகளை—நம்புவதற்கு யாரும் தயாராயில்லை.

எம் ஜி எஸ். இன் படங்கள் தொழில்நுட்ப ரீதியாகவும் சில பிரச்சினைகளைக் கிளப்புகின்றன. அதாவது இந்த நவீன கமராவால் படம் மிகத் துல்லியமாகக் கிட்டியது என்னவோ உண்மைதான்.

ஆனாலும் மிக நெருங்கிய 'குளோசப்பில்' படங்கள் பிடிக்கப்பட்டிருப்பது கொஞ்சம் சர்ச்சைக்குரிய விடயமாகவே உள்ளது.

ஏனெனில் கமராவைக் கொண்டு போய் மூக்கின்மேல் மட்டுமோ, நெற்றியில் மட்டுமோ அல்லது உதட்டில் மட்டுமோ குறிபார்த்து வைத்துப் படம் எடுத்தால் அப்பகுதி மட்டும் தானே படத்தில் தெரியவரும்?

இதேமுறையில் பெரிய கற்சிலையைப் படமெடுத்தால் படமாகும் பகுதி வெறும் கல்லாய் அல்லது பாறையாய்த் தெரியாமல் வேறெப்படித் தெரியும்?

எம். ஜி. எஸ். கமரா இவ்வாறு ஒரு பகுதியை மட்டும் 'குளோசப்பில்' படமெடுத்ததுதான் இப்படி செவ்வாய் மனித முக அச்சு இல்லை என்ற தவ

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றில் கவன ஈர்ப்புப்பிரேரணையை தமிழ்க்கட்சிகள் கொண்டுவந்திருக்க முடியாதா?

யாழ்ப்பாண மக்கள் கல்வி அறிவு பெறுவதில் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர்கள்; தெரிந்த ஒன்று தான்.

அந்த ஆர்வமும் அக்கறையும் கல்வி மூலம் நல்ல தொழில் ஒன்றைப் பெற்றுவிடவேண்டும் என்ற நோக்கத்தையே பிரதானமாகக் கொண்டதுஎன்பது மறைக்க முடியாத ஒன்று.

நன்னெறியில் வாழ்க்கையை நடத்துவதற்கு உதவுவதே கல்வி என்ற நிலையன்றி, அதிக வருமானம் தரும் தொழில் ஒன்றைத் தேடி வாழ்க்கையை வளமாக்குவது மட்டுமே என்றாகி விட்டமை கவலைக்குரியதாகும். எனினும் அதுவே நீண்ட காலமாக யாழ்ப்பாணக் கல்வியின் குணாம்சமாகி உள்ளது.

பெற்றோர், தமது பிள்ளைகளை உயர்கல்வி பெற்று உயர்நிலைக்குச் செல்ல வேண்டும் என்று விரும்புவது இயற்கை. எந்தப் பெற்றோரும் தமது பிள்ளைகள் தம்மைவிட மேலும் பல படி உயர்ந்து தம்மை விடவும் சிறப்பான வாழ்வு காண வேண்டும் என்று விரும்புவதும் இயல்பு.

இந்த வகையில் தமிழ் மாணவன் ஒருவன், குறிப்பாக யாழ்ப்பாண மாணவன் ஒருவன் பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாவது என்பது இக்காலத்தில் மிகவும் கஷ்டமான காரியமாகும்.

போட்டிப் பரீட்சையில் தேறி பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறுவது; பாட போதனை தொடங்கும் வரை இரண்டு மூன்று வருடங்கள் காத்திருப்பது; கல்வியில் போதனை முடிந்த பின்னர், பட்டதாரியாக வெளியேறிய பின்னர் தொழிலுக்காகக் காத்துக் கிடப்பது; என்று இளைஞர்களின், காலமும், பெற்றோரின் பணமும் கரைகின்றன:

பட்டதாரி இளைஞனின் பெற்றோர்தமது பிள்ளைக்கு வேலை ஒன்று கிடைத்துவிட வேண்டும் என்று நாளாந்தம் வெளிப்படையாகவும் மனத்திற்குள்ளும் ஏங்குவது உண்டு. அதுவும் அரசாங்கத்துறையில் தமது பிள்ளை தொழில் பார்ப்பதையே யாழ்ப்பாணத்துப் பெற்றோர் இன்னமும் பெரிதும் விரும்புகின்றனர். அதிலும் மிகக்குறிப்பாகயாழ்ப்பாணத்திலேயே ஆசிரியர் தொழில் கிடைத்தால் மெத்தவும் நல்லதாகிவிடும் என்று வேண்டுதல் செய்யும் பெற்றோரே அனேகர்.

அதனால் அண்மையில் பெரும் சர்ச்சையையும் களேபரத்தையும் உண்டாக்கிய பட்டதாரி ஆசிரியர் நியமனம் அனேகமாக யாழ்ப்பாணத்து வீடு ஒவ்வொன்றிலும் பேச்சுக்குரிய பொருளாகியது.

ஒருவரை மற்றவர் சந்திக்கும்போது பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் நிலவிய தாமதம், தெரிவுமுறையில் உள்ள நியாயமின்மை, நேர்மையின்மை, பாரபட்சம், செல்வாக்கு, கையூட்டு, நியமனத்தின் பின்னர் பாடசாலைகள் ஒதுக்கப்பட்டதில் பாரபட்சம் என்று நியமனம் தொடர்பான ஏதோ ஒன்று குறித்துப்பேசாமல் விடுவதில்லை என்ற நிலை;

தமக்குப் பட்டதாரிப் பிள்ளை உண்டோ இல்லையோ நியமனம் குறித்து ஒவ்வொருவரும் கருத்துக் கூறும் மக்கள் அக்கறை உள்ளவிடயமாகியும்அது உள்ளது.

நியமனங்கள் நியாயமான அடிப்படையில் செய்யப்படவில்லை. ஏற்கனவே வேறு அரச தொழிலில் உள்ளோருக்கு நியமனம் கிடைத்திருக்கிறது; ஆனால் வேலையற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை, முதலில் பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும் பின்னர் 2500 ரூபா அலவன்ஸ் மட்டுமே மூன்று வருடங்களுக்கு வழங்கப்படும் என்ற அறிவித்தல் —என்று பலவகையான குற்றச்சாட்டுக்கள், முறைப்பாடுகள் மக்கள் மத்தியில் பேசப்படுகின்றன.

இவற்றில் உள்ள சரி பிழைகள், அதில் சம்பந்தப்பட்டவர்களின் தவறுகள், ஊழல்கள் என்பன தனியாக ஆராயப்பட்டுத் தனிக்கட்டுரையாக எழுதப்பட வேண்டியவை.

### அரசியல் விவகாரமாகி விட்டது

பட்டதாரிகள் நியமனம் யாழ்ப்பாணத்தில், பட்டதாரிகள், பெற்றோர்கள் மத்தியில் பேசப்படும் பரபரப்பான, விடயமாக மட்டுமன்றி அதற்கு மேலாகவும் கடந்து சென்றுள்ளது. ஓர் அரசியல் விவகாரமாக மாறியுள்ளது!

ஈர்த்திருக்கிறது. நானூறு உயிர்களுடன் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் நடவடிக்கை தொடங்குவதற்கு அரசாங்கத்திற்கு பதினெட்டு நாள்கள் தேவைப்பட்டிருக்கின்றன.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி எம். பியான ஏ. எச். எம். அஸ்வர் கவன ஈர்ப்புப் பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்த பின்னர்—அந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் எடுக்கப்படும் தினத்திலேயே—அரசாங்கம் தனது மௌனத்தைக் கலைத்தது; விழித்துக் கொண்டது.

செம்மணியில் பாரிய புதைகுழிகள் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து விசாரணை நடத்துவதற்கு குற்றப்புலனாய்வுப் பணியகத்துக்கு (சி. ஐ. டிக்கு) பாதுகாப்பு அமைச்சு கடந்த புதன்கிழமை உத்தரவிட்டது.

சி. ஐ. டி. விசாரணை ஓர் ஆரம்ப நடவடிக்கையாக மட்டும் இருக்கலாமே அன்றி, புதைகுழியைத் தோண்டுதலும், விசாரணையும் சுயேச்சையாக நடைபெறவேண்டும்.

இது விவகாரத்தில் தீவிர விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிரின் பெற்றோர்கள்— ஜனாதிபதியிடம் நேரில் சென்று முறையிட்டனர்.

அவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து ஆறு மாதங்களாகியும்—ஜனாதிபதி நியமிப்பதாகக் கூறிய சுயேச்சையான விசாரணைக் குழுவில் அங்கத்துவம்பெறுவதற்கென தமது பிரதிநிதியின் பெயரைத் தெரிவித்து நான்கு மாதங்களாகியும் — விசாரணைக் குழுவே நியமிக்கப்படவில்லை.

அரசின் இத்தகைய தட்டிக் கழிக்கும் போக்கினால், தமது பிள்ளைகளுக்கு நேர்ந்த கதி குறித்து எதுவும் அறிய முடியவில்லையே என்ற கவலையில் இருந்த குடாநாட்டுப் பெற்றோருக்கு, புதைகுழித் தகவல் இடிவிழுந்தது போலாயிற்று.

அவர்களின் மன ஏக்கத்தை, உள்ளக் குமுறலை அரசினால், ஜனாதிபதியால் உணரமுடியவில்லை. மேற்கு மாகாண முதல்வராகஇருந்த வேளை சந்திரிகா அம்மையாரும் அவரது கட்சிக்காரரும் இறக்குவானைப் பிரதேசத்தில் உள்ள சூரியகந்தவில் மனிதப் புதைகுழிகள் இருப்பதாகக் கூறி அரசியல் லாபம் தேடியதை எவரும் மறக்கமாட்டார்கள்.

### நல்ல பிள்ளையாக நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியிலும் இது போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள், கொலைகள் நிறைய நடைபெற்றதால் இது விடயத்தில் அந்தக் கட்சி தலையாரியாக நின்று நியாயம் கேட்கும் என்று அரசு எதிர்பார்க்கவில்லை. தமிழ்க் கட்சிகள் கிட்ட வந்து மோதமாட்டா என்பதும் அரசுக்குத் தெரிந்தது தான்.

அதனால் செம்மணி விவகாரத்தை, மெல்ல மெல்ல நகர்த்தி, அடக்கி வாசித்து சமாளிக்கலாம் என்று அரசு நினைத்திருக்கக்கூடும்!

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்ததால் அரசு இனி நல்ல பிள்ளையாக நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிவிட்டது.

செம்மணிப் புதைகுழி விவகாரத்தை கவன ஈர்ப்புப் பிரேரணை கொண்டு வந்து அரசாங்கத்தைச் செயலிழ இறங்க வைக்க ஐக்கிய தேசியக் கட்சியினால் முடியுமானால் —

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளால் ஏன் இயலாமற் போனது?

இதுவே யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் இன்றைய கேள்வி. கவன ஈர்ப்புப் பிரேரணை கொண்டுவந்தால் அரசாங்கத்தைக் களத்துக்கு இழுக்கலாம் என்று ஐ. தே. க. உறுப்பினர் அஸ்வருக்கு உதித்த எண்ணம் தமிழ்க் கட்சி எம். பிமாரில் ஒருவருக்கும் தோன்றாமற் போனது ஏன்?

நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதிகள் அங்கம் வகித்தால்தான் தமிழ் மக்களின் பிரச்சினைகளை, கஷ்டங்களை வெளிப்படுத்தலாம் என்று கூறி அச்சபையின் கதிரைகளில் குந்தியிருக்கும் தமிழ் எம். பி. ஒருவருக்காவது இந்த உத்தி தெரியாமற் போனது ஏன்? அல்லது மறந்து போனது ஏன்?

அரசாங்கத்துடன் ஏன் முட்டி மோதிப் பகைமையை உண்டாக்க வேண்டும் என்றும் உள்ளது போலவே அதனுடன் இசைந்துபோய் நட்பைப் பேணுவதே சிறந்தது என்று தமிழ்க் கட்சிகளும் அவற்றின் உறுப்பினர்களும் கருதி இருக்க வேண்டும்!

அரசாங்கத்திடம் இருந்து பெறுவதற்கு இனி எதுவும் இல்லை என்பது தமிழ் மக்களுக்குப் புரிகின்றது. சந்திரிகாவின் தீர்வுப் பொதி ஆளுங்கட்சியாலேயே தூர வீசப்பட்டுவிட்டது. அப்படியிருக்க எதனைஎதிர்பார்த்து எங்கள் தமிழ் எம். பிக்கள் அரசின் நட்பை முறிக்கத் தயங்குகிறார்கள் என்று ஸ்ரீமான் பொதுஜனம் கேட்கிறார்.

செம்மணி மூலம் அரசாங்கத்தை அம்பலப்படுத்தி, தான் அரசியல் லாபம் தேடுவதற்காகவே ஐக்கிய தேசியக்கட்சி இது விவகாரத்தை கையில் எடுத்திருக்கிறது. அந்தப் பந்தின் மூலம் ஆளும் கட்சியைத் தோற்கடிக்க அது எண்ணியதாலேயே கவன ஈர்ப்புப் பிரேரணையை கொண்டு வந்தது. — என்று தமிழ்க் கட்சிகள் காரணம் கூற முனையலாம்.

தங்களது சொந்த மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமையை பகிரங்கப் படுத்தி நியாயம் கேட்பதில் தமிழ்க் கட்சிகளே முன்னின்றிருக்க வேண்டும். அதை விடுத்து கடிதம் அனுப்பி

[XI ஆம் பக்கம் பார்க்க]

# அரசியல் விவகாரமாக மாறியுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமன விவகாரம்

ஆம்; பட்டதாரி ஆசிரியர் விடயத்தில் வடக்கு —கிழக்கு மாகாண சபை ஆளுநர் காமினி பொன்சேகாவுக்கும், மாகாணசபையின் கல்வி, கலாசார, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாவுக்கும் இடையேயான மோதல் இப்போது அரசியல் விவகாரமாகி விட்டது.

கல்வி அமைச்சின் செயலாளரை ஆளுநர் பொன்சேகா பதவிமாற்றம் செய்ய முயன்ற வேளை, ஜனாதிபதியின் தலையீட்டினால் அந்த மாற்றம் ரத்துச்செய்யப் பட்டது. இதனை ஆளுநர் காமினி பொன்சேகா இப்போது வெளிப்படையாகச் சொல்லி, காரசாரமாகக் கண்டிக்கவும் தொடங்கியுள்ளார்.

இருவருக்கும் இடையே உள்ள முறுகல்நிலை, ஆளுநர் ஜனாதிபதிக்கு எழுதிய காட்டமான கடிதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பணியாற்ற இடமளிக்கிறீர்களா, அல்லது எனது பதவியை ராஜினாமாச்செய்யட்டுமா? என்று ஜனாதிபதியிடம் ஆளுநர் கேட்கும் அளவுக்கு விவகாரம் பூதாகாரமாகி உள்ளது.

ஜனாதிபதியிடம் செல்வாக்குள்ள, சக்தி வாய்ந்த அமைச்சர் ஒருவர், தமிழ்க் கட்சித் தலைவர் ஒருவர் ஆகிய இருவரும் கொடுத்த அழுத்தத்தினாலேயே ஜனாதிபதி ஆளுநர் விடுத்த இடமாற்ற உத்தரவை ரத்துச் செய்தார்:

பட்டதாரி ஆசிரியர் நியமனம் இவ்வாறு அரசியல் விவகாரமாகும் என்று எவரும் கற்பனையும்செய்திருக்க மாட்டார்கள். முறுகல், மோதல் எங்கே போய் முடியும் என்பதைச் சற்றுப் பொறுத்திருந்துதான்பார்க்க வேண்டும்.

செம்மணியில் 400 வரையான யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர், யுவதிகளின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக வெளிவந்த தகவல் அரசாங்கத்தின் கவனத்தைகள் கேட்டுள்ளன. சர்வதேச மனித உரிமை அமைப்புப் பிரதிநிதிகள், நடுவுநிலையாளர்கள், நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் புதைகுழிகள் தோண்டப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கேட்டுள்ளன. இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கம் கட்டாயம் செவி சாய்க்க வேண்டும்; தட்டிக் கழித்து விட்டு, தனக்கு வசதியான விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு புதைகுழிகள் இல்லை என்று கூறிவிடக்கூடாது.

**உள்ளும் புறமும்**
**குறுமுனி**

காணாமற் போனோர் விவகாரத்தில் அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாக நடந்து கொண்ட விதம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியைத் தோற்றுவித்துள்ளது என்பதனை மறந்து விடக்கூடாது.

1996 இல் காணாமற் போனோர் குறித்து விசாரிப்பதற்கு முதலில் படை அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழுவே நியமிக்கப்பட்டது. இது கள்வனைக் கண்டு பிடிக்குமாறு கள்வனிடமே கேட்டுக் கொள்வது போலாகும்.

தமிழ்ப் பெற்றோரின் எதிர்ப்பைத் தொடர்ந்து பின்னர் சிவில் அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவும் பெற்றோர்கள் எதிர்பார்த்த அளவுக்கு அவர்களுக்கு உதவவில்லை. காணாமற் போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற சிறிய தகவலைக்கூட அதனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்த விசாரணைக்குழு வெறும் கண் துடைப்பு என்று கருதியே [illegible] பெற்றோர்கள் — காணாமற் போனோ

ஆனால் அங்கு ஒரு சில எலும்புகள்தான் கண்டு எடுக்கப்பட்டன. அந்த எலும்புகள் கூட, மேட்டுப் பகுதியான, மலைப்பாங்கான, சூரியகந்தவில் மக்களால் புதைக்கப்பட்ட இறந்த மிருகங்களின் எலும்புகளாக இருக்கக்கூடும் என்று சிலர் பகிடியாகக் கூறினார்கள்.

சூரியகந்த சிங்களப் பிரதேசம். அங்கேபடையினரால் கொல்லப்பட்ட மனிதரின் சடலங்கள் இருப்பதாகக் காட்டி ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கரி பூசிவிட்டால், தமக்கு அரசியல் லாபம்—மக்கள் ஆதரவு—வாக்குஆதாயம்—கிடைக்கும் என்று கருதியே அந்தளவு ஆர்வம்காட்டப்பட்டது.

இது செம்மணி. தமிழர் பிரதேசம். இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டு என்பது அரசாங்கத்தின் மீதான குற்றச் சாட்டே.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுப் பொதி என்று அரசு சில காலம் ஆடிய சன்னதமும் அடங்கி விட்டது. பொதி இப்போது பின் கோடிக்கு வீசப்பட்டு விட்டது! எனவே யாழ்ப்பாணத் தமிழர்களின் வாக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் எது எதையோ கொட்டிக் கொடுத்தாலும் கூடக் கிடைக்காது என்பது அரசுக்குத் தெரியும். அதனாலேயே இந்த மௌனம்.

ஐக்கிய தேசியக்கட்சி களத்தில் இறங்கிவிட்டது என்பதால், இனியும் பேசாதிருக்க கூடாது என்பதினாலேயே சி.ஐ.டி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது — என்றே குடாநாட்டு மக்கள் கருதுகிறார்கள்.

பெரிய அளவில், மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட வேண்டிய ஒரு விடயத்தில் அரசு மெதுவாக நகர்வது, அதன் மன விருப்பமின்மையையே, மறைக்க விரும்பும் உள் நோக்கத்தையே உணர்த்துவதாகவே குடாநாட்டு மக்கள் நினைக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா: எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு 'சார்' சாம்ராஜ்ய நினைவுகள்...

ரஷ்யாவில் 'ரொமனோவ்' (ROMANOV) சாம்ராஜ்ஜியத்தின் 300 ஆண்டுகால ஏகாதிபத்தியம் முடிவுக்கு வந்து 80 ஆண்டுகள் கழிந்த பின்பு... அந்த ஞாபகங்களை ரஷ்யா இப்போது மீட்டுப் பார்க்கிறது.

'சார்' (CZAR) சாம்ராஜ்ஜியத்தின் கடைசி மன்னரான இரண்டாவது நிக்கலஸ் (CZAR NICHOLAS — II) மற்றும் அவரது குடும்பத்தவர்களது இறுதிச் சடங்குகள் அவர்கள் அனைவரும் கூண்டோடு கொல்லப்பட்டு 80 ஆண்டுகளுக்குப் பிறகு — ரஷ்யாவில் நடைபெற்று முடிந்துள்ளன.

ரஷ்ய சாம்ராஜ்ஜியத்தின் ஏக போகத்தை, சக்தியை அதன் புகழைக் கட்டி வளர்ப்பதையே தனது வம்சக் கடமையாக வரித்துக் கொண்டு 1894 முதல் 1917 வரை ரஷ்யாவை தனது ஏதேச்சதிகாரத்தின் கீழ் கட்டி ஆண்டவர் மன்னர் நிக்கலஸ்.

அவரது ஆட்சிக்காலத்தில் ரஷ்யர்கள் சந்தித்த அவலங்கள், கொடுமைகள் எண்ணிறைந்தவை. உலகப் பெரும் புரட்சி என வர்ணிக்கப்படும் போல்ஷிவிக் புரட்சியின் போது (BOLSHEVIK REVOLUTION) அவரும் அவரது மனைவி, பிள்ளைகளும் ஒன்றாகக் கொன்றொழிக்கப்பட்டனர். அந்தத் தோல்வியே ரஷ்யாவில் சார் சாம்ராஜ்ஜியத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது.

தோற்கடிக்கப்பட்ட மன்னர் நிக்கலஸும் அவரது குடும்பத்தவர்களும் — 1918 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி போல்ஷிவிக் புரட்சியாளர்களின் முற்றுகைக்குள் அகப்பட்டனர். மன்னர் நிக்கலஸுடன் அவரது மனைவி அலெக்சான்ரா (ALEXANDRA), ஐந்து பிள்ளைகள் (ஒருவர் ஆண் ஏனைய நால்வரும் பெண்கள்) மற்றும் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான குடும்பப் பணியாளர்கள் நால்வர் உட்பட 11 பேர் வீடு ஒன்றின் நில அறைக்குள் ஒளிந்திருந்த போது போல்ஷிவிக்குகளிடம் பிடிபடநேர்ந்தது.

அதன் பின் அவர்கள் என்னவானார்கள் என்பது தெரியாமல் இருந்தது.

'இரத்தக் காட்டேறி' நிக்கலஸ் ஒழிந்தான் என்ற பெரும் நிம்மதியில் அவர்கள் என்னவானார்கள் என்ற ரகசியத்தை அப்போதைய ரஷ்யர்கள் துப்புத்துலக்க முயலவில்லை.

'போல்ஷிவிக்' புரட்சியின் வெற்றி சார் பரம்பரையின் தடயங்களைக் கூட முற்றாக அழித்தது.

ஆனால் சில வருடங்களின் பின்னர்...

நிக்கலஸ் குடும்பத்தை படுகொலை செய்தவர்களில் ஒருவர் அவருக்கு என்ன நடந்தது என்பதை அம்பலப்படுத்தினார்.

1918 ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம் திகதி சார் மன்னரின் கடைசி நிமிடங்களை அவர் பின்வருமாறு விவரித்தார்.

"...'ஆ' என்று அலறுவதற்கு மட்டுமே மன்னர் நிக்கலஸுக்கு அவகாசம் இருந்தது. அதற்குள் புயல் எனப் பாய்ந்த குண்டுகள் அவர் உடலைச் சாய்த்தன ஒன்று... இரண்டு... மூன்று... என ஏனையோரும் பின்னர் ஒவ்வொருவராகச் சுட்டுத் தள்ளப்பட்டனர்... சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களின் கதை முடிந்தது..."

அவர்கள் 11 பேரின் உடல்களும் பின்னர் இரகசியமான இடம் ஒன்றில் புதைக்கப்பட்டு இடத்தை அடையாளங் காணமுடியாதவாறு எல்லாத் தடயங்களையும் அழித்து விட்டனர் போல்ஷிவிக்குகள்.

ஓர் அத்தியாயம் மூடப்பட்டு விட்டதாக கருதப்பட்டது. ஆனால் 73 வருடங்களின் பின்பு — 1991 இல் கம்யூனிஸம் வீழ்ச்சியடைந்து சோவியத் ஒன்றியம் பல நாடுகளாகச் சிதறுண்ட பிறகு — ஓர் உணர்வு பூர்வ கண்டுபிடிப்பு.

ரஷ்யாவின் யூரல் (URAL) மலைப்பிராந்திய நகரமான யக்கற்றரின் பேர்க்கிற்கு அருகே, ஒதுக்குப் புறமான வனப்பகுதியில் இருந்து ஒன்பது மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலான இடங்களில் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த அடையாளங்கள் இருந்தன.


யாருடையவை என அடையாளங்காண முடியாத நிலையில் அந்த எலும்புக்கூடுகள் சிலகாலம் வெறுமனே வைக்கப்பட்டிருந்தன.

எனினும் சில நிபுணர்கள் அவற்றின் தொன்மையை அறிய முற்பட்டனர். அவை எக்காலப் பகுதியைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்பது தெரியவந்தபோது ஆய்வுகள் சுறுசுறுப்படைந்தன.



ஒன்பது சிறியபேழைகளையும் ரஷ்ய சமஷ்டி படை வீரர்கள் சுமந்து வந்த காட்சி.

## வரலாற்று ஏடுகளை திருத்த முயற்சியா?



இரண்டாவது நிக்கலஸ் மன்னர் (1894 — 1917)

சுமார் ஆறரை ஆண்டுகளின் பின்னர் அந்த எலும்புகள் ரொமானோ மன்னர் குடும்பத்தினருடையவையாவென்ற விடை தெரியாத கேள்வி சர்வதேச தடயவியல் நிபுணர்களிடையே எழுந்தது.

தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர ஆய்வின் முடிவில் அந்த ஒன்பது எலும்புத் தொகுதிகளும் மன்னர் நிக்கலஸ், அவரது மனைவி, மூன்று புதல்விகள், அவர்களது குடும்ப வைத்தியர், சமையற்காரர் மற்றும் இரு பணியாளர்கள் ஆகியோருடையவைதான் என்பதை சர்வதேச தடயவியல் நிபுணர்கள் நிரூபித்தனர். ஆனால் நிக்கலஸின் மற்றொரு மகளான மரியா (MARIA), ஒரே புதல்வனான அலெக்ஸி (ALEKSEY) ஆகிய இருவருக்கும் என்ன நடந்தது என்பது தொடர்ந்தும் மர்மமாகவே இருந்தது. அவர்கள் இருவரதும் எலும்புத் தொகுதிகள் காணாமற் போயிருந்தன. அது பற்றி விசாரணை செய்து வரும் நிபுணர்கள் அவர்கள் இருவரது உடல்களும் போல்ஷிவிக்குகளால் எரியூட்டப்பட்டிருக்கலாம் என நம்புகின்றனர்.

மன்னர் நிக்கலஸின் உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட செய்தி உலகை பரபரப்பில் ஆழ்த்தியது. ஆனால் ரஷ்ய தேவாலயப் பிரிவுகளிடையேயும், அரச குடும்ப வாரிசுகளிடையேயும் மாறுபட்ட [illegible] எழுந்தன. எலும்புத் தொகுதிகள் சார் மன்னர் குடும்பத்தினுடையது தான் என்பதை தடயவியல் நிபுணர்கள் உறுதிப்படுத்திய போதும் அதனை அப்படியே ஏற்றுக் கொள்ள ரஷ்ய ஒத்தோடொக்ஸ் தேவாலயம் (RUSSIAN ORTHODOX CHURCH) மறுத்தது.

"...... நிக்கலஸ் புனிதமானவர்; தியாகி. ஆனால் எலும்புகள் அவருடையது தானா என்பதில் நூற்றுக்கு நூறுவீதம் உண்மையில்லை" என்று தேவாலய மதகுருக்கள் கருதினர்.

தொன்று தொட்டுடைப் பிடிக்கப்பட்டு வரும் சார் அரச பரம்பரையின் பாரம்பரிய முறைப்படி அவரது நல்லடக்கம் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சிலதரப்புகளில் இருந்து வந்தபோது இந்த விவகாரம் அரசியல், சமூக, மத ரீதியான பிளவுகளை வெளிக்காட்டியது.

சார் மன்னருக்குமரியாதை செலுத்தப்படுவதை கம்யூனிஸ்டுகள் தீவிரமாக எதிர்த்தனர். எனினும் உடலங்களை சென் பீற்றர்ஸ்பேர்க்கில் நல்லடக்கம் செய்யமுடிவு செய்யப்பட்டது.

**நல்லூர் தாஸ்**

சோவியத் யூனியனின் மறைவுக்குப் பின்னர் இது போன்ற பாரம்பரிய சம்பிரதாயபூர்வ வைபவங்கள் எதுவும் ரஷ்யாவில் நடைபெறவில்லை. எனவே இறுதிச் சடங்குகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதில் அரசில் பிரமுகர்களுக்கு சங்கடமான நிலை ஏற்பட்டது.

இந்த வைபத்தை தவிர்க்க விரும்பி ஒதுங்கியவர்களில் அதிபர் பொறிஸ்யெட்சினும் ஒருவர். அவர் இந்த வைபத்தில் கலந்து கொள்ள மாட்டார் என்றே கடைசிவரை நம்பப்பட்டது. ஆனால் இறுதிச் சடங்குகள் வெள்ளிக்கிழமை (ஜூலை 17) நடைபெற இருந்த போது அதற்கு முதல் நாள் வியாழக்கிழமை (ஜூலை 16) அவர் தமது முடிவை திடீரென மாற்றினார். யாரும் எதிர்பாராத — வியப்பான — முடிவு அது.

'ரொமனோவ்' அரச பரம்பரையின் இன்றைய தலைமுறையினரும் இந்த இறுதிச் சடங்கு விவகாரத்தில் இரண்டுபட்டு நின்றனர்.

அரச பரம்பரையின் ஒரு பிரிவினர் இந்த நிகழ்ச்சியை 'பரிகாசமான ஒரு காட்சி' என வர்ணித்து அதை பகிஷ்கரித்தனர். ஆனால் தற்போது அமெரிக்கா, மற்றும் ஐரோப்பாவில் வசிக்கும் 'சார்' பரம்பரையின் சுமார் 50 உறுப்பினர்கள் செல்.பீற்றர்ஸ் பேர்க்கை வந்தடைந்தனர். தங்கள் உறவினரான கடைசி மன்னருக்கு இறுதி விடை கொடுக்க அங்கு குழுமியிருந்தனர்.

'சார்' மன்னர் குடும்பத்தின் இறுதி ஊர்வலம் யக்கரெறின் பேர்க்கில் இருந்து புதன்கிழமை (ஜூலை 15) ஆரம்பமானது. எலும்புத் தொகுதிகளைத் தாங்கிய ஒன்பது சிறிய பேழைகளும் அரச மரியாதைகளுடன் பொலிஸ்மோட்டார் பவனியாக செல் பீற்றர்ஸ்பேர்க்கிற்கு எடுத்துவரப்பட்டன.

செல்.ஐசாக் சதுக்கத்துக்கு வெளியே வீதியோரம் நீண்ட வரிசையில் காத்து நின்ற மக்கள் அந்த பிரேத பவனியை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் சோவியத் சாம்ராஜ்யத்தின் மறைவுக்குப் பின் பிறந்த இன்றைய ரஷ்யர்கள். அவர்களது முகங்களில் ஒருவித அமைதி......... நிறைந்த மரியாதை...... அவற்றை விஞ்சி வெளித் தெரிந்த சிறிதளவு உணர்ச்சி......

என்ன நடக்கிறது......?

80 ஆண்டுகளுக்கு' முன் மூடப்பட்ட ஓர் அத்தியாயம் மீண்டும் திறக்கப்படுகிறது. ...மறப்போம் ...மன்னிப்போம்...தவறுகளில் இருந்து பாடம் படிப்போம் ... என்ற குரல் உள்ளுக்குள்ளேயே செவிமடுக்கப்படுகிறது.

செல். பீற்றர்ஸ் அன்ட்போல் கதீற்றல் மணி ஒலித்தது. அந்த ராஜ, வைபவத்தில் பொறிஸ் யெல்ட்சின், நிக்கலஸ் பரம்பரையின் சிலடசின் கணக்கிலான உறவினர்கள், 50 நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள், பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் பிரதிநிதி பிறின்ஸ் மைக்கேல் கென்ற், உட்பட பல முக்கியஸ்தர்கள் அங்கு மௌனமாக குழுமியிருக்க இறுதி

(XI ஆம் பக்கம் பார்க்க)

...எண்பது ஆண்டுகளுக்கு முன் — இதே நாளில் மன்னர் நிக்கலஸ் கொன்று புதைக்கப்பட்டபோது 'இரத்தம் தோய்ந்த வரலாற்றின் முடிவாக அது அமையட்டும்' என பெரும்பாலான ரஷ்யர்கள் எண்ணினர்.

இன்று — 80 ஆண்டுகளின் பின் — அதே சார் மன்னருக்கு அரச மரியாதைகளுடன் கூடிய இறுதிச் சடங்கு இடம்பெற்ற போதும் பெரும்பாலான ரஷ்யர்கள் அவ்வாறே எண்ணுகின்றனர்... ...ரஷ்ய வரலாற்றில் தவறுகள் எங்கே, எப்படி விடப்பட்டன?



எப்போது எடுக்கப்பட்டது என்று தெரியாத குடும்ப புகைப்படம். நடுவில் மன்னர் நிக்கலஸ் வலப்பக்கமாக இரண்டாவதாக அமர்ந்திருப்பது. அவரது மனைவி அலெக்சான்ரா, மற்றும் பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் ஒரு கோயில்

தனி ஒருவர் தன்னைத்தன் நிலையிலிருந்து மேன் மேல் நிலைத்து நிறுத்துவதற்காகத் தன்னை ஈடு படுத்திக் கொள்ளும் சமுதாயத்தின் ஓர் அலகே குடும்பமாகும்.

சமுதாயத்தில் இருந்து விடுபட்டுத் துறவு பூண்டு தனித்திருந்து உலக சேமத்திற்காகத் தவம் மேற்கொள்ளும் துறவறத்திலிருந்து குடும்பவாழ்வு முற்றிலும் வேறுபட்டது. குடும்ப வாழ்க்கை என்பது இல்லாளோடு கூடிவாழும் இல்வாழ்க்கையைக் குறிக்கும் இனிய வாழ்க்கை

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை
ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன்''

என்று தெய்வப் புலவர், பெருநாவலர் வள்ளுவர் கூறுகின்றார். துறவறத்தில் போகின்றவரைக் கை தட்டிக் கூப்பிட்டு ''ஐயா! இல்லறத்தை அறத்தின் வழியே நடத்தி பெறும் பயனை விட அதற்குப் புறம்பான துறவறத்தில் போய் என்ன பயனைப் பெறப் போகின்றீர்?'' என்று வள்ளுவர் கேட்பதுபோலத் தோன்றுகிறது.

ஒத்த அன்பும் ஒத்த பண்பும் கொண்ட ஒருவனும் ஒருத்தியும், கற்பியலில் புகுந்து வாழும் வாழ்க்கை நீண்ட நெடுங்காலமாக நடைமுறையில் உள்ளது. அதுவும் தமிழர் இல்லறத்தை நல்லறமாகப் பேணிப் பாதுகாத்து வரும் சிறப்பு மறப்பதற்குரியதன்று. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே மக்கள் மட்டுமல்ல, அன்றில் போன்ற பறவைகளும். குரங்கினங்களும் கூடக் கற்பு நெறி நின்றதாகக் காணக்கிடக்கின்றது. மனித குலம் மண்ணில்நல்லவண்ணம் வாழ்வாங்கு வாழ, ஏற்ற தோற்றுவாயாக குடும்ப வாழ்வு முன்னெடுக்கப்பட்டதனாலேயே இன்றும் அது தொடர்கின்றது எனவே குடும்பங்கள் குலையக் கூடாது.

## குடும்ப அமைப்பின் குறிக்கோள்

குடும்பம் ஒரு கோயில். அந்தக் கோயில் — குடியிருக்கும் வீடு; அதன் கர்ப்பக் கிருகம் — வழிபாட்டு அறை; மூலமூர்த்தி — அக் குடும்பத்தின் குல தெய்வம்; முன்னறி தெய்வங்கள் — தாயும் தந்தையும்; மாமன், மாமி— பரிவார மூர்த்திகள்; பிள்ளைகள் — எழுந்தருளிகள்; பாட்டன், பாட்டி —காவற் தெய்வங்கள்; சுற்றம், ஊரவர் என்போர் வழிபடுநர்; குல குரு அறங்காவலர்: — இப்படியாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அதாவது குடும்பம் என்பதற்கு ஒரு கட்டுக்கோப்புண்டு. இப்படித் தான் இருக்கவேண்டுமென்ற ஓர் எழுதா யாப்பு தேச வழமையாக இருந்தது. அதனை மக்கள் சிக்கெனப் பின்பற்றினர்; செழிப்போடு வாழ்ந்தனர். அப்படி வாழ நாம் வகை செய்ய வேண்டும்.

இல்லறம் என்பது நல்லறம். எல்லா உபகாரச் செயல்களுக்கும் உறைவிடம், உயித்திடமும் அதுவே. பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான் — என்ற வகையில் எல்லோரையும் ஆதரிப்பவனும் குடும்ப வாழ்வில் ஈடுபட்டவனேயாவான். இல்வாழ்க்கையில் அன்பு பண்பாகவும் அறம் அதன் பயனாகவும் இருக்க வேண்டும். சகல நலன்களோடும் இல்வாழ்பவன் வாழ்ந்தால் அவன் தெய்வீகமானவனாகக் கருதப்படுவான்.

இல்லத்தலைவி மாண்புடையவளாயிருந்தால் வளம் பெருகும்; நலம் சிறக்கும்; மனத்திண்மையுண்டாகும்; மங்கலமாகிய அறிவறிந்த மக்கட்பேறு கிடைக்கும்; அவர்கள் சான்றோர்களாக இருப்பர். ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்தும், இவர்களைப் பெற என்ன மாதவம் செய்தோம் என்று எண்ணியும் தாயும் தந்தையும் மகிழ்வர். அந்தக் குடும்பம் குணம் வளர்க்கும் நாற்றுமேடையாகவும், பண்புள்ள ஒரு பல்கலைக் கழகமாகவும் இருந்து நல்ல நல்ல பிள்ளைகளைத் தந்து நாடே சிறப்புறச்செய்யும். இத்தகு குடும்பங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்து குலம் சிறக்க நலம் பெருகும்.

குற்றம் இலாதவர்களாகச் சுற்றத்தையும் சூழலையும் பேணி, ஒற்றுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும், சாந்தியுடனும், சமாதானத்துடனும் இருந்தோம்பி இல்வாழ்ந்து, அற்றாரையும் அயலாரையும் ஆதரித்துத் தம்மைப்போல் அயலவரையும் நேசித்துப் பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறுத்தி நற்றவப் பயன்பெருக, செல்விருந்து ஓம்பி வருவிருந்து காத்திருந்துவேளாண்மை செய்யும் பெற்றியும் பீடும் பெறும் பேறு நம்முன்னோரின் குடும்பத் தலைவர்களுக்கு இருந்தது: இனியும் இருக்கவேண்டும். அதன்மூலம் நாடும் சிறக்க வேண்டும்.

## குடும்பம் சுரக்கும் குணநலன்கள்

ஒரு குலத்தைச் சேர்ந்த குடும்பங்கள் தத்தம் குலத்திற்குரிய நல்லொழுக்கங்களைப் படிஓலைகள் வைத்துப் பேணுவது போல வழிவழி வந்த குலமரபுகளைப் பாதுகாத்து, அடுத்த பரம்பரைக்கு வழங்கின. தந்தையைக் கல்விக்கும், தாயை அறுசுவைக்கும், உடன்பிறப்புக்களை ஒத்துழைப்பிற்கும், உற்றாரை உறவுக்கும், ஊராரை ஒப்புரவிற்கும் உரியவராய் கொண்டு வாழ்ந்தனர்; தாய்வழித் தாயத்தாரையும், தந்தைவழி வந்தவர்களையும் பாசத்தாலும் பற்றாலும் இணைத்து மனிதநேயத்தைப் பெருக்கினர். குணநலமும் குலநலமும் உடையவனாய் வாழையடி வாழையென வருகின்றவனிடத்தே அக் குலத்தின் பண்பின்மை காணப்பட்டால், உலகு அவனை அக்குலப் பிறப்பின்கண்ணே ஐயப்பட்டு ஒதுக்கியும் வைத்தது; ஒதுக்கியும் வருகிறது.

குடிப்பிறப்பானது வளமற்ற நிலையிலும், தேடிவருவோரை அலட்சியம் செய்யாது, இரப்போரையோ, விருந்தினரையோ, சான்றோரையோ முகங்கோண விடாது, ஒழுகலாறு அன்பைச்சுரந்து கொண்டிருந்தது. பொருளை அடிப்படையாக வைத்து உறவைப் பலப்படுத்தாமல், பெற்றார், உடன்பிறந்தார், சுற்றத்தார், ஊரார் என்ற உழுவல் அன்பை அடிப்படையாக வைத்து

# நெடு வாழ்வுக்கு

உறவு பலப்படுத்தப்பட்டது. ''தான் ஆடாவிட்டாலும் தன்தசை ஆடியது'' பணிவுடைமையும் இன் சொல்லும் குடும்பத்தவர்க்கு அணியாக இருந்தன. செய்ந்நன்றி மறவாமையும், நடுவுநிலைமையும், அடக்கமும், ஒழுக்கமும், வெஃகாமையும், புறங்கூறாமையும், தீவினை அச்சமும், ஒப்புரவும், ஈகையும் குடிமரபில் கோலோச்சின. இவ்வாறெல்லாம் நல்லகுண நலன்களோடு ''என் குடியினை உயரச் செய்யக்கடவேன்'' என்று உறுதியெடுத்து அதற்கு ஏற்ற கருமங்களைச் செய்யும் ஒருவனுக்குத் தெய்வத் திருவருளும் தேடி வரும். அப்படி அல்லாதவனைப்பார்த்துத் தெய்வம் நகும்.

## கொள்ளலும் கொடுத்தலும்

கொள்ளலும் கொடுத்தலும் என்று இங்கு குறிப்பிடப்படுவது,

# அதுவே நிலைக்களம்

பெண்ணைக் கொள்ளலையும், பெண்ணைக் கொடுப்பதையும் குறிக்கும். மக்கள் ஆணும் பெண்ணுமாகக் கூடி வாழ வேண்டுமென்பதே உலகப் படைப்பின் அமைப்பாகும். ஆணையும் பெண்ணையும் அன்பாற் பிணித்துப் பொருள் இன்பங்களை நுகர்ந்து இனத்தைப் பெருக்கிச் செல்வக் களஞ்சியங்களான பிள்ளைகளை வளர்த்து, வாழ்வாங்கு வாழ வைப்பதே குடும்பத்தின் அடிப்படையான செயல்வினைகளாகும். இது ஓர் அக ஒழுக்கம். புற ஒழுக்கத்திலும் பார்க்க அக ஒழுக்கமே ஒரு சமுதாயத்தைச் செம்மைப்படுத்த வல்லது. சீராக்கமும் சீர்மியமும் பெற அதுவே துணை நிற்கும்.

அக்காலத் தமிழ் மகளிர் வீரஞ் செறிந்த ஆடவரையே விரும்பினர். அத்துடன் வினை வல்லவர்களாகவும் தம்துணைவர் இருக்க வேண்டும் என்று அம்மங்கையர் எதிர்பார்த்தனர்: மகளிருக்கு ஆடவர் உயிராய் இருந்தனர். ஆடவருக்குச் செய்தொழிலே உயிராயிருந்தது. அப்படியிருந்தாற்தான் உலகு இயங்கும். ஆணுக்குச் செய்தொழிலே உயிர் என்பதால் அவனுக்குத் தலைவியின் பால் அன்பில்லை [illegible] ணுக்கு ஆண் [illegible] ளுக்குச் செய் தொழிலின் பால் ஆர்வமில்லை என்பதோ கருத்தல்ல.

தலைவியின் காரியம் யாவும் கைகொடுக்கவும் இல்லறத்தானுக்குரிய நல்லறங்களைச் செய்யவும் பொருள் தேவைப்பட்டதால் தலைவனுக்கு செய் தொழில் உயிராயிற்று. வளத்தக்கவளாக இருக்க வேண்டியது தலைவியின் பொறுப்பாதலால் அவளுக்கும் தலைவனின் செய் தொழில் செம்மையாக நடைபெற வேண்டுமென்ற ஆர்வமும் இருந்தது. அதேபோல் தலைவனும் தலைவியின் மேல் உயிருக்கு மேலாக அன்பைச் செலுத்தினானெனினும் — தொழிற் சிரத்தையால் அது பிறர்க்கு வெளிப்படையாகவில்லை. ஆனால் தலைவிக்கு அது வெளிப்படையாகத் தெரிந்ததனாற் போலும் அவளுக்கு அவன் உயிராக இருந்தான்,

நா. க. சண்முகநாதபிள்ளை

''கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது ஒன்றில்லை'' என்ற அக ஒழுக்கமும் இருந்தது. இதுவே அறக்கற்பு என்றும் மறக்கற்பு என்றும் மலர்ந்தது. எனவே அன்று ஆணுக்குப் பெண் நிகராக இருந்தாள் என்பதில் என்ன சந்தேகம்?

அன்பும் அறனும் பண்பும் பயனுமாக வாழ்ந்தால் எல்லோரும்சமமே. அப்படியில்லாமல் ''சும்மாகிடக்கும் சங்கை ஊதிக் கெடுப்பானேன்?'' அகவாழ்வு அகவாழ்வாக இருக்கட்டும். புறவாழ்வில் ''அழுக்குத் துணியை அங்காடியில் கழுவிநாற்ற மெடுக்கச் செய்யவேண்டுமோ?''

இனிப் பெண் வளர்ப்பிலும், பெண்ணைக் கொள்வதிலும் கொடுப்பதிலும் குடும்பம் கண்ணியமாக தன் பணியைச் செய்தது. ஒரே பெறுமதியுள்ள தங்கத்தையும், இரும்பையும் நாம் வாங்கித்தங்கத்தைப்பெட்டியில் பூட்டிவைக்கின்றோம்: இரும்பை வீட்டு விறாந்தையில் போடுகின்றோம். தங்கத்தை வீட்டு விறாந்தையில் போட்டால் என்னவாகும்? அல்லாமலும் தங்கத்தில் ஓர் மாக ஏற்பட்டால் அதைத் தூசாகவும் மக்கள் மதிக்கமாட்டார்கள். தங்கத்தில் கலப்புச் கூடக்கூட பெறுமதியும் குறையுமன்றோ!

எமது தமிழர் வழக்கில் தாய் மாமன் பிள்ளைகளைக் கொண்டும் கொடுத்தும் உலகவாழ்வில் அன்பாலும் பண்பாலும் இணைந்தகுடும்பங்கள் உருவாகின. சில இடங்களில் ''மருமக்கள் மான்மியம்'' என்று மாமன்மார் மருமக்களை மணம் முடிக்கும் முறையும் இருந்தது. பிற இடங்களில்மணவினை நிகழ்வதாயின் 16 பொருத்தங்களில் குறைந்த பட்சம் 10 பொருத்தங்களாவது பொருந்த வேண்டும்: அதிலும் தாலிப்பொருத்தம், யோனிப் பொருத்தம், ஆயுட் பொருத்தம் என்பன பொருந்துவதில் கருத்தாக இருந்தனர். 7 இல் செய்வாய்க்கு 7 இல் செவ்வாய் பொருத்தமென்பதையும் உறுதிப்படுத்தினர். இது இரத்தக் கூட்டங்களோடு சம்பந்தப்பட்டது. பிற மணவினைகளைச் செய்யும்போது யோனிப்பொருத்தம் மிகமுக்கியமானது. இல்லறத்தில் பாலுறவில் பூரண திருப்தி ஏற்படுவது இன்றியமையாதது. இதற்கு உறுப்பொத்தல் இன்றி எதுவும் நடக்காது என்பதே நம் முன்னோரின் முடிந்த முடிபாகும்: இதற்கு கண்ணதாசனின் ''அர்த்தமுள்ள இந்து மதம்'' என்ற நூற்றொடரை மீண்டுமொருமுறை வாசகர்கள் புரட்டுவது நல்லது. உறுப்பொத்தல் இன்மையே மணமுறிவுகளுக்கு முக்கிய காரணமென்று உளவியலாளர்களே அடித்துக் கூறுகின்றார்கள். அர்த்தமுள்ள மணவினை தமிழர் சமயவாழ்வில் நிறைந்திருந்தது.

தாய்மாமன் பிள்ளைகள் [illegible] நிறுவனமயமாக்களில் [illegible] பரம்பரை அலுகுகளால் பிணைக்கப்பட்டவர்களாதலால் உறுப்பொத்தல் பெரும்பாலும் பொருத்தப்பாடாகவே இருந்தது. மனமுறிவுக்கு அங்கு இடமேயிருக்கவில்லை. அன்றியும் குடும்பத்தைக் குலைப்பதில் கூட்டுக்குடும்பக் குலமரபில் நாட்டமும் இருக்கவில்லை. குலஞ்சுரந்த ஒழுக்கக்கட்டுப்பாடு, இறுக்கமாகத் தலைவனையும் தலைவியையும் கற்பென்னும் திண்மையால் பிணைத்தது: புறநடையாகப் பொருள்தேடிய இடங்களில் வடிகால்களும் தலைவனுக்கு இருந்திருக்கலாம்: இதனைத் தலைவியர் பெருமனதாகப்பொறுத்துக்கொண்டனர். (கண்ணகி போன்று) எக்காலத்தும் எல்லோரும் கண்ணகிபோல் இருக்க மாட்டார்கள் என்பதையும் நம்மவர் உணர்வது நன்று. கண்ணகி மன்னிக்காள்; மறந்தாள் என்றாலும் மறக்கற்ப மதுரையை எரித்ததையும் தலைவியின் தூய்மையை புடமிட்டு ஒளிரச் செய்ததையும், தமிழர் சார்பாக சிலப்பதிகார இலக்கியப்பிரமா இளங்கோ அடிகள் எடுத்துக்காட்டுகிறார்.

எமது உடல் கனிமங்களாலும், தனிமங்களாலும்ஆக்கப்பட்ட சதைப் பிண்டம். எதிரேற்றம், நேரேற்றம் சேரும் பாங்கில் அவை அமைக்கப் பட்டுள்ளன. சில உலோகங்களை வேறுசில உலோகங்களுடன் சேர்த்து வைத்தால் ஒன்றை ஒன்று அரித்து விடும். சிலவற்றைச் சேர்த்துவைத்தால் ஒன்றை ஒன்று பாதுகாக்கும். இது இரசாயனவியலால் அறியப்படும் அறிவியல் சிந்தனை. வாழ்வியலிலும் ஆண்பெண் இணைவுபொருத்தப்பாடாக அமைதலுக்கும் இந்தச் சிந்தனை முன்னிற்கிறது.

ஆயிரங்காலத்துப் பயிர் என்று வளர்க்கப்படுகின்ற திருமணவாழ்கை பயிர் செழிப்புற நல்ல இணைப்பும் பிணைப்பும் இருந்கால் குடும்பங்கள், சமுதாயம், நாடு, ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் தென்படும். தற்போதுள்ள போக்கு முற்போக்கு என்று மலாம் பூசப்பட்டாலும், அப்போக்கினால் அவலப்படும் நிலையையே நாம் காணமுடிகிறது. பொருந்தா மணவாழ்வினால் அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் எண்ணற்ற அபலைகளை நாம் காண்கின்றோம். பாலுறவு பற்றிப் பரப்பப்படும் செய்திகளும், விமர்சனங்களும் எல்லோரையும் விசனத்திற்குள்ளாக்குகின்றன: இது தேவை தானா?

அண்மையில் மேற்குலக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மணவாழ்விற்கு முன்னர் உடலுறவு அனுபவம் பெற்றிருப்பது அவசியம் என்று கூறியிருக்கிறார். இது சிலருக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்து அது நழுவி வாயில் விழுந்தமாதிரி இருக்கிறது. இது ''கொன்றிடல் போலொரு செய்தி'', ''மன்மதக்கலை சொல்லித்தெரிவதில்லை.''

புதியன கேட்டபோதும் புதியன கண்டபோதும் — புதுமை மோகம் எம்மைப் புரட்டிவிடக்கூடாது. எமது பண்பாட்டை மண்புகுந்து மாய்ந்து விடாது நாம் பாதுகாக்கவேண்டும். மணவினை நலமுறவும் நல்ல குடும்ப வாழ்வு மலரவும் நாம் பணிசெய்வோம்:

''தேவதைகள் கால்பதிக்க அஞ்சும் இடத்திற்கு முட்டாள்கள் முந்திக்கொள்கிறார்கள்.''

''Fools Rush in Where Angels Fear to Tread'' ★

---

## நெப்போலியன் புகழ்



மகாகுரு ஒருவர் மாவீரன் நெப்போலியனிடம், ''சாம்ராஜ்யஆசையோடு நாடு நாடாக அலைகிறாயே! நீ இறந்து போன பின்பு உன்னுடைய சாம்ராஜ்யங்கள் உன்னுடையதாக இருக்கப்போவதில்லை'' என்றாராம்.

அதற்கு வாய்விட்டுச்சிரித்த நெப்போலியன் ''உண்மைதான்! சாம்ராஜ்யங்கள் என்னுடையதாக இருக்காது என்பது எனக்குத் தெரியும். ஆனால் சாம்ராஜ்யங்களை எப்படி அமைக்க வேண்டும் என்ற எண்ணமும், அதற்குக் காரணமாக இருந்த என்னுடைய வீரமும், அந்த வீரத்தினால் ஏற்பட்ட புகழும் இந்த உலகம் இருக்கும் வரை என்னுடையதாகஇருக்கும்!'' —என்று பெருமிதத்துடன் கூறினாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

சஞ்சீவி சிறுகதை

தர்மலிங்கம் வாத்தியாரை கடைசியில் இந்த நிலையில் தான் சந்திக்கவேண்டியிருக்கும் என்று சித்திரா ஒரு நாளும் நினைத்திருக்கவில்லை. மனித வாழ்வில் முதுமை என்பது ஒருவரது இயல்பையும், தோற்றத்தையும் மாற்றிவிடும் தன்மையுள்ளதுதான்...ஆயினும் இளமையின் சுவடு எள்ளளவேனும் இல்லாமல் இப்படி அடியோடு மாறிவிட ஒருவரால் முடியுமா......? வாத்தியாரை கவலையுடன் பார்த்தாள் அவள். 'உப்புக் கூடைக்குள் ஒழுக்கு விழுந்தாற்போல உருகிப்போயிருந்தார் அவர். ஒரு காலத்தில் ஆளுமையின் சிகரமாகத் திகழ்ந்தவர் இவர் தானா என்றவளால் நம்ப முடியாமலிருந்தது. ஆதரவுக்கு யாருமற்றவர்கள் வந்துசேரும் அந்த முதியோர் விடுதியில் அவரும் வந்து சேர்ந்த காரணம்தான் எதுவென்று அவளுக்குப் புரியவில்லை. இவருக்கொரு மகன் இருந்தானே...?

''...சேர் என்னை உங்களுக்குத் தெரியுதோ சேர்...'' ஆவலுடன் வாத்தியாரிடம் கேட்டாள் சித்ரா. அவர் தன் கண்களை அகலத் திறந்து அவளைப்பார்க்க முயற்சி செய்தார். பின் ''ஆரது...?'' என்று கேட்டு அவர் தடுமாறிய வகையில் அவர் தன் பார்வையை இழந்துகொண்டிருக்கிறார் என்னும் உண்மை அவளுக்குப்புலனானது. 'கண்கெட்ட வாத்தி' என்று படிப்பிக்கும் காலங்களில் அடிக்கடி திட்டு வாங்கியது ஒன்றும் தர்மலிங்கம் வாத்தியாரை அன்று பாதித்ததாக இல்லை. ஆனால் இன்று...

''நான் சித்ரா சேர்... நாகநாதன் சித்ரா...உங்கடை மாணவி சேர்...'' சொல்லும்போதே சித்ரா தன் நா தளர்ந்துபோனாள். முதன் முதலாய் அரிவரி வகுப்பில் சேர்ந்து தான் வித்தியாசாலை சென்ற காலம் அவள் நினைவுக்கு வந்தது. அப்போது அழுது ஆர்ப்பாட்டம் செய்த தன்னைத்தூக்கி அரவணைத்து ஆதரவு செய்த வாத்தியார்...

''என்ரை மருமகள் பெட்டைதான் இவள்...எப்பிடி இருக்கிறாள்?'' என்று எந்த வகையான உறவுமில்லாமலே தன்னைத் தூக்கிக்கொண்டு பாடசாலையெங்கும்சுற்றிவந்த வாத்தியார்...

ஆறடி உயரத்தில்...அரபிக் குதிரைபோல்...இரும்பையொத்த உடலமைப்பு அவருக்குப் பொது. கம்பீரமான



இளைஞனாக உடற்கல்வி ஆசிரியப் பதவியேற்று அவள் பாடசாலை சேர்ந்த ஆண்டில்தான் அவரும் அங்கு வந்து சேர்ந்திருந்தார். ஆங்கிலம், பொதுஅறிவு, என்பன அவர் கற்பிக்கும் ஏனைய பாடங்கள். அவர் நின்று கேட்கும் கேள்விகளுக்கு அவரது முழங்கால்களின் கீழே நின்றுதான் சித்ரா அப்போது பதில் சொல்வாள்...அவரது முகம் பார்த்து கதைபேசி முடிப்பதற்குள் இவள் கழுத்தில் வலி கண்டிருக்கும். அதை பின் உணர்ந்தவராய்முதலில் அவளைத் தூக்கி தன்மேசையில் இருத்தி விட்டுத்தான் கதை கேட்பார் அவர்.

''காலையில் என்ன சாப்பிட்டாய்......இந்தச் சட்டை ஆர்வாங்கித்தந்தது...உனக்கு அப்பாவை விருப்பமோ இல்லை அம்மாவை விருப்பமோ......'' இப்படித்தான் அவர் ஏதாவது கேட்பார். அவளோடு பேச வேண்டும் என்னும் காரியம் தவிர அதில் வேறு காரணம் எதுவும் இருக்காது.

முதலாம் வகுப்பு வரையும் சித்ராவோடு இப்படி ஒட்டி உறவாடிக் கொண்டிருந்தவர், அவள் இரண்டாம் வகுப்புக்கு வந்த சமயம் அவளைக் கொஞ்சம் எட்டி வைத்தே கதை பேசினார். ஆயினும் அனைத்துச்சந்தர்ப்பங்களிலும் 'என்ரை மருமகள் பெட்டை' என்றவர் குறிப்பிட்டுப்பேசுவதை மட்டும் குறைத்துக்கொண்டதேயில்லை. அவருக்குஉற்சாகம் பொங்கிவரும் நேரங்களில் அவளது இரு தோள்களிலும் பிடித்து உயரத்தூக்கி, பின் 'தொப்' என்று அவளை நிலத்தில் போட்டுவிட்டுப் போகவும் தவறுவதில்லை.

திருமணமாகாத காரணத்தாலோ என்னவோ பாடசாலையில் வெகு துடிப்பாகவும், ஆர்வத்துடனும் தன் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார் அவர்.

சித்ரா மூன்றாம்வகுப்புக்கு வந்தபோது தர்மலிங்கம் வாத்தியார்தான் அங்கு வகுப்பாசிரியராக இருந்தார். வகுப்பில் அவர் எடுத்த பாடம் ஆங்கிலம். படிப்பிக்கும் சமயங்களில் மிகவும் கண்டிப்பாக இருப்பார். முதன் முதலாக ஏ, பி, ஸி, டி. என்றவர் சொல்லித்தந்ததை எல்லோரும் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்த போது...சித்ரா வேறெங்கோ கவனமாயிருந்தாள். அப்போது அவள் மீது வந்து விழுந்தது ஒரு பிரம்பு. துடித்துப்போய் நிமிர்ந்தவளை எரித்து விடுவதுபோல் பார்த்தார்.

''இனியும் நீ எனக்குச்செல்லமில்லை...உந்தப் பகல்கனவு காணுற வேலையெல்லாம் என்ரை வகுப்பிலை சரிவராது'' என்று கண்டிப்பும், கறாருமாய் எச்சரித்தார்.

''சண்டே, மண்டே......'' என்றவர் கிழமை நாள்களை ஆங்கிலத்தில் சொல்லித்தந்த பின், ஒவ்வொருவராக எழுந்து சொல்லும்படி பணிப்பார். மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள அந்தக் கிராமியப்பாடசாலையில் ஆங்கிலம் கற்பதும்—கற்பித்தலும் என்பது கல்லில் நார்உரிக்கும் கடினமான காரியமே. அநேகம் பிள்ளைகளின் வாய் உச்சரிப்பும் சண்டை, மண்டை என்பது போல்தான் இருக்கும்.

''ஒமடா.........உங்களுக்கு சண்டைபிடிச்சு மண்டை உடைஞ்சுபோச்சுதுஎன்ன?'' என்று கேட்டுச் சிரிப்பார் அவர். சிம்மக்குரலில் அவர் சிரிக்கும் சிரிப்பு பாடசாலை முழுவதையுமே எதிரொலிக்கும். அதை ஒரு நகைச்சுவை என எண்ணி வகுப்பிலுள்ளவர்கள் தாமும் சிரித்து விட்டால்போதும்......அவருக்கு கோபம் தலைக்கேறிவிடும். ஆணென்றும், பெண்ணென்றும்பாராமல் பிரம்பைத் தூக்கி பிள்ளைகளை விளாசித்தள்ளி விடுவார்.

அவருக்கு எதற்குக்கோபம் வரும், எதற்கு வராது என்று யாராலும் திட்டவட்டமாய் ஒரு முடிவும் செய்துவிட முடியாது. எதற்குச் சிரிப்பார், எதற்குக் கொதிப்பார் என்றும் தீர்மானமாய் எதுவும் சொல்லிவிடமுடியாது. பாடசாலையில் அடிபட்டுக்கொண்டிருக்கும் இரு மாணவர்களைக் கண்டாரென்றால் அவருக்கு கொண்டாட்டமாகி விடும்.

''உங்களுக்கு கோழிச் சண்டை தெரியுமோடா'' என்று கேட்டு இருவரையும்

( X ஆம் பக்கம் பார்க்க)

சந்திரா தனபாலசிங்கம்

# மந்திரக்காளி

பகுதி 11

துலங்கத் தொடங்கும் மர்மங்கள்

குறிவைக்கப்பட்டுக் கொண்டிருந்த வாள் மறுகணமேதிசைதிருப்பப்பட்டது—ஒற்றைக் கண் மனிதனால்,

கொலை முயற்சிக்கு எத்தனித்தவனும் அந்த ஒற்றைக்கண் மனிதனும் கட்டிப் புரண்டு போரிட்டார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் விஷம் பூசிய கத்தியால் தாக்கிக் கொண்டார்கள். மயங்கிச் சோரும் வேளையில், ''தம்பி ஆதித்தா?'' என்று அழைத்தான் ஒற்றைக்கண் மனிதன். அவனருகில் சென்று குனிந்த ஆதித்தனிடம் அவனது கடைசி வார்த்தைகளை ஒவ்வொன்றாகச் சொன்னான்.


''நான் தான் முத்து. உன் தந்தையின் விசுவாசமான ஊழியன். இறந்ததாகக் கருதப்பட்டவன். என் எஜமானை அழித்தவனைப் பழிவாங்குவதற்காகவே உயிர் வாழ்ந்தேன். நீ இங்கு வந்தபோது—வந்ததில் இருந்து உன்னை நிழலாகத் தொடர்ந்துகொண்டிருக்கிறேன். நீ அசோகனின் மகன் என்பது சாமித்தாத்தா வேறொருவரிடம் கூறக்கேட்டு எனக்கு... தெரிய வந்தது...தம்பி......உன்னை இரு தடவைகளில் காப்பாற்றி விட்ட திருப்தி எனக்குள் உண்டு. ஒருமுறை அசோக பவனத்தில்...... சூலப் படையணியைச் சேர்ந்தஒருவனால் உனக்கு ஆபத்து நேர இருந்தது.

ஆதித்தனும் நிலாவும் துப்பறிகிறார்கள்

பிறகு இன்று...... தம்பி ...கவனமா... முன்.. னேறு'' அவன் தலை சாய்ந்து விட்டது.

ஆதித்தன் காவல் படையினரை அனுப்பிவிட்டு றெக்சியுடன் வீட்டை நோக்கி ஓடத்தொடங்கினான்.

சத்தமிடாது பின்புறக் கதவால் வீட்டினுள் புகுந்த அவன் டயறியை விரித்தான். தந்தை பல மர்மங்களை அறிய எத்தனை தூரம் கஷ்டப்பட்டிருக்கிறார் என்பதை அவன் தெரிந்து கொண்டான். சில இடங்களில் அவனையறியாமல் அவனது கண்கள் கலங்கின. அவன் அறிந்து கொண்ட விவரங்களின் சாராம்சம் இதுதான்.



அப்பாவித்தனமான கிராமத்துமக்களை 'சூலப்படை' எனும் கூட்டம் ஏமாற்றி வருகிறது. மந்திரவாதி சாம்பவா மக்கள் கவனத்தைத் திருப்ப ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறான். அவனுக்கு இலைமீது மைபூசி சில தூரத்துக் காட்சிகளை அறியும் ஆற்றல் மட்டுமே உண்டு. 'சூலப்படை'யின் எதிரிகளைப் பற்றி, இருப்பிடங்களைப்பற்றி அறிந்து சொல்வது அவன் தொழில். அம்மந்திரவாதியின் பின்னணியில் விஞ்ஞான அறிவுமிக்க ஒருவன், ஒருத்தியின் தலைமை இருக்கிறது.

மந்திரவாதி மெதேன் எனப்படும் எரிகின்ற வாயுவின் உதவியால் திடீரென நெருப்பு வளையத்தை ஆக்கிக் கொள்கின்றான். கத்தியின்றி இரத்தம் உருவாக்குவது சுலபம். பெரிக்குளோரைட்டும் பொட்டாசியமும் [illegible] பாவிக்கப்பட்டுக் குருதி வெள்ளை தோற்றுவிக்க முடியும்.

## சிறுவர்களுக்கான மர்மத் தொடர்கதை

நடுநிசியில் தோன்றும் ஊளை ஒலி, மல்லிகைப்பூ மோகினி, திடீரெனத் தோன்றும் பயங்கரச் சிரிப்பு, கூச்சல் ஒலிகள் திட்டமிட்டு மனிதர்களால் செய்யக் கூடியவை. அச்சமூட்டவேண்டிய சந்தர்ப்பங்களில் பல பயங்கர ஒலிகள் பதிவு செய்யப்பட்ட 'கசெற்றுக்கள்' பாவிக்கப்படுகின்றன.

காளிதேவியின் போர்வையில் மறைந்துள்ள இக்கூட்டம் விஞ்ஞான அறிவு மிகுந்தது. காளி சிலையைச் சுற்றி ஓடும் குதிரை இயந்திரத்தில் பெருமளவு றேடியம் பதிக்கப்பட்டிருக்கலாம். எனவே அது மென்பச்சை ஒளி வீசலாம். இராட்சத நண்டு இயந்திரம் 'ரிமோட் கொன்றோல்' மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஒளி வீசும் மரம் இயற்கையானது. இது உலகின் சில பகுதிகளில் மிக மிக அரிதாகக் காணப்படும் ஜோதி மரமாகும். எனினும் மின்மினிப் பூச்சிகளில் காணப்படும் லூஸிபெறின் (LUCIFERIN) மற்றும் லூஸிபெரோஸ் (LUCIFEROS) என்பவற்றைச் செலுத்துவதன் மூலம் தாவரங்களை ஒளிரச் செய்ய முடியும் என்பது தற்போது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த இரசாயனப் பதார்த்தங்களை புகையிலைக் கன்றுக்குச் செலுத்தி அதனை ஒளிரச் செய்துள்ளனர் இந்திய நிபுணர்கள்.

டயறியைப் படிக்கப் படிக்க ஆதித்தனின் ஆர்வம் அதிகரித்துக் கொண்டே போனது. அக்குறிப் பேட்டின் இறுதிப் பக்கங்களை அவன் நெருங்கிக் கொண்டிருந்தான்.

(அடுத்த இதழில் முற்றும்)

ச. சாரங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இதயத்தூது!

தென்றலைத் தூது விட்டேன்
திசை மாறிப் போனது
அலைகளைத் தூது விட்டேன்
அமைதியில் ஓய்ந்தது
மேகத்தைத் தூது விட்டேன்
காரிருள் மறைந்தது
பறவையைத் தூது விட்டேன்
பசிகண்டு மறைந்தது
இனியாரிடம் சொல்வேன்
என் இதயத் தூதை?

—இ. ரமேஷ்—

## காப்பரண்

விண்ணதிரும் வெடி வெடித்து
வியர்த்து நான் துடிதுடித்து
சண்முகனே சிவனே என
சரணடைந்து போன வேளை
என்னருகில் நீ மட்டும்
எழில் வளமாம் இல்லையெனில்
—இன்று
பண்ணிசைத்துப் பாடுவேனா
பல் கவிகள் எழுதுவேனா
கண்ணிமைக்கும் பொழுதினிலே
கனதியாய் வந்த ஷெல்லை
வண்ணமுனை சிதைந்து என்னை
வகையாய் காப் பாற்றினாயே
என்ன சொல்ல என் உயிரே
ஏற்ற வேளை உன் உதவி
முன்னரேயே கிடைத்தமையால்
முதுகெலும்பு தவறியது
மண் வளமே மட்டுமல்ல
மனித உயிர் காப்பரணே
வண்ண இனிய பனையே உனை
வாழும் வரை எழுதி வைப்பேன்

—மானியூர் ரட்ணேஸ்—

## பண்பாடு பயணமாகிறது

ரிக்கட் கிடைத்தாச்சு
கிளியரன்சும் வந்தாச்சு
இனியென்ன தமிழனே
இங்கென்ன குறையுண்டு
குடி! கூத்தடி!
குள்ள நரியுடன் சேர்ந்து
கும்மாளமிடு!
அழகுராணிப் போட்டியாமே
அடங்கிக் கிடவாதே—நீ
புதுமைப் பெண்!!
போ......போய்க்காட்டு உன் அழகை
பல்லை இழி! பரிசுகிடைத்தால்
தூக்கிக் காட்டு!!
படமெடுப்பார்
ஆராரோ கட்டுவான் தாலி
அணைத்துக் கொள்
அடுத்தவளிடம் போகுமுன்
தெருத் தெருவாய் போஸ்டர்கள்,
தியேட்டரில் புதுப்படமாம்
அம்மணமாய் அங்கே ஆடுவாராம்
ஆஹா அதுவல்லவோ சொர்க்கம்!
ஆயிரம் வோல்ட் ஷொக் அடிக்கும்
பார்! பார்த்து ரசித்திரு!
அரையும் குறையுமாய்
தெருவெல்லாம் திரி!
அதுதானாம் பாஷன்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன்தோன்றிய மூத்ததமிழ்
கம்பன் வளர்த்த தமிழ்
சங்கிலியன் வீரத்தமிழ்
அதற்கென்றோர் பண்பாடு
அதற்கென்றோர் கலாசாரம்
இவையெல்லாம் வெறும் பிதற்றல்
இனியது வாழ்க்கை
இருப்பது சிலநாள்
அனுபவி தமிழா! அனுபவி!
ஆடியடங்குமுன் அனுபவி!
வருங்காலம் வந்தது
தேடட்டும் தமிழனை
தேடிப்பார்க்கட்டும் பண்பாட்டை!

— ஒரு கவிஞன் —

## 'டெலிபோன்'

கைப்பிடித்துத் தொட்டு—ஒரு
கரத்தினிலே ஏந்தி
முகத்தருகே வைத்து
முணுமுணுப்போம் என்றால்
'கிணுகிணு'வெனச் சிரித்தாய்!
கிண்டலோடி அடித்தாய்?!

வாயருகே வைத்தேன்
வார்த்தைகளே பஞ்சம்
பேசுகையில் எச்சிற்
பொறி பறக்கக் கொஞ்சிப்
பேசிடவே ஏற்றுப்
பின் பதிலைச் சொன்னாய்!

பேசுகையில் இன்பம்
பெருக்கெடுக்கு மன்பு—என்
ஆசையினைத் தீர்க்க
ஆவனவே செய்து—பின்
காசுதனைக் கேட்டாய்—அது
கடமையெனக் கொண்டாய்
கூசவில்லை நங்காய்
கூறு பெயரை!
'டெலிபோன்'

—கி. வாயுபுத்திரன்—

## விருட்சம்

ஆதவன் பேரொளி
ஆழப் பருகி
குளிர் நீர் மொண்டு
கொற்றமாய் நிமிர்ந்து

வேர்கள் ஓடி
விழுதுகள் பாய்ச்சி
வீங்கிப் புடைத்து
விண்ணில் ஓங்கி

திசைகள் தோறும்
கிளைகள் ஓச்சி
மலையென விருட்சம்
மண்ணில் நின்றது

கூடுகள் செய்து
குருவிகள் வாழ்ந்தன
கானம் இசைத்து
களித்தன கூவின

வண்ணம் பலவாய்
வாய்த்த போதும்
இனத்தால் பட்சிகள்
என்றவை கலந்தன

ஒலிகள் வேறாய்
உற்ற போதும்
உருவில் ஓரினம்
என்றவை கூடின

கொடுவினை மேவி
கூடிய அந்நாள்
நெடுமரம் அதற்கு
நேர்ந்தது இன்னல்

ஓங்கிய மரத்து
உச்சிக் கொப்பில்
தெறித்தது மின்னல்
தீர்ந்தது முழக்கம்

இலைகள் தழைகள்
எரிந்து கருகின
செழுமை கெட்டு
சிதைந்தது விருட்சம்

உற்றதிசை வழி
ஓலம் எழுப்பி
பட்சிகள் யாவும்
பறந்தன காற்றிலே!

தகித்த வெப்பில்
தண்ணிழல் தந்து
பரந்த பசுமரம்
பட்டுச் சாய்ந்தது!

அண்டிய பூமி
அதிர்ந்து பிளந்தது
எண்டிசை எங்கும்
எதிரொலி கேட்டது!

—வை. சுந்தரேசன்—

## குறளாரைத் தெரியுமா?

''பூச்சியென்று பேர்பெற்றுப் பூமியிலெல் லோரிடமும்
சிச்சியென் றேச்சுவாங்கும் நாளும்''

''கோடி தரினும் குருதிதரார் பூமியில்
தேடிவந் தள்ளுமிக் கூற்று''

''பேசியும் தீர்க்கவே பேரமும் இன்றிவல்
லூசிபோட்டுப் போவார் இவர்.''

''அப்பாவென் றோய்ந்திருக்க விட்டிடாது மாரியில்
தப்பாமல் கேட்குமிதன் பாட்டு.''

''நிலமதிர ஓடும் கிபிர்போல் செவியின்
புலமதிரப் பாடும் இவர்.''

யார் தெரிகிறதா?

பூபாரம் தீர்த்த புயலனைய கண்ணன்போல்
மாபாரப் பூமியை லேசாக்கி—ஏபாவி
என்றே அனைவரும் ஏசக் குருதியைத்
தின்றேதான் வாழும் நுளம்பு.

— தயானி —

## நாளை ஜெயித்திடுவோம்!

பால் பொழிந்த மண்ணின்று சிழ்வடிந்து நிற்குமோ?
பஞ்சப் 'புற்று நோய்' படர்ந்து பாவத்தேசம் தோன்றவா?
சூல்வயிற்றில் வேல்துளைத்து ஆள்இறத்தல் ஞாயமோ?
சொத்தில் ''மண்விழுந்து'' மூட...வீதிவாழ்வு நீளுமோ?
நாளை'வேளை' பூக்குமென்ற நாட்டின் ஏக்கம் சாகுமோ?
நம்பிக்கைகள் நர்முடன் ''விவாகரத்து'' கேட்குமா?
ஏழிசை இழந்த மண்ணில்...கேள்வி கேட்ட தோழனே
எமைநசிக்கும் கல்புரட்ட நெம்பு ஆகு! வெல்லலாம்!

''வாழ்வை கேள்வி'' கேட்டு மண்ணில் பாமடை பரப்புவோம்
வாடிவெந்த வேருயிர்க்க மானநீர் பருக்குவோம்
'தாழ்ந்திழிந்து மாள' வைக்கும் தத்துவம் கொளுத்துவோம்!
சரிசமானம் நாமுமென்ற 'ஐந்தெழுத்து' ஓதுவோம்.
தோள்வலித்து கால்கடுத்த சுற்றம் தூங்க பாடுவோம்
சூட்டுக்காயம் ஆற...எம் 'கண் நீரை' ஊற்றித் தேற்றுவோம்.
சூழுந்திமை யாவும் எங்கள் சிந்தையாலே கொல்லுவோம்.
கோகந்தன்னைக் கைதுசெய்து 'தூக்குமேடை' ஏற்றுவோம்.

எத்தனைநாள் இங்குஇழவு கீதம் வேதம் ஆகிடும்?
எத்தனைநாள் யுத்த தாண்டவத்தின் மேளம் கேட்டிடும்?
அற்புதத்தைக் காண ''ஓர்கை பார்த்து'' நாம் கிளம்பினால்
'அக்கினிப் பரீட்சை' தன்னில் சித்தியெய்தும் நாள்வரும்
பற்றி; வாட்டுந் தீயும்நூரும்! பின்பு மண் குளிர்ந்திடும்
''பச்சைசாத்தி'' இன்பத்தேரில் இந்தமண்ணும் சுற்றிடும்
சத்தியத்தைக் கொண்டதாகம் தீரும்! காயம் மாறிடும்
சாதனைக்குள் திக்குளித்த நம்மைப் பூமி கும்பிடும்!

— அருணன் —

## 'உதை' விழாவும்-ஓர் கதை விளக்குதே!

ஆட்டத்தில் பாவிப்பார் ஓர் பந்தை—அதை
அடித்திட இருபக்கம் முந்திடுவார்
கூட்டமாய் வந்தங்கே நோக்கிடுவார்—கூடி
குதித்தெழுவார் தம்பக்கம் ''கோல்'' புகுந்தால்!

என்னே கொடுமையந்தச் சின்னப்பந்தை—அட
இரு பதினொரு பேர்கள் உதைத்திடுவார்
எண்ணத்தில் எத்தனை விதம்கொண்டு—பலர்
ஏங்கிடுவார் வெற்றி எப்பக்கம்?!

நல்ல விதமாக நடு(வு) நிலைமை—வகிக்க
நடுவர்கள் மூவர் செயற்படுவார்!
வல்ல வராக ஒருவர் அங்கே—விசில்
ஊதிக் குறுக்காலே ஓடிடுவார்!

தட்டியே பந்தினைத் தம்மிடையே—மிக
துள்ளியே கம்பத்தை நெருங்கிடுவார்
விட்டு விடுவேனா எனவுரைத்து—எதிரார்
வீறுடன் பந்தை வெளியடிப்பார்!

அல்லல் ஏதுமில; அணி சேர்ந்து—பந்தை
அலைக்காது கம்பத்துள் செலுத்திடலாம்
இல்லை அதைநானே முதலடிப்பேன்—என
இறுமாந்து ஒரு சிலர் ஆடிடுவார்!

சட்ட விதிப்படி களத்தினுள் ஆடியே—சிலர்
சர்வதேசப் புகழ் பெற்றிடுவார்
திட்ட மிட்டே தம் எதிரியைத் தாக்கி—சிலர்
திரும்பிடுவார் ஆட்டம் முற்றுமுன்பே!

இங்கு கூறிவிட்ட இந்த ஆட்டம்—அட
இரு அணி வீரரும் சின்னப் பந்தும்
எங்கோ இருந்துமே வந்த நடுவர்—அரங்கில்
எண்ணற்றுக் கூடிட்ட ரசிகர் கூட்டம்...

இப்படியே எடுத்துக் காட்டிடலாம்—இன்னும்
ஏராளமாக இயம்பிடலாம்
அப்படியே இவை எங்கோ...—மிக
அச்சொட்டாகப் பொருந்தும் பாரீர்!!

— அனலையூர்ச் சேந்தன்

## அகராதி

### ஏழைகள்

நாளையாகுதல்
வயிறார உண்போ[illegible]
என்று இன்று
அரை வயிற்றுடன்
அயர்ந்து
தூங்குபவர்கள்!

### இடைவெளி[illegible]

உணவுடன்
கடைகள்!
பசியுடன்
குடல்கள்!
இடையில்
விலைகள்!

### குழந்தை!

இரவின் கர்ப்பத்தி[illegible]
குழந்தையாய்
விடியல்!

### கன்னிக் கல[illegible]

ஓ...! பஞ்சவர்ணக்[illegible]
நீ,
அழகாய் இருப்பத[illegible]
கூட்டுக்குள்
சிறையானாய்...!
நான்
அழகில்லை என்பத[illegible]
வீட்டுக்குள்,
சிறையானேன்...!

### எரிகின்றன[illegible]

ஏழையின் குடின[illegible]
அடுப்பைத் தவிர
எல்லாமே எரிகின்[illegible]

—சின்னை. காண[illegible]

## 'ஹைக்கூ[illegible] கவிதைக[illegible]'

### பௌர்ணமி[illegible]

வானப் பெண்ணு[illegible]
சுமங்கலிதான்
பொட்டுவைத்துச்[illegible]
சிரிக்கின்றாளே....

### அஸ்தமன[illegible]

வானப்பெண்
ஏன் முகம் சிவந்த[illegible]
ஓ......
சூரியன்
கடலை முத்தமிடு[illegible]
கின்[illegible]

### பனித்துளி[illegible]

பழுத்த இலை
உதிர்ந்ததைப்
பார்த்து
அழுகின்றாயோ
பச்சிலையே......?

### மழை

வானப் பெண்
அழுகின்றாள்
இங்கு ......
பூமிப்பெண்சிரிக்கி[illegible]

### நிலாப்பெ[illegible]

நட்சத்திர வாலிப[illegible]
கண்ணடித்தனர்
ஓ......
முக்காடிட்டபடி
நிலாப்பெண்ணின்[illegible]

—ஆ[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம் தமிழ்

மூல ஒலித்தமிழ் முந்திய முத்தமிழ்
கால நெடுங்கரை கடந்திடும் பைந்தமிழ்
சீல முதற்றமிழ் செப்பிடும் செந்தமிழ்
கோல எழிற்றமிழ் கொண்டிடும் நம்தமிழ்

வீர நடைத் தமிழ் வென்றிடும் நற்றமிழ்
சார நயத்தமிழ் சான்றிடு சொற்றமிழ்
ஈர நிறைத் தமிழ் இனித்திடும் இன்தமிழ்
கூரறிவுத் தமிழ் கொஞ்சிடும் நம் தமிழ்

நாவலர் ஏற்றிடும் நல்ல நடைத்தமிழ்
பாவலர் பாடிடும் பாங்குடைப் பாத்தமிழ்
காவலர் போற்றிடும் கவினுறு மாத்தமிழ்
பூவலம் வந்த வேற் புண்ணியப் பூந்தமிழ்

தூய நெறித் தமிழ் துலங்கு தெய்வத்தமிழ்
ஆய கலைத் தமிழ் ஆயும் உயிர்த்தமிழ்
தோயு கலைத் தமிழ் தொன்மை மிகு தமிழ்
வாயும் இனித்திடும் வண்டமிழ் நம் தமிழ்

*— கிருஸ்ணசாமி சுவர்ணா —*

## வரம் ஒன்று வேண்டும்

(ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி நடைபெற இருக்கும் ஜீ. சீ. ஈ, உயர்தரப் பரீட்சைக்கு படிக்கும் ஒரு மாணவனின் ஆதங்கம் இது.)

நித்திரை தேவி நித்தமும் வருகிறாள்
தொட்டணைத்து என்னையே தூங்க வைக்கிறாள்!
பத்தரை மணிக்குள் பாயில் விழுத்திறாள்!
பாவி என்னையே படிக்க விட்டிடாள்!

எத்தனை கனவுடன் நான் கல்வி கற்கிறேன்
அத்தனையும் அவள் தளர்ந்திட வைக்கிறாள்
திடமாய் நானும் படிக்க இருக்கையில்
பதுங்கியே வந்து வித்தையைக் காட்டுறாள்

தேவி உன்னை நான் கும்பிட்டுக் கேட்கிறேன்
பாவி எனக்கு நீ வரம் தரவேண்டுமே!
பட்டமும் நான் பெற்று நித்தமும் சிறந்திட
பாங்காய் எனக்கொரு அருள் தரவேண்டுமே!

ஓர்பத்து நாள் தான் எனக்கிங்கு உண்டு
என் முயற்சிகள் நிறைவேறும் நாள் வர இங்கு
தட்சணை எதுவெனினும் தருவேன் நானே
தயவுடன் நீயும் அருள் செய்ய வேண்டும்!

*—உடுவில் ம. மயூரன்—*

## புதிய வாத்திக்கு பழைய வாத்தி கூறுவது

வா தம்பி, ஆசிரிய வட்டத்துள் வந்து விட்டாய்.
வாழ்த்துக்கள் ஆம்தம்பி...
வேறு தொழில் இல்லையென்று வந்தாயா? அன்றி
சேவை செய்ய வேண்டுமென்ற சீரிய நோக்கமா
ஆசிரியர் குறையறிந்த அமைச்சர் பத்திரானாவின்
நேரிய ''சலறி''த்திட்டக் காதலா?
எது வாயிருப்பினும் வருக!
என்பழுத்த வார்த்தைக்கு செவி தருக!

வெளியில் எமைப்பற்றி விதமாய்க் கதைப்பார்கள்
பருவ விடுமுறையும், ''மெடிக்கல், கசுவலொடு''
அரச விடுமுறையும் வருடத்தில் பாதி நாள்
லீவில் இருப்பதற்கு வாத்திக்கு வாய்ப்பென்பர்;
தோட்ட முயற்சிக்கு தோதான தொழிலென்பர்
கேட்டிருப்பீர்!

இதை நம்பி வந்திரேல் ஏமாந்தீர்!
பிரகடனம் செய்யாத அவசிய சேவையிது
சனியும் ஞாயிறும் 'செமினார்' இருக்கும்;
பருவ விடுமுறையில் இணைப்பாடச் செயலிருக்கும்
கலைப்போட்டி, தமிழ்ப்போட்டி, உடற்போட்டி என்று
வருடம் முழுநாளும் பழுவான செயற்பாடு
வெருளாதீர் தம்பி! இன்னும் விரிக்கின்றேன்.

''ஏ எல்லும்'', ''கம்பஸும்'', ''ரீச்சேர்ஸ் ட்றெயினிங்கும்''
எல்லாமே தந்தது; இனியென்ன படிப்பென்று
எண்ணாதே இனித்தான் படிப்புனக்கு
''பென்சன் புகுவரைக்கும் கற்கை நன்றே''
ஒளவையார் இன்றிருந்தால் இப்படித் தான் பாடுவார்

கலைச் சொல் மாறும், கணிப்பீட்டு ''மொடல்'' மாறும்
அமைச்சர் மாற அடியோடு திட்டம் மாறும்
புதுப் புதுச் செய்தியுடன் சுற்றறிக்கை சுற்றிவரும்
எதற்கும் அசையாது, என்றும் சளைக்காது,
படிப்பதற்கும், கொடுப்பதற்கும் தயாராயின் வாதம்பி

வந்துவிட்ட சில நாளில்,
''ஓவர் ரைம் கிளைம்'' இல்லை; வேலையோ ''ஓவர்'' என்று
ஓடிவிட எண்ணாதீர்!
சேவையில் உன்னைத் தேய்த்து
நாளைய சந்ததி ஏத்த
யாகக் குழியில் ஆகுதியாய் வாதம்பி!

நாளைக் கொரு இளைஞன் — உயர்
நாற்காலி விட்டெழுந்து
''சேர் என்னைத் தெரிகிறதா, உங்கள்
சேவையினால் உயர்ந்த
மாணவரில் நானொருவன்'' என்றொரு வார்த்தை வந்தால்
தேகம் புல்லரிக்கும்; தேய்ந்த உடல் பூரிக்கும்
'ஓவர் ரைம்', 'புறமோசன்', பின்தேட்டம் எல்லாம்
வாத்திக்கு இது போன்ற வார்த்தைகளே!

*— புத்தூர் வே. இளையகுட்டி —*

## பாத்துமிகள்

### ஆசையை......?

ஆசையை அடக்கினேன்!
''அற்புதன்'' என்றனர்
ஆசையுள் அடங்கினேன்!
''அற்பன்'' என்றனர்!!

### வீதி விதிகள்!

வீதி விதிப்படி
நடந்தால் நயங்கள்!
வீதி விதிகளைக்
கடந்தால் பயங்கள்!!

### பசி!

பசிக்கு உணவின்றித்
தவிப்போரும் உண்டு!
பசியில்லை யேயென்று
தவிப்போரும் உண்டு!!

### ம(ா)னம்

மனம் தளர்ந்தால்
மானம் தாழும்
மனம் நிமிர்ந்தால்
மானம் வாழும்!!

### மண்!

இறக்கும் வரைமண்
மனிதனின் ஆட்சியில்!!
இறந்தபின் னாலவன்
மண்ணின் ஆட்சியில்!!

### மருந்து

விதிமுறை தழுவினால்
நோய்களைத் தணிக்கும்!
விதிமுறை நழுவினால்
நோய்களை வளர்க்கும்!

### மரணம்

உலக வாழ்க்கையின்
கடைசிக் காட்சி!
வெவ்வேறு விதமாக
அமையுமிக் காட்சி!!

### சக்தி

சக்தி உள்ளவரை
புலன்வழி ஓட்டம்!!
சக்தி அற்றுவிடின்
அரனடி நாட்டம்!!

### துவக்கு

நல்லவர் கைப்பட்டால்
தீயதை அழிக்கும்!
தீயவர் கைபட்டால்
நல்லதை அழிக்கும்!!

### ஜனனம்

தாரணி வாழ்வின்
ஆரம்பக் காட்சி!
தாயின் தலைமையில்
ஆரம்பக் காட்சி!!

### இன்றைய சினிமா

இளைய மனங்களில்
நஞ்சை விதைக்குதே!
உயர்பண் பாடுகளைச்
சிதைத்து அழிக்குதே!!

### கிரிக்கெட்

மக்களின் பொழுதை
வீணடிக் கின்றதே!
மக்களின் உழைப்பைப்
பாழடிக்கின்றதே!!

### மாணவர்

அன்னத்தைப் போலவே
விளங்கிடல் வேண்டும்!
பன்னாடை ஆடுபோல்
விளங்கிடல் வேண்டாம்!!

### சீப்பு

தலைமுடி வார்ந்து
எழில்கூட்ட உதவும்!
''வாழைக்குலை'' யெனப்
பெயர்பெற உதவும்!!

### தண்ட வாளம்

இவைகள் இணைந்தால்
பயணம் இடறும்!
இவைகள் பிரிந்தால்
[illegible]

— [illegible]

## நின்று வாழல் செய்வீரோ?

செந்நெல் விளையுங் களம்யாவும் — நற்
செய்கை யற்றுத் தரிசாச்சு!
கந்தல் உடுத்தும் வறியோரும் — மெய்
காய்தல் கொண்டார் உழைப்பற்று!

ஆழக் கடலில் வலைபோட்டு — கரை
ஆக்கந் தேடுந் துறையோரும்
கூழைச் சமைத்தும் பசிபோக்கா தினம்
கூற்றம் வார்க்கும் நிலை போமோ?

பேசும் மொழியில் பேதங்கள் — நாம்
பார்க்கும் கண்ணில் பேதங்கள்
காசும் கபடும் உள்ளத்தில் — நாம்
காண்ப தென்று நேசங்கள்?

கோவின் வழியில் பேதங்கள் — நாம்
கொன்று போடல் வேண்டும் காண்
நாவின் நுனியில் ஞானங்கள் — நாம்
நின்று வாழல் செய்வீரோ?

பள்ளி செல்லும் பிஞ்சார்க்கும் — ஓர்
பண்பை நெறியை வளர்க்காது
கொள்ளி கூட்டும் மார்க்கத்தில் — நேர்
கொண்டு செலுத்தல் அறமாமோ?

போட்டி பொறாமை நமக்குள்ளே — வாய்
பேச்சு வீரம் துவக்குள்ளே
காட்டித் தராமை பெருங்குற்றம் — ஊர்
கூட்டி மாய்த்தல் திறந்தானோ

ஆயு தங்கள் அரசாளும் — இந்த
ஆமைத் தேசம் துணியட்டும்
தேயு திங்கள் வளர்ந்தூய்மை — தனை
தேடி வானில் உலவட்டும்!

*— மாவை. வரோதயன் —*

## மறக்கப்பட்ட மனிதம்

மனசுகளை இருட்டாக்கிவிட்டு
முகங்களிலே பிரகாசம்
புரிந்து கொள்ள முடிந்தபோது
பலரின்
புன்னகைக்குப் பின்னால்
பூநாகம் சிரித்தது!

என் உயர்வுக்கு
வழிகாட்டுவதாய் வழிசொல்லி
என் முதுகுக்குப் பின்னே
கூன் விழுத்தும் சூழ்ச்சி
புரிகிறது
பொங்கியெழத்தான் இன்னும் முடியவில்லை!

விசுவாசமாயிருப்பதாய் வெளிக்காட்டல்
போனபின்னே புறங்கூறல்
என்னிடம் அவளைப்பற்றியென்றால்
அவளிடம் என்னைப்பற்றி...
இல்லாமலா இருக்கும்?

நியாயம் பேசுவதாய்
நியாயப்படுத்தல்.
நீண்ட வழியிலே
நெடுஞ்சுவராய்க் குறுக்கீடு
தட்டிக்கொடுப்பதாய்ப் பாவனை
தள்ளி விழுத்தச் சரியான தருணம் பார்ப்பு —ஏன்?

பறக்கப் பழக்குவிப்பதாய்
பரம உபதேசம்.
புரிந்து கொள்ளும் போது
புரியாமலே வெட்டப்பட்டிருக்கும்
சிட்டான புறாக்களின்
சின்ன இறக்கைகள்

கரங்கள் நீளும் போது
கட்டப்பட்ட கயிறுகள்
கழற்றப்படாதா என்ற எதிர்பார்ப்பு...
உதிரம் சிந்தும் போதுதான்
உறைக்கிறது
உரிமைக்கரங்களே அறுபட்டுப் போனதென்று...

ஏன் இந்த வேஷம்?
நெஞ்சிலே தாக்காமல்
முதுகில் விழும்
ஓங்கிய குத்தல்கள்
உங்கள் முகத்தை மறைத்திருந்தால்
உணரமுடியாமல் போவோமா?

ஓ... என் இனிய மானிடமே!
உண்மையாய் விசுவாசி
நீ நேசிக்கப்படுவாய்!
மனிதனாய் வாழ்!
நீ மனிதனாய்ப் பேசப்படுவாய்
சொந்தமாய் முயற்சிசெய்!
சொர்க்கமே உனக்குக்கிட்டும்
சொல்லியதொன்றும் பைபிளல்ல;
மனிதா...
உன்னால் மறக்கப்பட்ட மனிதம்!

**— வேலணை ஷணா —**

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

பிள்ளையைப் பெற்று வளர்த்துவிடுதல் ஒன்றும் சிரமமான காரியம் அன்று. மனிதராய் பிறந்தோரெல்லாம் அதைத்தான் செய்கிறார்கள்.

பிள்ளை, பெற்றவர் மானத்தைக் கப்பலேற்றி விடும் போது மனம் தவிக்கிற தவிப்பு சொல்லிமாளாது. வேதனை இதயத்தைக் கீறும். ஊர்ப்பழி இரத்தத்தை உறைய வைக்கும். இதைவிடச் சாகலாம் என்ற நிலை பிறக்கும்.

ஆனால் சரியான பாதைகாட்டிப் பிள்ளையினை உலகம் வியக்க வளர்த்து விடுதல் ஒன்றும் சுலபமான காரியமல்ல. உரிய காலத்தில் வேண்டியன வழங்கி — முன்னேற்ற — சொத்து சுகம் இழந்து — பெற்றவர் படும் கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

இதை உணராத — நன்றி உணர்வில்லாத — பிள்ளை வாழ்க்கையிலே பிரகாசிக்க இயலாது! அதன் வாழ்வு நிறையாது!

உணர்ந்தவன் தந்தைக்குரிய கடமையென்று எதனை செய்துவிடல் வேண்டும்?

பஞ்சுமெத்தைக் கட்டிலிலே மாடமாளிகையில் சிறை வைத்துப் பார்த்தால் போதுமா? அப்பு அப்பு என்று உருகினால் போதுமா?

தன் பெயரோடு தந்தை பெயரையும் உலகினில் பதிக்க வேண்டும்! மகன் பெருமை பேசுபவர்கள் — தந்தையை ஆராயுமளவுக்கு —வியக்குமளவுக்கு முத்திரை பதிக்க வேண்டும். இவனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என ஊர் வியக்க வேண்டும்!

*மகன் தந்தைக் காற்றும் உதவி*
*இவன் தந்தை*
*என்னோற்றான் கொல்லெனும் சொல்*
*— 0070.*

*(மக்கட் பேறு)*

*— அம்பிகைபாகன் —*

## இந்த வார இராசி பலன்

## [25 - 07 - 1998 முதல் 31 - 07 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வி | சனி சந் | | செ வெ |
| கே | இராசிச் சக்கரம் | | *கு புத சந் |
| | | | ரா |
| | | | |

மாற்றம்:- கடகம் இராசியில் சந்திரன் ஆயிலிய நட்சத்திரத்தில் இருக்கும்.

மக்கள் குரல் எங்கும் ஒலிக்கும் காலமாகும். அரசியலில் எதையும் நேர்மையான செயல் என எடுக்க வேண்டாம். திடீர் திடீரென மாற்றங்கள், தாக்கங்கள் அலை அலையாக வந்தபடி இருக்கும் காலமாகும். மத்தியில் கலகலப்பும் — குழப்பமும் — மக்கள் குரலும் ஒலிக்கும். வடக்கில் சோகம், தெற்கில் கெடுபிடி, கிழக்கில் யுத்தங்கள், மேற்கில் புதிய மாற்றங்கள் என எமது நாட்டுப்பலன் இருக்கும்.

உலகில் இந்தியாவின் குரல் ஓங்கி ஒலிக்கும். மேற்கு நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவது போல எமது நாடுகளில் ஆதிக்கம் செலுத்த முடியாது எனச் சொல்வது போல இந்தியாவின் அரசியல் செயல்பாடுகள் இருக்கும்.

மேடம்; என்ன? இறுக்கமான நிலையா? கவலைப்படாதீர்கள். சனீஸ்வரன் உதயத்தில் மந்தபுத்தியைத் தந்து பலதையும் மறக்கச் செய்வான். எதிலும் ஒரு மந்தநிலை, அலுப்பு, அலைச்சல் என சோர்ந்துவிடுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அளவுக்கு மீறிய அதிகாரத்தனத்தால் மற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக நேரிடும். பெற்றோருக்கும், எதிர்பாலாருக்கும் கஷ்டநஷ்டம் ஏற்படலாம். காணிபூமி, வழக்கு கணக்கு என கொஞ்சம் யோசனைகள் ஏற்படச் செய்யும். தர்மச்செலவு, ஆலயதரிசனம் என ஓடித்திரிவீர்கள். காய்ச்சல், வாய்வு, விஷபீடைகள் உஷ்ணபீடைகள், காயங்கள் என சிறுபீடைகள் வரலாம். சனீஸ்வரனின் விதிப்பலன் சிலருக்கு மனவேதனைச் சம்பவங்களைத் தர இடம் உண்டு.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன்.

இடபம்: ''மனுஷனுக்குசூடு சொரணை இல்லையா? நான் கத்திக்கொண்டிருக்கிறேன். அவர் தன்பாட்டில் ஆடாமல் அசையாமல் இருக்கிறாரே: பெரிய தத்துவ ஞானி போல'' என உங்களை எதிர்ப்பாலார்கள் பொரிந்து தள்ளுவார்கள். பொறுமையாக இருந்து செயற்படுங்கள். குடும்பத்தில் சோக நிகழ்வு ஒன்று காத்திருக்கின்றது. வீடு மனை மாற்றம் சிலருக்கு ஏற்படலாம், தொழில் ஸ்தானத்தில் வாக்கால் மேலதிகாரிகளையும் கூட மடக்கி விடுவீர்கள். ரீ. வியில் அதிக நேரத்தை செலவு செய்யாதீர்கள். அதிக அசதி, கை கால்வலி, நெஞ்சுநோ, சிறுநீரக வியாதி சிலரை வருத்தலாம். தகுந்த வைத்தியம் செய்து வரவும். அதனால் நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள்.

நன்மை, தீமை கலந்த உலக வாழ்வில் நடுநிலைமையுடன் வாழப்பழகிக் கொள்ளுங்கள். எந்தச் செயற்பாட்டையும் வருங்காலப் பின் விளைவுகளைச் சிந்தியாது செயற்பட நினைக்காதீர்கள். தொழில்ஸ்தானத்தில் பலமாற்றங்கள் நிகழ இடம் உண்டு. நெஞ்சுச்சளி, பலவீனம் சலவருத்தம், தொண்டை வரட்சி, கை கால் சோர்வு என்பன அடிக்கடி கொடுக்கலாம்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வியாழன்.

சிங்கம்! கொஞ்சம் கலகலப்பாக இருக்கிறீர்களே. நீங்கள் போட்ட திட்டம் தொழில் ஸ்தானத்தில் வெற்றி அளித்துவிட்டதோ? வெற்றி தோல்வி சகஜம். அதிக மகிழ்வும் அதிக சோகமும் அற்ற நடுநிலை வாழ்க்கை முக்கியமாகும். புத்திரராலோ அன்றி சகோதரங்களாலோ உதவிகள் கிடைக்கலாம். உங்கள் கருத்துக்களை ஆணித்தரமாக அறுத்து, உறுத்துக்கூறி மனித சமுதாயத்தில் ஊன்றப்பார்க்கும் காலமாகும். பிறரின் புகழ்ச்சி உங்களின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தலாம், நெஞ்சுப்புகைச்சல், முதுகு, தோள்வலி, நாரிப்பிடிப்பு, வாய்வுத் தொல்லை ஏற்படலாம். முடக்கொத்தான் இரசம் போட்டுக் குடித்துப்பாருங்கள். உடல் இலேசாகும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

கன்னி: நீங்கள் கலங்கக் கூடாது. அடிக்கடி உணர்ச்சி வசப்படாமல் இருக்க முடியாதுதான். சமாளித்துக் கொள்ளுங்கள். நல்லதைச் செய்வதற்கும் நல்லவர்களுக்கும் இவ்வுலகில் அதிக போராட்டம் இருக்கத்தான் செய்யும். பொறுமையாகக் காரியங்களை எப்படிச் சாதிக்க வேண்டுமென்பது உங்களுக்கு நன்கு தெரியும் தானே? தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். அட்டமத்துச் சனியால் எக்காரியத்திலும் தொட்டுத் தொட்டு [illegible]

## சோதிட சஞ்சீவி

மிதுனம்: ஏன் அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டபடி ஓடியாடித் திரிகிறீர்கள். செய்தித் தணிக்கையான காலத்தில் அரசியலைக் கண்ட கண்டபடி கண்ட கண்ட இடங்களில் கதைத்து வீணான வினைகளைத் தேடிக்கொள்ளாதீர்கள். வழக்கு விசாரணை என வருந்த இடம் உண்டு. தொழில் ஸ்தானத்தில் பல தொல்லைகள் தேடிஓடி வரும். அயலவரால் கவலைப்படுவீர்கள். தொற்று நோய்கள், கண்கடி, வாத உளைவு, முதுகு, தலைவலிகள் என்பன ஏற்பட்டபடி இருக்கும். அதிக சலிப்பு உடல்வருத்தங்களைத் தரலாம். அதிக கோபம் நல்லதல்ல. அடிக்கடிகாற்றோட்டமான இடங்களுக்குச்சென்று வாருங்கள்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், புதன்.


கடகம்: இக்காலத்தில் எதற்கும் உங்களுக்கு அளவுக்கு மீறிய அவதிதான். தொழில் ஸ்தானத்தில் இரட்டைப் போக்கு இல்லாமல் நிதானமாக நடந்து வாருங்கள். அல்லது சிலர் பலவிதமான அபிப்பிராயங்களைச் சொல்லியபடி இருப்பார்கள். [illegible] தில் அடிக்கடி சல[illegible] ஏற்பட்டபடி இருக்கும்.

## மகாதேவா ஜோதிடம்

(X ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம்

### புதிர்ப் போட்டி இல. 60



சொற்சிலம்பம் இல. 60
சஞ்சீவி,
861, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ........................................

விலாசம்: ........................................

........................................

.................. இங்கே வெட்டுக ..................

முடிவு திகதி; 31 — 07 — 1998

**இடமிருந்து வலம்**

1. சோர்வால் வருவது. 6. நலம். 7. வியாழ பகவானுக்கு இப்படி ஒரு தகுதி. 9. தமிழில் சிறந்த இலக்கிய நூல். 11. வாழ். 12. இளம் வயதில் செய்யும் பல செயல்கள் இந்த வகையில் அடங்கும். 13. உமது. 14. எமது. 15. விழி. 16. பதில். 18. பூப்படைதலை இப்படியும் கூறுவர். 20. வெற்றியின் படிக்கற்கள். 22. சோரம் போபவள்.

**மேலிருந்து கீழ்**

1. நாற்கவிகளில் ஒன்று. 2. வேள்வி. 3. நிகழ்ச்சி. 4. உறுப்பு. 5. தற்கொலைத் தாக்குதல் நடத்துபவள் 7. இரு நேரசைச்சீர் வாய்பாடு. 8. செயற்படும் தன்மை. 10. சோதிடத்துடன் தொடர்புடையது. 13. மிகச் சிறிய — கூரிய — எனப் பொருள் தருவது. 14. நிறை. 15. சுவாசத்துடன் தொடர்புடைய நோய். 16. குவிகை. 17. உடலில் அரைக்கும் தொழிலைச் செய்வது. 19. அந்தரி. 20. பொருத்தமான என்ற பொருளைத் தருவது. 21. பழு.

### சொற்சிலம்பம் 58 — விடைகள்

**இடமிருந்து வலம்**

1. மசகு. 4. சம்பாதி. 7. இடைப்பம். 9. திரு. 10. பலகணி. 11. சம்சாரி. 12. பாகை. 13. ஆளி. 14. இலை. 16. சிலம்பு. 18. தாமிரம். 20. திகதி. 21. அதிபதி.

**மேலிருந்து கீழ்**

1. மதுரை. 2. சடை. 3. குப்பம். 4. சம்கரி. 5. பாதி. 6. திருக்கை. 8. பலசாலி. 11. சனி. 12. பாலம். 13. அந்தாதி. 14. சிலந்தி. 15. சாரதி. 17. புழுதி. 19. மிக.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: வேல்முருகு சரண்ணியா,
20, காட்டுக் கந்தோர் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

★ இரண்டாம் பரிசு: மை. லட்சுமி,
'சாந்தி' 150, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: செல்வி அ. வளர்மதி,
108, ரயில் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 59 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியே உனது சொத்து

படிக்கப் போகும் பெண்ணே நீ
படித்துப் படித்து முன்னேறு
படித்துப் பல பெற்று — நீ
பாரில் சிறந்த பெண்ணாகு

பட்டம் பெற்றுப் பலனென்ன
பணமும் காலமும் வீண் என்று
மட்டமாய் எண்ண வேண்டாம் — நீ
மாநிலம் புகழும் பெண்ணாவாய்

நமது நாடு மட்டுமல்ல
நானில நாடுகள் எல்லாமும்
தமது பெண்ணின் முன்னேற்றம்
தன்னையே எண்ணும் காலமிது


பெண்ணால் வாழப் போகிறது
பெரிதாம் இந்த உலகமம்மா
கண்ணாய் சிறந்து நிற்பாய் — நீ
கல்வியே உனது சொத்தம்மா.

— தங்கராஜா சுலக்ஷனா —
(ஆண்டு 5, ஆனைப்பந்தி மெ. மி. வித்தி.)

## சிறிய பூச்சிகளை விழுங்கும் பல்லி!

சுவரில் ஊர்ந்து செல்லும் பல்லியை அனைவரும் அறிவோம்.

பல்லியில் பல இனங்கள் உண்டு. அறணை, ஓணான், பச்சோந்தி முதலியன பல்லியினத்தைச்



**பிராணிகள் உலகம்**

சேர்ந்தவையே. நீரில் வாழும் பல்லிகளும் உண்டு. பொதுவாக வெப்பமான பகுதிகளில் பல்லிகள் வாழ்கின்றன. இந்தியா, இலங்கை மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளிலும் இவை அதிகம்.

வீட்டில் காணப்படும்பல்லி மிகச்சாதுவானது; ஒரு தீங்கும் செய்யாது. இது ஒரு விதத்தில் நன்

(XI ஆம் பக்கம் பார்க்க)

## ஒளிந்திருப்பவரை தெரியுமா?



மேலேயுள்ள படத்தில் பச்சைப் புள்ளியிடப்பட்ட அடைப்புகளை ஒரு நிறத்திலும் புள்ளியிடப்படாத அடைப்புகளை ஒரு நிறத்திலும் வர்ணம் தீட்டிப்பாருங்கள். ஒளிந்திருப்பவர் பாய்ந்துவருவார்!

## உயர்ந்தோர் மாட்டு கருணை காட்டு!

அந்தணர் ஒருவர் ஒருநாள் அயலூர் சென்று குடும்பத்துக்கு வேண்டிய பொருள்களை வாங்கி மூட்டை கட்டித் தலை மீது வைத்துக்கொண்டு, தனது ஊரை நோக்கி வந்து கொண்டிருந்தார். இடையில் அடர்ந்த காடு; மாலை நேரம். புதரில் இருந்த வரிப்புலி ஒன்று அந்தணர் மீது பாய வந்தது. வேதியர் வேகமாக ஓடி ஒரு மரத்தின் பின்னால் மறைந்தார். நடுவில் மரத்தை விட்டுப் புலி இரு கரங்களையும் அந்தணரைப் பற்ற நீட்டியது. அந்தணர் வலிமையாக அதன் இரு கரங்களையும் பற்றிக் கொண்டார். நடுவில் மரம் நிற்க, புலியும் வேதியரும் மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். வேதியருக்குக் கைவலிமை குன்றியது. இறைவனை நினைத்து உள்ளம் உருகினார்.

சிப்பாய் ஒருவன், துப்பாக்கியுடன் விடுமுறையில், வீடுநோக்கி அவ்வழியே வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட அந்தணர் அகம் மகிழ்ந்தார்.

''அப்பா! போர் வீரனே! இந்தப் புலியைத் துப்பாக்கியால் சுட்டுவிடு'' என்றார்.

சிப்பாய், ''ஐயரே! ஜீவகாருண்யம் சிறந்தது. புலியும் ஓர் உயிர்; நீயும் ஓர் உயிர். ஆகவே நான் புலியைச் சுடமாட்டேன்'' என்றான்.



வேதியர், ''அப்பா! புலி பல பேரைக் கொல்லும் கொடிய பிராணி; நான் பலருக்கு உதவி செய்யும் உத்தமப் பிராமணன். என்னை நம்பி மனைவி, மக்கள் காத்துக் கொண்டுள்ளார்கள். ஆதலால் புலியைக் கொல். ஆறறிவு படைத்த அந்தணனும் ஐயறிவு படைத்த கொடிய விலங்கும் ஒன்று தானா? எது உயர்வு, எது தாழ்வு என்று பகுத்தறிவினால் பார்க்க வேண்டாமா? ஆபத்து வேளையில் நீ எனக்கு உதவி செய். உனக்குக் கோடி புண்ணியம் வரும்'' என்றார்.

சிப்பாய், ''ஐயரே! நான் ஒரு போதும் அறநெறியை விட்டு விலகமாட்டேன். புலிக்கும் உயிர் வாழ்வில் விருப்பமுண்டு. ஆதலால் ஓர் உயிருக்காக, மற்றொரு உயிரைக் கொல்லமாட்டேன்'' என்று திட்டவட்டமாக மறுத்துவிட்டான்.

அந்தணர் ''அன்பனே! நான் உன்னை வற்புறுத்தவில்லை. புலியைச் சுடவேண்டாம் நெடுநேரமாக நான் சிறுநீர் விட வேண்டிய துன்பத்தால் துடிக்கின்றேன். மனிதன் நின்று கொண்டே சிறுநீர் விடக் கூடாது. ஆதலால் இப் புலியின் கையைப் பிடித்துக்கொள். சிறுநீர் கழித்து விட்டுப் பிறகு வந்து நான் பிடித்துக் கொள்வேன்'' என்றார்.

சிப்பாய் அதற்கு மனம் இசைந்து, ஒரு புறம் துப்பாக்கியை வைத்து விட்டுப் புலியின் கரங்களை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டான். வேதியர் ஒரு புறம் சிறுநீர் கழித்து விட்டு, மூட்டையைத் தூக்கித் தலை மீது வைத்து வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

சிப்பாய்க்குத் தேள் கொட்டியது போல் உள்ளம் திடுக்கிட்டது.

''ஐயா! ஐயா! என்ன ஐயா அநியாயம்! ஒண்ணுக்குப் போய் வந்து பிடித்துக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டு உம் பாட்டுக்கு மூட்டையைத் தூக்கிக் கொண்டு போகின்றீரே! இது தெய்வத்துக்கு ஏற்குமா? வாரும் வாரும்'' என்று அழைத்தான்.

அந்தணர், ''அப்பா! என்னை மன்னிக்க வேணும், நான் ஆசார சீலன், சிறுநீர் கழித்தவுடன் நீராட வேணும், அதிலும் இது சந்தியாவந்தனம் செய்யும் நேரம். ஆதலால் சற்றுப் பொறு. பிறருக்கு உதவி செய்யும் கருணையுடைய உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டாமே. ஆகவே நான் போய் என் கடமைகளைச் செய்து விட்டு வந்து விடுவேன்'' என்றார்.

போர் வீரன், ஈனமான குரலுடன் ''ஐயரே! நான் இளமையான மனைவியை நோக்கிப் போகின்றேன். அவள் என் வரவை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். ஐயா! உன்னைத் தலையால் வணங்கி வேண்டிக் கொள்ளுகின்றேன். இந்தத் துப்பாக்கியை எடுத்துப் புலியைச் சுடும். நீரும் நானும் பிழைக்கலாம்; இருவரும் உய்யுமாறு புலியைச் சுட்டு விடும்.'' என்றான்.

அந்தணர், ''அப்பா! இப்போது தான் உனக்கு நியாயம் பிறந்தது. புலியைப் பார்க்க நீ உயர்ந்தவன். புலி வாழ்ந்தால் பலருக்குத் துன்பம் விளைவிக்கும். நீ வாழ்ந்தால் எத்தனையோ பேருக்கு உதவி செய்வாய். ஆகவே நீதான் வாழ வேண்டும். ஆனால் எனக்குச் சுடத் தெரியாது. ஆதலால் நான் புலியின் கையைப் பற்றிக் கொள்வேன்; நீ புலியைச் சுடு,'' என்றார்.

சிப்பாயும் அதற்கு இசைந்தான். வேதியர் மூட்டையை வைத்து விட்டுப் புலியின் கரங்களைப் பிடித்துக் கொண்டார். சிப்பாய் துப்பாக்கியை எடுத்துப் புலியை 'படார்' என்று சுட்டுக் கொன்றான்.

பின்னர் சிப்பாயும் வேதியரும் அன்பாகப் பேசிக்கொண்டு அவரவர் வீடுகளுக்குச் சென்றார்கள்.

ஆதலால், உயிர்க்கருணை உயர்ந்தோர் மாட்டுக் காட்டுதல் சிறந்தது. தீயவரிடம் கருணை காட்டுதல் பிழை.

''பசுவுக்குப் புல் கொடுத்தால் பால் தரும்; பாம்புக்குப் பால் வார்த்தால் நஞ்சு தரும்.''

— கிருபானந்த வாரியார் —




## பூவிலே புதிர்

நீரிலே உருவாகும் பூ
நீராலே அழியும் பூ? — உப்பு

வாயிலே மலரும் பூ
வந்து வந்து மறையும் பூ? — சிரிப்பு

அவனியிலே தேவையான பூ
சிவனுக்குப் பொருளான பூ? — அன்பு

தண்டனைக்குரிய பூ
தவறுக்கு ஒத்த பூ? — தப்பு

நண்பனிடம் கொள்ளும் பூ
நல்லவரிடம் காட்டும் பூ? — நட்பு

தேய்ந்து அழியும் பூ
தேயும் வரை போடும் பூ? — செருப்பு

உளவு பார்க்கும் பூ
உமிழ்நீரை வெளியேற்றும் பூ? — துப்பு

— வி. உதேஸ், —

## தம்பி

குட்டிக் குட்டித் தம்பி
குறும்பு செய்யும் தம்பி
அம்மா கொஞ்சும் தம்பி
அடம்பிடிக்கும் தம்பி
அக்கா என்னைக் கண்டால்
அணைத்துக் கொள்ளும் தம்பி
பஞ்சுப் பாதம் தூக்கி
பிஞ்சு நடை நடப்பான்
கொஞ்சும் மொழிபேசி—உள்ளம்
கொள்ளை கொள்வான்.

த. ரெமீனா.
(ஆண்டு 5,
மந்துவில் றோ. க. த. க. பாடசாலை.)

## அழியாத சுவடுகள்

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் சந்திரனில் இறங்கிச் சாதனை படைத்த இரு அமெரிக்க விண்வெளி வீரர்களின் காலடிச் சுவடுகள் இன்னும் 5 லட்சம் ஆண்டுகளுக்கு அழியாமலிருக்குமாம்! ஏனெனில் சந்திரனுக்கு வளி (காற்று) மண்டலம் கிடையாது. அதனால் விண்வெளி வீரர்கள் சந்திரனில் பதித்த காலடிச்சுவடுகள் 5 லட்சம் ஆண்டுகள் வரை அப்படியே இருக்குமாம்!

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் விண்வெளி ஆய்வு நிலைய இயக்குநர் ஜேம்ஸ். ஆர். ஆர்னால்ட் இந்த அரிய தகவலைக் கூறியுள்ளார்.

எனினும், வளி மண்டலம் இல்லாததால் சந்திரனுக்கு ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலை உள்ளது. விண்கற்கள் வீழ்வது உள்ளிட்ட பிற விண்வெளிக் காரணங்களால் படிப்படியாகச் சந்திரனில் பதிந்துள்ள வீரர்களின் காலடிச் சுவடுகள் மறைய வாய்ப்புண்டு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1969 ஆம் ஆண்டு அமெரிக்க விண்வெளி வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின் ஆகிய இருவரும் சந்திரனில் இறங்கிச் சாதனை படைத்தது நினைவிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை...

(V ஆம் பக்கத் தொடர்)

உடற்பயிற்சி நேரத்திலும் தனது கர்ஜனைக் குரலில் "லெப்ட், ரைட் — லெப்ட்" என்று சொல்லிப் பிள்ளைகளை அணிநடை செய்விப்பார்: காலைத் தவறுதலாக மாற்றிப்போடும் பிள்ளைகளின் கால்களில் தனது கைக்குக் கிடைக்கும் எந்தப் பொருளையும் தயங்காமல் தூக்கி வீசுவார்,

"உங்களுக்கு இங்கிலீசு விளங்காதோ...... இனிப் பழைய காலம் போலை ஒரு காலிலை சீலைத்துண்டையும் மற்றக் காலிலை ஓலைத் துண்டையும் சட்டி, ஓலைக் கால்... சீலைக்கால், ஓலைக் கால்... சீலைக்கால் எண்டு தான் சொல்ல வேணுமோ? சனியன்... சனியன்..." என்று கத்துவார்.

வாத்தியாரின் தண்டனை முறைகள் மிகவும் பிரபலமானவை என்பதால் பாடசாலை முழுவதற்குமான 'தண்டிக்கும்' ஆசிரியராகவும் அதிபர் அவரை நியமித்திருந்தார். காலையில் 'உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்...' என்ற வகையில் பாடும் தேவார திருவாசகக் கொலைகள் புரிந்த பிரார்த்தனை நேரம் முடிந்தவையோடு அவரது 'நீதிமன்ற விசாரணைகள்' ஆரம்பமாகும். பலவகைப்பட்ட விசாரணைகளோடு முதல் நாள் பாடசாலைக்கு வருகை தந்திராத மாணவர்களும் அங்கு விசாரிக்கப்படுவார்கள். அவர்களால் சொல்லப்படும் காரணங்களோடு பெற்றோரிடமிருந்து கொண்டு வரப்பட்ட கடிதங்களும் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். சரியான காரணங்களின்றியோ அல்லது பெற்றோரின் கடிதமின்றியோ வந்திருந்தால் வருபவருக்குக் கிடைப்பது முறையான பூசையாகத்தான் இருக்கும். அடி தாங்க முடியாமல் ஆ... வென்றலறும் பிள்ளைகளைப் பார்த்து "ஆ... ஊ... அநியாயம்" என்று சொல்லிச் சொல்லி அடிப்பார்.

பெரியவர்கள் போலவே அப்போது மாணவர்களும் அவரைக் "கண்கெட்ட வாத்தி' என்று ஏசிக்கொண்டு போவார்கள். அப்படி ஒரு மாணவன் ஏசியது அவர் காதிலும் விழுந்த போது, பிரம்பை எறிந்து விட்டு அவனைத்தன் காலாலும், கையாலுமே மோதிவிட்ட சம்பவமும் நடந்திருக்கிறது. அவருக்குக் கோபம் வரும் சமயங்களில் கண்கள் இரண்டும் கோவைப்பழங்கள் போல் சிவந்து விடும். அவரது எந்தக் கோபத்திலும் 'மேரி' என்றும் ஒரு பெயரை யாரும் உச்சரித்தால் போதும்... உடனடியாக அவர் ஒருகுளிர் தென்றலாக மாறிவிடுவார்.

மேரி அந்தப் பாடசாலையின் உயர் வகுப்பு ஆங்கில ஆசிரியை; திருமணமானவர். தனது மூன்று பிள்ளைகளுடனும், கணவனுடனும் பாடசாலையின் அருகிலுள்ள தன் வீட்டில் வசித்து வருபவர்... இளமையானவர் அழகாகவும் இருப்பார். ஆயினும் வாத்தியாரை விடவும் சரியாகப் பதினைந்து வயதளவில் மூத்தவர். எந்த விதமான நியாய அநியாயங்களும் பார்க்காமல் மேரி ரீச்சரும், வாத்தியாரும் நெருக்கமாகப் பழகத் தொடங்கியிருந்தனர்.

ஒரு நாள் மிக மோசமாகத் தாக்கப்பட்டு இவரால் காயப்பட்டுப் போயிருந்த ஒருமாணவனின் தந்தையானவர் பாடசாலைக்கு வந்திருந்தார். கையில் கத்தியுடன் அவர் நின்ற கோலமானது அதிபரின் வயிற்றில் புளியைக் கரைத்தது. அவர் ஒரு சீவல் தொழிலாளி. அதனால் தன் பாணியில், காயப்பட்ட மகனை அதிபரிடம் காட்டி, நியாயம் கேட்டார் அத்தந்தை. அவரை ஒருவாறு சமாதானப்படுத்தி அனுப்பி வைத்த அதிபர், தர்மலிங்க வாத்தியாரை தன் அறைக்கு அழைத்து எச்சரிக்கை செய்தார். காயம் வரக் கூடியதாக பிள்ளைகளை அடிப்பது தவறென்று சுட்டிக் காட்டினார்.

வாத்தியாருக்கோ எக்கச்சக்கமான கோபம். விழிகள் இரண்டும் இரத்தமாய்ச் சிவந்து போயின. வழக்கமான தனது தண்டனைக் கருவியான தடித்த பிரம்புத் தடியுடன் வகுப்புக்குத் திரும்பினார். அவர் இல்லாத சமயம் வகுப்பு குழப்ப நிலையில் இருந்தது. அவரது வருகையைக் கண்ட மாத்திரத்தில் பிள்ளைகள் எல்லோரும் தத்தமது இடத்தில் அமைதியாக இருந்து கொண்டனர். கோபத்தில் அவர் வந்த வேகத்தில், அப்பாவியாய் அமர்ந்திருந்த சித்ராவின் முதுகில் தன் பிரம்பால் 'பளீர்' என்று ஓர் அடி விட்டார்: அந்த நேரத்தில் அவள் அணிந்திருந்த தடித்ததோர் துணியாலான சட்டையையும் தாண்டி, அந்த அடி பலமாகி அவள் முதுகு வெடித்துப் போய் விட்டிருந்தது.

வலியை ஒருவாறு சகித்துக் கொண்டு வீடு திரும்பினாள் சித்ரா. போட்டிருந்தசட்டையைக் கழற்ற முயன்ற போது அது முடியாமல் போனது: காயத்தில் ஒட்டிக்காய்ந்து போயிருக்குது சட்டை. அம்மா துடித்துப்போனாள்... "எந்தக்கண் கெட்டவன் இந்த அடி அடித்தான்" எனக் கேட்டுக் கேட்டு கொதித்துப் போனாள். தர்மலிங்கத்தாருக்கு தான் ஒரு கடிதம் எழுதித்தருவதாகவும் அதைக் கொண்டுபோய் அவரிடம் கொடுக்கும்படியும் சித்ராவை அம்மா வற்புறுத்தினாள். அதற்கும் அடி விழுமோ எனப்பயந்த சித்ரா முடியாதென்று ஒரேயடியாக மறுத்து விட்டாள். அதற்காக அம்மா வாத்தியாரை சும்மா விட்டு விடத் தயாராய் இல்லை. எப்படியோ யார் மூலமாகவோ தனது கடிதத்தினை அவருக்கு அனுப்பி வைத்து விட்டாள். அக்கடிதத்தில் தர்மலிங்க வாத்தியாரைக் கிழி, கிழியென்று கிழித்து விட்டு முடிவில் தன் பிள்ளையான சித்ரா மேல் மறந்தும் இனிமேல் கைவைக்கக் கூடாதென்று எழுதி விட்டிருந்தாள்.

வாத்தியார் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு, சித்ராவைப் பார்த்த பார்வையில் அவளுக்கு குளிர் காய்ச்சலே கண்டுவிட்டது. நெடு நாள்கள் அதன்பின்னால் பாடசாலை போகமுடியாமல் காய்ச்சல் அவளைமுடக்கி வைத்துவிட்டது. சித்ரா மீண்டும் பாடசாலை போகத் தொடங்கிய போது தர்மலிங்க வாத்தியார் அவளைப் பார்ப்பதையே தவிர்த்துக் கொண்டார். வகுப்பில் அவளுக்குப் படிப்பிப்பதையோ அவளுடன் பேசுவதையோ கூட அவர் நிறுத்திக்கொண்டார். பிள்ளைகளிடம் வரிசையாகக் கேள்வி கேட்டுக் கொண்டு வருபவர் இவள் முறை வந்ததும் அவளை விட்டு அடுத்த பிள்ளைக்குத் தாவி விடுவார்.

சித்ராவுக்கு இதில் தான் செய்தகுற்றம் என்ன என்பது விளங்கவேயில்லை; அம்மாவிடம் அவள் இதுபற்றி முறைப்பட்டபோது அவள் வெட்டொன்று துண்டுஇரண்டாகப் பதில் சொல்லிவிட்டாள். "எனக்கு உன்னைத் தான் வேணும்...படிப்பையல்ல."

சித்ரா நான்காம் வகுப்புக்கு செல்லும்வரை "வாத்தியாரின் பழிவாங்கல்தொடர்ந்தது. நான்காம் வகுப்பில் வைத்து எல்லாவற்றையும் மறந்து விட்டவர்போல, "என்ரை மருமகள்பெட்டை" என்று மீண்டும் உறவாடத் தொடங்கி விட்டார். அப்போதுதான் பல [illegible] ளில் ஆங்கில ஆசிரியை மேரிக்கும், அவருக்குமிடையில் அவள் ஒரு காதல்தூதாக பயன்பட்டிருக்கிறாள். இன்னதென்று விளங்காமல் அவர் சொல்லுவதை மேரியிடம் சென்று சொல்வதும், பின்னர் மேரி சொல்லிவிடுவதை இவரிடம் வந்து சொல்வதும் சித்ராவின் தூது தொழிலாகிப்போனது.

பின் வந்த நாள்களில் பாடசாலையின் அருகிருக்கும் மேரியின் வீட்டிலேயே வாத்தியார் தங்கிக்கொண்டார்: அந்த ஊரில் அதுஒன்றுதான் மாடி வீடாக இருந்தது: மேல்வீட்டில் வாத்தியாரும் மேரியும் குடித்தனம் நடத்திக்கொண்டிருக்க, கீழ்வீட்டில் மேரியின் கணவர் தன் பிள்ளைகளுடன் மிக நல்ல மனிதராக இருந்துகொண்டார். சித்ரா ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்த போது வாத்தியார் பாடசாலையில் அனைவருக்கும் இனிப்பு வழங்கி தனக்கு ஆண்குழந்தை பிறந்துவிட்ட ஆனந்தத்தை கொண்டாடி மகிழ்ந்தார்!

சித்ரா ஐந்தாம் வகுப்புடன் அந்த ஊர்ப்பாடசாலை தன் படிப்பை முடித்துக் கொண்டாள். மேலே படிப்பதற்காக அயலூரிலுள்ள மகளிர் பாடசாலை ஒன்றில் சேர்ந்துகொண்டாள். ஊரில் யாருக்குமே தர்மலிங்கவாத்தியார் மேல் நல்லபிப்பிராயம் எதுவும் கிடையாது என்பதை போகப் போக அவளால் அறிந்துகொள்ள முடிந்தது. அவரது சண்டித்தனமான போக்குக் காரணமாய் யாரும் அவர் பற்றிய அபிப்பிராயத்தினை வெளிப்படையாகக் காட்டிக்கொண்டது கிடையாது.

பாலியல் உறவுகள் பற்றிய தான எவ்வகையானதோர் அந்தரங்க—அச்ச உணர்வுகளற்ற—இக்காலம் போன்றதல்ல அக்காலம்— ஐம்பதுகளின் பிற்பகுதியும், அறுபதுகளின் முற்பகுதியுமான அக்காலத்தில், ஒரு சின்னஞ்சிறு குக்கிராமத்தில், அவர்களின் அந்த வித்தியாசமான வாழ்க்கைமுறை என்பது, உலக மகா அதிசயங்களுள் ஒன்றாகவே அனைவராலும் கவனிக்கப்பட்டு வந்தது.

சித்ரா தனது கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு கொழும்பு சென்றுவிட்டாள்: அங்கே தன் விருப்பம்போல் பத்திரிகையாளராக பிரபல பத்திரிகை நிறுவனம் ஒன்றில் இணைந்து கொண்டாள். தான் சிறு வயதிலிருந்து மிகவும் விரும்பிப் படிக்கும் அந்தத் தமிழ்ப் பத்திரிகைக்காக அவள் ஆர்வமுடன் பணிசெய்யத் தொடங்கிவிட்டாள்.

அச்சமயத்தில் அவள் ஒரு தடவை ஊர் வந்திருந்த போது, அவளது அக்காவின் இளைய மகன் வந்து அவளிடம் ஒரு கேள்வி கேட்டான்.

"அன்ரி நீங்கள் சின்னனிலை என்னைப்போலை சரியான குழப்படியோ?" என்று. அக் கேள்விக்குப் பதில் பெறும் வகையில் அவன் ஒரு விடாக்கண்டனாக மாறி தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தான். சித்ராவுக்கு அது ஒரு பெரிய பிரச்சினையாகவே தோன்றியது.

இறுதியில் அவனது அக் கேள்விக்குப் பதில்சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் அவளுக்கேற்பட்டது. 'இல்லையடா தம்பி...அன்ரி ஒரு நாளுமே குழப்படி செய்யிறதில்லை!' "என்றாள் அவள்.

"அப்ப ஏன் உங்களுக்கு முந்தி தர்மலிங்கம் சேர் அடிச்சவர்?"

"தர்மலிங்கம் சேர்எனக்கு அடிச்ச கதை உனக்கெப்பிடித்தெரியும்?"

"அவர்தான் சொன்னவர்!"

"என்ன சொன்னவர்?"

"எனக்கு முதுகிலை தடியாலை இறுக்கி அடிச்சுப் [illegible] போய்க்கேன் என்றை அடி எப்பிடி எண்டு சொல்லுவா...எண்டு சொன்னவர்!"

சித்ராவின் மனத்திரையில் அந்தப் பழைய சம்பவமானது மீண்டும் நிழற்படமாக ஓடியது: 'ஓ...வாத்தியார் மாறவே இல்லை. காலங்கள் மாறியும் அவர் இன்னும் அதே பழைய வாத்தியார் தான். அந்தப்பாண்டியமன்னனிடம்தண்டனை பெற்ற சிவபெருமான்கள் இன்னும் எத்தனையெத்தனையோ......?'

நீண்ட காலம் கழித்து இன்று அந்த அரசினர் முதியோர் விடுதியில் வைத்து தர்மலிங்கம் வாத்தியாரைச் சந்திக்கிறாள். தான் பணியாற்றும் பத்திரிகையின் வார இதழுக்கு அந்த விடுதியைப் பற்றியதான விவரமான கட்டுரை ஒன்றினை அவள் தயார் செய்ய வேண்டும்.

"நான் சித்ரா சேர்..." அவள் மேலும் மேலும் தன்னை அறிமுகம் செய்து கொண்டதில் அவர் அவளைப் புரிந்து கொண்டார்.

"சேர்மேரிரீச்சர்எங்கை?"

"ரீச்சர் தன்னுடைய பிள்ளையளோடை கனடாவுக்குப் போய்ச் சேர்ந்திட்டா!"

'உங்கடை மகன் கோபி...'

"அவன் வந்த மாதிரிப் போய்ச் சேர்ந்திட்டான்!"

"எங்கை சேர்?"

அதற்குப் பதிலாக அவர் தனது இரண்டு கைகளையும் மேலே தூக்கிக் காட்டினார்! வாத்தியாரின் ஒளியிழந்த கண்களில் இருந்தும் கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. சித்ரா கவலையுடன் அவரைப்பார்த்தாள். வாத்தியார் பாவம்! அவர் அன்று மேரிரீச்சரின் வலைக்குள் விழாமல் இருந்திருந்தால்... முறையானதோர் குடும்ப வாழ்க்கையைத் தனக்கென அவர் அமைத்துக்கொண்டிருந்தால் ...நிச்சயம் இன்றவர் ஒரு பூரணமான முழு மனிதனாகப் பிரகாசித்திருப்பார். வாத்தியார் பாவம்! ★

(யாவும் கற்பனை)

# இந்த வார இராசி...

(VIIIஆம் பக்கத்தொடர்ச்சி)

உளைச்சல், தலை அம்மல், பல்வலி என வருத்தும். தகுந்த வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

துலாம்; கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலை ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டி தான். மேலதிகாரிகளின் கண்டிப்பு இருக்கும்; கிரித்துச் சிரித்து காரியங்களைச் சாதித்துவிடுங்கள்: கலை ஆர்வம் அதிகரிக்கும். ரீ.வி. பார்க்க அடிக்கடி நேரம் ஒதுக்கியபடி இருப்பீர்கள். இப்பொழுது பொழுது போக்கில் மக்கள் திருப்தி காண்பது ரீ.வியில் தானே! வயிற்றுக் கோளாறு, தலைவலி, தேகத்தில் கடி, மல, சல உபாதைகள் சிலரை வருத்தலாம். எதிலும் நிதானமாக இருப்பதனால் சில காரியங்களை உங்களால் சாதிக்க முடியும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

விருச்கிகம்: உங்களை எவருக்கும் காட்டிக் கொள்ளாமலே காரியங்களைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறீர்கள். அதுவும் சரிதான். இரகசியமான நிலை எதற்கும் நல்லது. தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும், சாந்தமும், எதிர்ப்பும் கலந்தபோக்கு உங்களிடம் காணப்படுகின்றது. பாவ, புண்ணியத்தை சமநிலையில் அணுகிப்பாருங்கள். உண்மை விளங்கும். கிருமித்தாக்கம், உஷ்ணபீடைகள், வயிறு, நெஞ்சு வாய்வு நோக்கள், திடீர் விபத்து அல்லது அடிகாயங்கள் சிலருக்கு ஏற்படும். கவனமாக இருந்தால் நன்று.

★ அதிர்ஷ்டநாள்; புதன், வியாழன்.

தனுசு உங்கள் மடியில் கனமும் இல்லை. மனதில் பயமும் இல்லை. உள்ளத்தை அடிக்கடி உரைத்த ஊராரின் பேச்சுக்கும், குடும்பத்தவரின் புறுபுறுப்புக்கும் ஆளாகாத நாளும் இல்லை என்ற நிலைஏற்படும். செல்வாக்கை நிதானப்படுத்தி வாருங்கள். அல்லது தொழில் ஸ்தானத்தில் கூட உபத்திரவங்கள் வரத்தான் செய்யும்; நல்ல மனம் எப்பொழுதும் போராடத்தான் செய்யும்; இருப்பினும் பிறரின் அலுவல்களில் தலையிடாதீர்கள். வாய்வு, சளி, கைகால் பிடிப்பு, இடுப்புவலி என அடிக்கடி சொல்லுவீர்கள். ஆனால் இலேகில் மருந்திற்குப் போகமாட்டீர்கள். எதிலும் மிதமாக இருந்தால் எதையும் சமாளிக்கலாமல்லவா?

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

மகரம்: எதிர்ப்பாலாருடன் அடிக்கடி கோவிக்காதீர்கள். தொழில் ஸ்தானத்தில் எதையும் மறைக்க முடியாது. திட்டமிட்டுச் செயற்படுவதும், பொறுமையாக இருப்பதும் உங்களுக்கு கஷ்டமல்ல. எதிலும் இடாம்பீகம் இன்றிச்செயற்படுங்கள். நல்ல பலன்களைக் கொடுக்கும். உடல்நலத்தில் இக்காலத்தில் கவனமாக இருக்கவும். தோல், வயிறு, கைகால், தலை போன்ற இடங்களில் ஏதாவது தொல்லைகள் கொடுக்கலாம்: சாப்பாட்டைப்பொறுத்த மட்டில் நிதானமாக இருக்கவும். சகிப்புத்தன்மை மிக்க நீங்கள் பொறுமையுடன் உங்கள் செயற்பாடுகளைச் செய்து வெற்றி அடையுங்கள், ஊக்கத்தைப் பொறுத்து முன்னேற்றப்படியில் ஏறியபடி இருப்பீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன்.

கும்பம்: எதிலும் வெளிப்படையானவர்கள் நீங்கள். திடீர்திடீரென எதிலும் நம்பிக்கையும் நம்பிக்கையற்றும் மாறி மாறிப் பேசியபடிஇருப்பீர்கள். பழைமையில்புதுமை காணுவீர்கள். தொழில்ஸ்தானத்தில் சட்டதிட்டப் படியும் சம்பிரதாயப்படியும் நடந்து கொள்ளுவீர்கள். ஆயினும் இடைக்கிடை மனம் குழம்பி எல்லோரையும் கலக்கிவிடுவீர்கள். தனிமையில் என்ன செய்கிறீர்கள் என்று யாரும் கேட்டால் கோவிக்காதீர்கள், சிரித்து சமாளித்து வாருங்கள். நாரிநோ, கைகால் பிடிப்பு, நெஞ்சுப்படபடப்பு, தலைச்சுற்று என்று அடிக்கடிவருத்தும். உங்களுக்கு ஓய்வும் தெய்வவழிபாடும் மிக முக்கியம்.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள், வியாழன்.

மீனம்: உலகில் எதிர்நீச்சல் போட்டவர்கள்தான் வெற்றி அடைந்துள்ளார்கள். ஏழரைச்சனிதாக்குகின்றதே: எனக்கு ஒரே அலைச்சலாக இருக்கின்றது. எந்தக்காரியமும் சரிவரவில்லை எனக் கலங்காதீர்கள். சனீஸ்வரன் கெட்டவனானாலும் வணங்குகிறவர்களை கைவிடமாட்டான். அலை அலையாக வேதனை சோதனை வந்தாலும் ரேவதிக்காரர்கள் கலங்கவேண்டாம். மிகவிரைவில் நன்மைகள் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் உடனுக்குடன் பொறுமைகாசாக்குங்கள்: சிரித்து சிரித்துக்காரியமாற்றுங்கள். கைகால்வலி, வாதவிறைப்பு, சளியால் தொல்லை, உஷ்ணபீடைகள், கிருமித்தாக்கங்கள் கொடுக்கும். எந்த விஷயத்தையும் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. குலதெய்வ வழிபாடு மிகமுக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்; திங்கள், வியாழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றில்...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

னோம்; முன்னர் குரல் கொடுத்தோம் என்று காரணம் கூறித் தங்களைத் தாங்களே ஏமாற்றுகிறார்கள் இவர்கள்!

தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் இத்தகைய இளக்காரமான போக்கினாலும் அணுகுமுறையினாலும் அவர்களால் எதனையும் ஈட்ட முடியாது; சாதிக்க முடியாது என்பது நிச்சயம்.

இப்படிச் செய்தால் அப்படியாகி விடுமோ என்று கற்பனாச்சத்தில் மூழ்கியிருக்கும் எந்தத் தலைவராலும், கட்சியாலும் மக்கள் குறை தீர்க்க முடியாது.

இன்றைய தமிழ்க் கட்சிகளின் நிலையும் அதுவே என்று நமட்டுச் சிரிப்பை உதிர்க்கிறார் ஸ்ரீமான் பொது ஜனம்!

★ ★ ★

## தூரப் போகும் ரத்வத்தை

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும் இடையில் மனப்பிணக்குத் தோன்றியுள்ளதாக கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சர் அனுரத்த ரத்வத்தையின் 60 ஆவது பிறந்த தினக்கொண்டாட்ட நிகழ்வில், அரசாங்கத்தின் தீர்வுப் பொதியை மிகக் கடுமையாக எதிர்க்கும் சோபிததேரர் முக்கிய பங்கு கொண்டார். அவரே பிரதான பூசை, புனஸ்காரங்களை எல்லாம் நடத்தி ரத்வத்தையை ஆசீர்வாதமும் செய்திருக்கிறார்.

இதனால் ஜனாதிபதி சந்திரிகா மிகவும் கோபம் அடைந்திருக்கிறார். இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அவருடன் ஒரு வார்த்தைதானும் சந்திரிகா பேசவில்லை. பிரதி அமைச்சரும் ஜனாதிபதியுடன் பேச விருப்பமின்றித் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தார் என்று தகவல்.

அமைச்சர் ரத்வத்தையின் பிறந்த தின நிகழ்வுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்புக் கிடைத்தும்போகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் ரத்வத்தை சோபித தேரர் பக்கம் போயுள்ளதால் அரசின் தீர்வுப் பொதியை எதிர்க்கும் அணியினராகி விட்டார். ஆகையால் தீர்வுப் பொதி இனி "கட்டையில் ஏறி விடும்" என்று ஐக்கிய தேசியக் கட்சி கருதுகிறது. அதனால் எழக் கூடிய பிரச்சினைகள், தலையிடிகள் இல்லாமற் போகும் என உறுதியாக நம்புகிறார்கள் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள்.

இதே வேளை சகோதரர் அனுர பண்டாரநாயக்காவை ஆளும் கட்சியில் சேர்க்க சந்திரிகா விருப்பம் கொண்டுள்ளார் என்பது ஊர்ஜிதமாகி உள்ளது

தம்பியாரை ஆளும் கட்சியில் சேர்ப்பது குறித்து ஜனாதிபதி அண்மையில் அமைச்சர்களுடன் வெளிப்படையாக ஆலோசனை நடத்தியுள்ளார். அவர்களில் பலர் ஆதனை விரும்பவில்லை.

எனினும் தம்பியாருக்கு ஐக்கியதேசியக் கட்சியில் எதிர்காலம் இல்லைஎன்றும், அவரைத்தமதுபக்கம்சேர்க்குமாறு தமது சகோதரி சுனேத்திரா தன்னிடம் அடிக்கடி கேட்டுவருவதாகவும் ஜனாதிபதி அமைச்சர்களிடம் கூறியிருக்கிறார்.

இப்போது தமக்கும் தம்பியாரைச் சேர்த்துக்கொள்ள விருப்பம் உண்டு என்றும் ஜனாதிபதி அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளார்.

அனுருத்த வேறுதிசை நடக்கத் தொடங்கி இருப்பதால், தம்பியாரைத் தமது அணிக்குள் சேர்ப்பதற்கு சந்திரிகா விரும்புவது இயல்பே என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கிறார்கள். இரத்தம் தண்ணீரைவிடத் தடிப்பானது என்பார்கள். சொந்தம் என்றால் தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும்என்பது அரசியலுக்கே நூறுவீதம் பொருந்தும்.

# செவ்வாயில் தோன்றி...

(I ஆம் பக்கத் தொடர்)

றான உண்மையற்ற பாதையில் நம்மை இட்டுச் செல்கின்றது என்று ஒரு கூட்டம் புலம்பித் தீர்க்கிறது.

மேலும் 'வைகிங்' எடுத்த புகைப்படக்கோணம்போலச் சரியாக அரைப் பங்கு கோணம் மட்டுமே எம். ஜி. எஸ். படம் பிடித்துள்ளது.

இதுவும் கொஞ்சம் குழப்பும் வேலைதான். அதாவது 'வைகிங்' தன் கமெராவை 40.77 பாகைக் கோணம் வடக்குதிசை நோக்கி நிறுத்திப்படமெடுத்தது. எம். ஜி. எஸ் இதிலிருந்து மாறுபட்டு 40. 67 பாகை வடக்கு திசை நோக்கி தனது கமராவை நிறுத்திப் படமெடுத்துள்ளது. இந்த மாற்றத்தால் ஒரு படத்துக்கும் இன்னொரு படத்துக்கும் 17 கிலோ மீற்றர் இடைவெளி வித்தியாசம் ஏற்படவாய்ப்புண்டு. ஆகவே எம். ஜி. எஸ். முக அச்சிலிருந்த விலகிபல கிலோமீற்றர் தள்ளியிருக்கும் வேறொரு பாறைக் கும்பலைப் படம் பிடித்து அனுப்பிவைத்துள்ளது என்று குமுறும் பெரிய கூட்டமும் உண்டு.

ஆக யாருக்கும் —செவ்வாய் மனித முகபிரமிட் ஒருமாயை —எனும் கற்னறச் சந்திச் விருப்பமேயில்லை.

இது இவ்வாறிருக்க செவ்வாயில் அமானுஷ்ய வகையில் கூட நிகழ்வுகள் சில நடந்திருக்கின்றன. 93ஆம் ஆண்டு 'மார்ஸ் ஒப்ஸர்வர்' எனும் விண்கலம் விமரிசையாக தொழில் நுட்ப முயற்சிகள் வீணாகாமல் தவறின்றி பூமியிலிருந்து கிளம்பி வான வீதியில் தன்பயணம் முடித்து செவ்வாயின் சுற்றுப் பாதையை நெருங்கி விட்டது! சில நிமிடங்களில் உள்நுழைந்து செவ்வாய்க்குள் தரையிறங்க வேண்டியது தான் மிச்சம்,

— தோல்வி.

அறிவியல்காரணங்களின்றி விண்கலம் தோற்றுப் போனது. அதன் இயக்கம் அனைத்தும் செயலிழந்து உயிரே பிரிந்துவிட்டது. பின்னர் விண் வெளியில் நழுவி எங்கோ காணாமல் போனது;

என்ன நடந்தது? ஏன் இது நடந்தது.

இயந்திரங்கள் மூச்சுத்திணறி செயலிழந்து போகுமளவிற்கு செவ்வாயில் ஏதோ விபரீத சக்தி சமயத்தில் இவ்வாறு தன் அபரிமித பலத்தை நமக்கு காட்டுகின்றது என்ற அழுத்தமான முடிவும் எழுந்துள்ளது.

இத்தனைக் கூத்துகளுக்கு நடுவிலும் சளைக்காமல்— பூமி தன்கையில் உண்டிக் கோலேந்தி குறி பார்த்திருக்கும் கனி செவ்வாய். குறி தப்பப் போவதில்லை.

★

# நெருக்கடி...

(XII ஆம் பக்கத் தொடர்)

தன. சமாதான முயற்சிகள் அயர்லாந்தினாலும் பிரிட்டனாலும் கூட்டாக மேற்கொள்ளப்பட்டன.

1994 ஆம்ஆண்டு ஐ.ஆர்.ஏ யும் பின்னர் புரட்டஸ்தாந்து மதவாதிகளும் யுத்த நிறுத்தம் செய்தனர்.

இந்த யுத்த நிறுத்தமே பல மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் மத்தியில் முன் எடுக்கப்பட்டு இந்த ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி சமாதான ஒப்பந்தம் கைச்சாவதற்கு வழி வகுத்தது.

சர்வஜன வாக்கெடுப்பு, தேர்தல் என இரு தடைகளை சமாதான ஒப்பந்தம் தாண்டி விட்டது.

அடுத்து நாடாளுமன்றமும் நாடாளுமன்றம் மூலம் மேற்கொள்ளப்பட உள்ள அத்தகைய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கலாம். ★

# ரஷ்யா...

(III ஆம் பக்கத் தொடர்)

ஆராதனை தொடங்கிற்று'

மனைவி நைனாவுடன் வருகை தந்திருந்த அதிபர் யெல்ட்சின் தமது இறுதி மரியாதையைச் செலுத்திய பிறகு உரையாற்றினார். மிகவும் உணர்ச்சிவசப்பட்டு சொற்கள் வெளி வந்தன.

அவர் பின்வருமாறு கூறினார்.

... இந்த அப்பாவிகளின் உடல் பாகங்களை மண்ணுக்கு அளிப்பதன் மூலம் எமது முன்னோர்கள் புரிந்த பாவங்களை களைந்துவிட முனைவோம்...


... இந்தக் கொடிய செயலைப் புரிந்தவர்களும்..., அதனை கடந்த பல தசாப்தங்களாக நியாயப்படுத்தி வந்தவர்களும் குற்றவாளிகளே... ஏன் நாமெல்லாம் கூட குற்றவாளிகள்தான்... இது நமது வரலாற்றில் மிகவும் வெட்கப்பட வேண்டிய அத்தியாயம் ...... வன்முறை மூலம் வாழ்க்கையை மாற்றி அமைக்க முயல்வது எப்போதும் தோல்வியைத்தான் தரும்... அரசியல் நோக்கங்களைக் காரணம் காட்டி அர்த்தமற்ற இக்கொலைகளை விளக்க முயல்வது தான் என்பதில் நிலவிய சந்தேகம் காரணமாகவே தாம் அதில் கலந்து கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்திருந்தார்.

கம்யூனிஸ்டுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள நாடாளுமன்றம் இறுதிச் சடங்கிற்கு அரச உயர் மட்டக் குழுவை அனுப்புவதை எதிர்த்து வாக்களித்தது.

..."மன்னர் நிக்கலஸ் ஒரு நீண்ட காலம் ஆட்சிசெய்த பேரரசர் அல்லர்; அவர் ஒரு தனிப்பட்ட பிரஜை; அவருக்கு அரச மரியாதைகளுடன் கூடிய நல்லடக்கம் ஏன்?" என்று கேள்வி எழுப்பினார் நாடாளு மன்றத்தின் கீழ்ச் சபையான 'டுமா' வின் (DUMA) கம்யூனிஸ்ட் சபாநாயகர் ஜென்னடி செலஸென்யோவ்.

இறுதிமரியாதைகள், ஆராதனைகளைத் தொடர்ந்து சென் பீற்றர் அன்ட் போல் தேவாலய இடுகாட்டில் 'சார்' மன்னர் இரண்டாவது நிக்கலஸ் குடும்பத்தினர் நல்லடக்கம் செய்யப் பட்டனர்.

சவப் பேழைகள் புதைகுழிகளில் இறக்கப்பட்ட போது அதைப் பார்த்து



'சார்' மன்னர் குடும்பத்தின் எலும்புகள் அடங்கிய பேழைகளை பார்வையிடும் உல்லாசப் பயணிகள்.

நமக்கு நாமே பொய்கூறுவது போன்றதே...

—என்று கூறினார் அதிபர் யெல்ட்சின்.

இந்த வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வெளியே நூற்றுக்குமேற்பட்டவர்கள் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'சார்' குடும்பத்தின் மரணச்சடங்கை எதிர்த்துக் குரல் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களிடையே காணப்பட்ட லொசிவ் ஜெர்லியானி (Losif Gerliani) என்ற ஓவியர் இப்படிக் கூறினார்—

"...நாட்டில்ஆசிரியர்களும் மருத்துவர்களும் சம்பளம் இன்றி இருக்கும் நிலையில் இவர்கள்ஏன் இத்தனை செலவழித்து இந்த வைபவத்தை நடத்துகிறார்கள்?" என்றார்

"தொழிற்சாலைகள்மூடிக்கிடக்கின்றன. மக்கள் தங்கள் சம்பளத்தைப் பெறமுடியாமல் இருக்கிறது. இந்த நிலையில் இந்த மரணச் சடங்கு என்ன தரப்போகிறது?"

—என்றார்முன்னாள் கம்யூனிட் அரசியல்வாதி ஒருவர்

ரஷ்யாவில் அடுத்த நூற்றாண்டிலும் நிலைத்திருக்கப்போகிற 'முரண்பாடுகளையே' இவை எல்லாம் பறைசாற்றின.

இந்த மரணச் சடங்கை நடத்த ஆயத்தங்கள் செய்யப்பட்டு வந்தபோதே தேவாலய மதகுருமாருக்கு மிரட்டல்கள் விடுக்கப்பட்டுவந்தன. அதனால் இந்த வைபவத்துக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும்செய்யப்பட்டிருந்தன.

ஒத்தடொக்ஸ் தேவாலய தலைமை குரு பற்றி ஆர்ச் அலெக்ஸி—II இறுதி ஆராதனையில் கலந்து கொள்ளவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட எலும்புத்தொகுதிகள் சார் குடும்பத்தினுடையது நின்றவர்கள்... "ரஷ்யாவின் இரத்தம் தோய்ந்த வரலாற்றின் முடிவின் ஆரம்பமாக இது அமையட்டும்" என எண்ணிக் கொண்டனர்.

ஆனால்—

எண்பது வருடங்களுக்கு முன்பு இதே 'சார்' மன்னர். அச்சமயம் 'இரத்தக் காட்டேறி' நிக்கலஸ் — போல்ஷிவிக்குகளால் கொன்றுபுதைக்கப்பட்ட போதும் சாதாரண ரஷ்யர்கள் அவ்வாறு தான் எண்ணிக் கொண்டனர்.

ரஷ்யாவின் வரலாற்றில் தவறுகள் எங்கே, எவரால் விடப்பட்டன?

★ ★ ★

'சார்' மன்னர் குடும்பத்தின் இறுதிச் சடங்குகளைத் தொடர்ந்து இன்னமும் கண்டுபிடிக்கப்படாமல் உள்ள நிக்கலஸின் இரு பிள்ளைகளின் எலும்புகளைத் தேடும் பணி ஆரம்பிக்கப்பட இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிக்கலஸ், அவரது மனைவி ஆகியோருடன் அவரது மூன்று புதல்விகளின் எலும்புக் கூடுகளே மீட்கப்பட்டன. காணாமற் போய்விட்ட அவரது ஒரே மகனான அலெக்ஸி, மற்றொரு மகளான மரியா ஆகியோரின் உடல்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் புதிராகவே உள்ளது.

இவர்கள் இருவரும் கொல்லப்பட்டபின் எரிக்கப்பட்டிருக்கலாம் என்றும் —

அப்படியல்ல அவர்கள் வேறு ஓர் இடத்தில் புதைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் —

ஆய்வாளர்களிடையேமாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

★

# சிறிய பூச்சிகளை...

(IX ஆம் பக்கத் தொடர்)

னமயே செய்கிறது. நமக்குத் தொல்லை கொடுக்கும் சிறு பூச்சிகளைத் தின்று அவை பெருகுவதைக் குறைக்கிறது.

பல்லி பகலில் ஓய்ந்திருந்து இரவிலே இரை தேட உலவும். இதன் பற்கள் ஒரேமாதிரியாகவும் கூரான முட்கள் போலவும் இருக்கும். இது சிறு பூச்சிகளை மெல்லாமலே விழுங்கிவிடும்.

பல்லியின் மேல்தோல் மென்மையானது. பல நிறங்களில் இருக்கும். வாழும் இடத்திற்கு ஏற்பவும் பல்லியின் நிறம் அமைந்திருக்கும். மரத்தில் வாழும் பல்லி, மரப்பட்டை நிறத்தில் இருக்கும். அதனால் அப்பல்லியை எளிதில் கண்டுகொள்ள இயலாது.

செங்குத்தான சுவரிலோ, வழவழப்பான பரப்பிலோ பல்லியால் வேகமாகச் செல்லமுடியும். இவ்வாறு செல்வதற்கு ஏற்றபடி இதன் கால்கள் அமைந்திருக்கின்றன. காலில் அடிப்புறத்தில் தகடு போன்ற தோல் மடிப்புக்கள் இருக்கும். பல்லி நடக்கும்போது இம் மடிப்புகளிலுள்ள காற்றுவெளியேறி அங்கு வெற்றிடம் ஏற்படும். அப்போது வெளிக் காற்றின் அழுத்தத்தால் விரல்கள் நன்றாகப் பரப்பின் மீது பற்றிக்கொள்ளும்; பல்லி கீழே விழாது.

பல்லியின் வால் எளிதில் ஒடிந்துவிடும் தன்மையுள்ளது. ஒரு பிராணி பல்லியைப் பிடிக்குமானால், உடனே வாலைப் பறிகொடுத்துவிட்டுத் தப்பிச் செல்லும். புதிய வால் விரைவில் வளரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிகளைக் கடந்து செல்லும் வட அயர்லாந்து சமாதான ஒப்பந்தம்

வட அயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு மூன்று மாதங்கள் கழிந்து விட்டன.

இந்தக் குறுகிய காலத்துக்குள் ஒப்பந்தத்தில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்ட கால அட்டவணைப் படி நிறைவேற்றப்பட்டிருப்பது ஒரு நல்ல அறிகுறியே.

தீர்வுகாண முடியாத எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியும் என்பதை வட அயர்லாந்து ஒப்பந்தம் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தி விட்டிருக்கிறது.

ராஜீய முயற்சிகள், ஏமாற்றங்கள், இழுபறிகள் ஆகியவற்றுக்கு மத்தியில்—

ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு குறிக்கப்பட்ட காலக்கெடு தாண்டிய நிலையில்—

கடந்த ஏப்ரல் 10 ஆம் திகதி கிறிஸ்தவர்களின் புனித நாள்களில் ஒன்றான பெரியவெள்ளி அன்று இந்த ஒப்பந்தம் வடஅயர்லாந்தின் தலைநகரான பெல்பாஸ்ட்டில் உள்ள ஸ்ரோர்மொண்ட் மாளிகையில் (Stormont Castle) வைத்துக் கைச்சாத்திடப்பட்டது.



பெல்பாட்ஸ் நகரில் கத்தோலிக்கர்கள் மத்தியில் ஜெரி அடெம்ஸ் காணப்படுகிறார். சிறுவன் ஒருவன் தமாஷாக அவரது தாடியைப் பிடித்து இழுக்கிறான்.

வட அயர்லாந்தில் கடந்த பல ஆண்டுகாலமாக புரட்டஸ்தாந்து மதத்தினருக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் இருந்து வந்த பிரச்சினைகளுக்கு அதிகாரப் பங்கீடு மூலம் தீர்வுகாண்பதே ஒப்பந்தத்தின் நோக்கம் ஆகும்.

### ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்கள்

ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள பிரதான அம்சங்களில் ஒன்று ஒப்பந்தத்தை வட அயர்லாந்திலும் அயர்லாந்திலும் (ஐரிஷ் குடியரசு) சர்வஜன வாக்கெடுப்புக்கு விட்டு ஒப்பந்தத்துக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவது—

அடுத்தது வட அயர்லாந்தில் தேர்தல் நடத்தி நாடாளுமன்றம் ஒன்றுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்வது—

மூன்றாவது சகல கட்சிகளையும் கொண்ட 10 அமைச்சர்கள் கொண்ட நாடாளுமன்றம் ஒன்றை அமைத்து ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அம்சங்களை படிப்படியாக நிறைவேற்றுவது—

மூன்று தசாப்தகாலமாக வட அயர்லாந்தில் நிலவி வரும் மத நெருக்கடிக்கு இந்த ஒப்பந்தம் தீர்வு காணுமா? அல்லது கம்போடியாவிலும் ஆப்கானிஸ்தானிலும், அங்கோலாவிலும் ஐ. நா. ஏற்பாட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் போன்று நாளடைவில் குழம்பிப் போகுமா? என்ற கேள்வி இன்னும் எழுப்பப்பட்டு வருகிறது.

எனினும் சகோதரர்களான மூன்று கத்தோலிக்க சிறுவர்கள் புரட்டஸ்தாந்து மதவாதிகளின் எரிகுண்டு வீச்சில் பலியானது—

ஜூலை — 13 இல் புரட்டஸ்தாந்து மதத்தினர் நடத்திய வருடாந்த மாபெரும் அணிவகுப்பு — ஆகியவை சமாதான ஒப்பந்தத்துக்கு நெருக்கடியைத் தோற்றுவித்திருந்த போதிலும் ஒப்பந்தம் திட்டமிட்டபடி நடைமுறைப்படுத்தப்பட்டுவருவது நம்பிக்கையை அளிக்கிறது.

ஒப்பந்தம் குழம்பிப்போகும் அளவுக்கு இதுவரை பெரிய அச்சுறுத்தல் எதுவும் இல்லை.

ஒப்பந்தத்தின் பிரகாரம் கடந்த மே மாதம் வட அயர்லாந்திலும் அயர்லாந்திலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு ஒப்பந்தத்துக்கு பொதுமக்களின் அங்கிகாரம் பெறப்பட்டு விட்டது.

வடஅயர்லாந்து நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு முதலமைச்சராக (First Minister) புரட்டஸ்தாந்து மதவாதிகளின் உல்ஸ்ரர் யூனியனிஸ்ட் கட்சியின்(UUP)தலைவர் டேவிட் ரிம்பிள் (David Trimble) அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஒப்பந்தத்தின் அடுத்த கட்டம் செப்ரெம்பர் நடுப்பகுதியில் நிறைவேற்றப்பட வேண்டும். முதலமைச்சர் டேவிட் ரிம்பிள் தலைமையில் பத்துப் பேர் கொண்ட அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர்.

ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் கட்சியான சின்பீன் (Sinn Fein) கட்சியின் தலைவர் ஜெரி அடெம்ஸும் அமைச்சர்களில் ஒருவராக நியமனம் பெற இருக்கிறார். எனினும் ஒப்பந்தத்தின் பிரகாரம் ஐ. ஆர். ஏ. ஆயுதங்களை கையளிக்க முன்வராவிடில் ஜெரி அடெம்ஸை அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று புரட்டஸ்தாந்து மதவாதிகள் கோரி வருகின்றனர்.

ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முழு மூச்சாக நின்று செயற்பட்ட பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் ஆயுதங்களை ஒப்படைக்கும் விவகாரத்தில் மிகவும் கடுமையாக இருந்து வருகிறார்.

### புரட்டஸ்தாந்து மதத்தினர் மத்தியில் பிளவு

ஒப்பந்தத்துக்கு பொது மக்களின் அங்கிகாரத்தைப் பெறுவதற்காக வடஅயர்லாந்தில் நடைபெற்ற வாக்களிப்பில் ஒப்பந்தத்துக்கு ஆதரவாக 71.12 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்தன. ஐரிஷ் குடியரசு என அழைக்கப்படும் அயர்லாந்தில் 94.39 சதவீத வாக்குகள் ஆதரவாக கிடைத்தன.

இந்த ஒப்பந்தம் வடஅயர்லாந்தை அயர்லாந்துக்கு விற்றுவிட்டதாக புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த கடும் போக்காளர்கள் கருதுகின்றனர்.

சர்வஜன வாக்கெடுப்புக்கு முன்னர் வடஅயர்லாந்தில் நடத்தப்பட்ட பிரசாரக் கூட்டங்களில் ஒப்பந்தத்துக்கு புரட்டஸ்தாந்து மக்கள் ஆதரவளிக்கக்கூடாது என்று இவர்கள் கேட்டுக் கொண்டனர். அதில் ஓரளவு அவர்கள் வெற்றியும் கண்டனர். வடஅயர்லாந்தில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் ஒப்பந்தத்துக்கு பேராதரவு கிடையாது போனதுக்கு புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த கடும் போக்காளர்களே காரணம்.

இந்த ஒப்பந்தம் வடஅயர்லாந்தில் உள்ள புரட்டஸ்தாந்து மதவாதக் கட்சிகளைப் பிளவுபடுத்தி விட்டது.

வட அயர்லாந்து நாடாளுமன்றத் தேர்தலில் கூடுதல் ஆசனங்களைப் பெற்றுள்ள உல்ஸ்ரர் யூனியனிஸ்ட் கட்சியும் இதில் ஒன்று.

இந்தக் கட்சியைச் சேர்ந்த பத்து எம். பிக்களில் அறுவர் ஒப்பந்தத்தை எதிர்க்கிறார்கள்.

வட அயர்லாந்து உருவாக்கப்பட்ட நாளில் இருந்து அனுபவித்துவரும் சலுகைகளை புரட்டஸ்தாந்து மக்கள் இழக்கநேரிடலாம் என்று இவர்கள் அஞ்சுகின்றனர்.

ஜனநாயக யூனியனிஸ்ட் கட்சித் தலைவர் வண. பைஸ்லே, ஐக்கிய ராஜ்ய யூனியனிஸ்ட் கட்சித் தலைவர் ரொபேர்ட் மக்காரிட்னி ஆகியோரும் ஒப்பந்தத்துக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

### கத்தோலிக்கர் ஆதரிக்க காரணம் என்ன?

வட அயர்லாந்து அமைச்சர்களும் அயர்லாந்து அமைச்சர்களும் அங்கம் வகிக்கும் சபை ஒன்றை நிறுவுவதற்கு ஒப்பந்தத்தில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவே வட அயர்லாந்தில் உள்ள கத்தோலிக்க சிறுபான்மையினரினதும் அயர்லாந்தில் உள்ள கத்தோலிக்க பெரும்பான்மையினரினதும் ஆதரவை ஒப்பந்தத்துக்கு கூடுதலாகப்பெற்றுக் கொடுத்துள்ளது.

அயர்லாந்து இணைப்புக்கு இது சட்டபூர்வ அங்கிகாரம் அளித்திருப்பதாக கத்தோலிக்கர்கள் கருதுகின்றனர்.

இந்த சபை அயர்லாந்துக்கும் வட அயர்லாந்துக்கும் பொதுவான விடயங்கள் குறித்து—முக்கியமாக விவசாயம், உல்லாசப்பயணம், சுற்றுப்புறச் சூழல் குறித்து முடிவு செய்யும்.

இந்தச் சபை நிறுவுவதற்கு ஒப்பந்தத்தில் அனுமதி அளிக்கப்பட்டது தமக்குப் பெரும் வெற்றி என்று வடஅயர்லாந்தில் உள்ள கத்தோலிக்கர்கள் கருதுகின்றனர்.

அதே சமயம் அயர்லாந்து வடஅயர்லாந்து மீதான தனது பிடியை இந்த ஒப்பந்தம் மூலம் கைவிட்டுள்ளது. வட அயர்லாந்து அயர்லாந்தின் ஒரு பகுதி என்றே வட அயர்லாந்தின் அரசமைப்பு இதுவரை தெரிவித்து வந்தது.

வட அயர்லாந்தில் உள்ள பெரும்பான்மைமக்கள் விரும்பும் வரை வட அயர்லாந்து ஐக்கிய ராஜ்யத்தின் ஒரு அங்கமாக தொடர்ந்து இருக்கலாம் என்பதை இந்த ஒப்பந்தம் மூலம் அயர்லாந்து ஏற்றுக்கொண்டுள்ளது. ஏப்ரல் 10 ஒப்பந்தத்தில் அயர்லாந்து, வட அயர்லாந்து, பிரிட்டிஷ் தலைவர்கள் கூட்டாக கையெழுத்திட்டது ஒரு பிரதான அம்சம் ஆகும்.

### பிரிட்டனின் காலனித்துவ நாடு

ஐரிஸ் குடியரசுஎன அழைக்கப்படும் அயர்லாந்து நீண்டகாலமாக பிரிட்டனின் கீழ் இருந்து வந்தது.



கத்தோலிக்க குடும்பம் ஒன்றைச் சேர்ந்த நான்கு சிறுவர்களைப் படத்தில் காண்க. இவர்களில் மூவர் புரட்டஸ்தாந்து மதவாதிகளின் எரி குண்டு வீச்சுக்குப் பலியாகிவிட்டனர்.

1922 ஆம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து அயர்லாந்து சுதந்திரம் பெற்றுக் கொண்டது. சுதந்திரம் வழங்கப்பட்ட போது அயர்லாந்தின் வட பகுதியில் புரட்டஸ்தாந்து மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஆறு மாகாணங்கள் சுதந்திரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தன.

அயர்லாந்தில் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் தாம் நசுக்கப்படலாம் என்று கருதிய புரட்டஸ்தாந்து மக்கள் பிரிட்டனின் கீழ் தொடர்ந்து இருக்கும் கோரிக்கையை முன்வைத்து கிளர்ச்சி நடத்தமுற்பட்டனர்.

இதனால் அயர்லாந்துக்கு சுதந்திரம் வழங்கிய போது அயர்லாந்தின் வட பகுதியில் புரட்டஸ்தாந்து மக்கள் பெரும்பான்மையாக வாழும் 6 மாகாணங்களை பிரிட்டன் தன்னுடன் வைத்துக் கொண்டது.

இதுவே வட அயர்லாந்து என்ற பெயருடன் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து ஆகியவற்றுடன் ஐக்கிய ராஜ்யத்தின் ஓர் அங்கமாக இணைக்கப்பட்டது.

வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தினர் 60 சதவீதம் கத்தோலிக்க மதத்தினர் 40 சதவீதத்துக்கு சற்றுக் குறைவு. தலை நகர் பெல்பாஸ்டில் நாடாளுமன்றம் ஒன்றும் அமைக்கப்பட்டு செயற்பட்டு வந்தது.

காலஞ் செல்ல செல்ல கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தன.

அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் தாம் நசுக்கப்படுவதாக கத்தோலிக்கர்கள் எண்ணத் தலைப்பட்டனர்.

1960 பிற்பகுதிகளில் கத்தோலிக்கர்களும், புரட்டஸ்தாந்து மதத்தினரும் மோதிக்கொள்ள ஆரம்பித்தனர்.

புரட்டஸ்தாந்து மதத்தினருக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை கத்தோலிக்கர்களின் தீவிரவாத இயக்கமான ஐ.ஆர்.ஏ. ஆரம்பித்தது. ஐ.ஆர். ஏக்கு எதிராகப் போராட புரட்டஸ்தாந்து மதப் பிரிவினர் மத்தியில் இருந்தும் ஆயுதக் குழுக்கள் உருவாகின.

ஐ.ஆர்.ஏ. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்தே இயங்கி வருகிறது. ஆரம்பத்தில் அது அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக போராட்டங்களை நடத்தி வந்தது.

1922 ஆம் ஆண்டு அயர்லாந்து துண்டாடப்பட்டு அதன் ஆறு மாகாணங்கள் வட அயர்லாந்து என்ற பெயருடன் பிரிட்டனுடன் இணைக்கப்பட்ட போது ஐ.ஆர்.ஏ. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. எனினும்பின்னர்வடஅயர்லாந்தில் தனது தாக்குதல்களை ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டது.

மூன்று தசாப்த காலமாக வட அயர்லாந்தில் நடந்த தாக்குதல்களில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

ஐ.ஆர்.ஏ. வட அயர்லாந்தில் மட்டும் அல்ல பிரதான பூமியான இங்கிலாந்திலும் பல குண்டுத் தாக்குதல்கள் நடத்தியது. குண்டுத் தாக்குதல்களில் பலியானோரில் மவுண்ட் பேட்டன் பிரபுவும் ஒருவர்.

இந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு முதல் தடவையாக சமாதானத்துக்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org